# முஸ்லிம் அரசியல் வரலாறு
# விமர்சனங்களும் தெளிவுகளும்

**யூ. எல். ஏ. அமீர்**
B.A (SEU), B.A.Hons (UQU), M.I.S (UKM)

அல்-ஹிக்மா வெளியீட்டகம்
தெஹிவல
2012

## புத்தகம் பற்றிய விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | முஸ்லிம் அரசியல் வரலாறு விமர்சனங்களும் தெளிவுகளும் |
| ஆசிரியர் | : | யூ.எல்.ஏ.அமீர் |
| வெளியீடு | : | அல் ஹிக்மா வெளியீட்டகம் தெஹிவளை |
| அளவு | : | A5 |
| பதிப்பு எண் | : | முதலாம் பதிப்பு |
| பக்கம் | : | 90 |
| ISBN | : | 973-955-54603-0-9 |
| திகதி | : | 2012 |

# முன்னுரை

புகழனைத்தும் இஸ்லாத்தை எமக்களித்தது அருள்புரிந்த ஏக இரட்சகனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தமாகும், ஸலவாத்தும் ஸலாமும் இருளிலிருந்து எம்மை மீட்டெடுக்க தமது அனைத்து சுகபோகங்களையும் ஒதுக்கிவைத்து, தியாகங் களையே தமது ஆடைகளாக அணிந்து கொண்ட நபி முஹம்மத்(ஸல்) அவர்கள், அவர்களது குடும்பத்தினர் நேர்வழி பெற்ற கலீபாக்கள் ஏனைய ஸஹாபாக்கள் அவர்களைத் தொடர்ந்தவர்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

இஸ்லாம் இவ்வுலகில் அறிமுகமான காலம் தொட்டே அதனை வேரறக்களைந்து ஒழித்துவிட வேண்டும் என்பதில் உறுதியுடனும், கடினமாகவும் உழைக்க ஆரம்பித்தனர் மதவெறி கொண்ட தீவிரவாதிகளும், இறைநிராகரிப்பாளர்களும்.

இதன் ஒரு கட்டமாக இறைதூதரை சிறு பராயத்திலேயே கொன்றொழிக்க யூதர்கள் முயன்றனர். அவர்களை அடுத்தாற் போற் காபிர்களும் பலவாறு முயற்சித்து இறுதியில் தோற்றுப் போயினர். ஆயினும் அவர்களது சித்திரவதைகளும் குரூரச்செயல்களும் இஸ்லாத்தின் தூதரையும் இஸ்லாமியத் தியாகிகளையும் வாட்டி வதைக்கவே செய்தன.˙ இவையனைத்திற்கு மத்தியிலும் ஏகத்துவக் கொடியை வானளாவ உயர்த்தியது இறையுதவியும் அன்னவர்களின் தியாகமும் என்றால் அது மிகையல்ல.

“அல்லாஹ்வின் ஒழியை வாயினால் ஊதி அணைத்துவிடலாம். என அவர்கள் நினைக்கிறார்கள், இவ்விணைவைப்பாளர்கள் காழ்ப்புக் கொண்டாலும் கூட அல்லாஹ் அவனது ஒழியை பூரணமாக வெளிப்படுத்தியே தீருவான்”. என்னும் மறை வாக்கிற்கேற்ப, எதிரிகள் பலதரப்பட்ட உத்திகளுடாக தமது இலக்கை அடைந்து கொள்ள இன்றுவைர அரும்பாடுபட்டும் தொடராகத் தோல்வியையே தழுவிய வண்ணமுள்ளனர்.

இஸ்லாத்தினதும் முஸ்லிம் சமுதாயத்தினதும் பரம வைரிகள் நபிகளாரின் காலத்தில் இஸ்லாத்தை ஒழித்தவிடுவதில் தோல்வி கண்டாலும் அன்னவர்களின் மறைவுக்குப் பின்னராவது தமது முயற்சி கைகூடும் என எதிர்பார்த்திருந்தனர். ஆயினும் முஸ்லிம் சமூகம் ஒருமித்து சிறப்பான தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றிணைந்து மேலும் வளர்ச்சியும் ஆள்புல விருத்தியும் ஏற்பட்டபோது ஏமாற்றமடைந்தனர்.

எனினும், ஏதாவதொன்றைச் சாதித்து விடவேண்டுமென அயராது உழைத்த அவர்கள் அஹ்லுல் பைத்தினரை தமது பிரச்சாரப் பொருளாகப் பயன்படுத்தி குழப்பமேற்படுத்த

முயன்றனர். அஹ்லுல் பைத்தினராலேயே வெருட்டியடிக்கப்பட்ட அவர்கள் நாட்டுப்புறப் பகுதிகளை இலக்குவைத்து இஸ்லாத்திற்குப் புதிதானோர், மற்றும் பாமரர்களைத் தம்பக்கம் ஈர்ப்பதில் கவனம் செலுத்தினர் அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர்.

இதன் பின்னணியில் கலீபாத் தெரிவை விமர்சித்தல் இஸ்லாமிய அரசியலிற் குளறுபடிகளை உருவாக்குதல் முதற்கலீபாக்களின் நம்பகத்தன்மையை சந்தேகத்திற்குள்ளாக்கல் அவர்களது கால அரும்பணிகளான ஏகத்துவத்தை மூலம் உலகெங்கும் பாதுகாத்தல், இஸ்லாமிய சாமராஜ் யத்தை அதன் உள், வெளி எதிரிகளின் ஆபத்திலிருந்து ஓங்கச்செய்தல போன்ற நடவடிக்கைகளை போன்றவற்றைக் கொச்சைப்படுத்துவது, அல்குர்ஆன் ஒன்று திரப்பட்டு பாதுகாக்கப்பட்ட நடவடிக்கையை நிராகரித்து அல்குர்ஆனின் நம்பகத் தன்மையை கேள்விக் குள்ளாக்குவது போன்ற பல விமஷமத்தனங்களை இலக்காகக் கொண்டிருந்தனர்.

நயவஞ்சகர்களின் இச்சதி வலையிற் சிக்கித் தவிக்கும் ஷீஆப் பிரிவினர் மேற்கூறப்பட்ட அனைத்து விஷமத்தனங்களையும் நிரூபிக்கப் போதுமான நடைமுறைச் சான்றுகளாகும்.

முதற்கலீபாக்களை விமர்சிக்கவும் நிராகரிக்கவும் புறப்பட்டுள்ள நயவஞ்சகர்களும் அவர்களை பக்தியோடு நேசிக்கும் குறைமதியாளர்களும் நபிகளாரின் மறைவுக்குப் பின்னர் கலீபாக்களது காலப் பகுதியில் ரோம, பாரஸீக காலனித்து வத்திலிருந்து மீட்கப்பட்டு இஸ்லாத்தை ஏற்றவர்கள் என்பது இங்கு குறிப்பிட்த்தக்கதாகும்.

இவ்வாறானவர்கள் இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் நாளிலிருந்தே அதன் அத்தனை கட்டங்களுக்கும் பிரசன்ன மாயிருந்த முன்னணி ஸஹாபாக்களை விமர்சித்து, நிராகரிப்பது மட்டுமல்லாது, அல்குர்ஆனில் சந்தேகம், ஸஹாபாக்களில் விரல் விட்டெண்ணப்படக்கூடிய நான்கைந்து அறிவிப்புக்களைத் தவிர ஏனைய அனைவரது ஹதீதுகளையும் நிராகரித்தல் போன்றவைகளோடு, இற்றைக்கு மிக அண்மிய காலத்தவர்கள் சிலரால் அறிமுகப்படுத்தப்பட்ட செய்திகளையும் கோட்பாடுகளையும் இஸ்லாமாக அறிமுகப்படுத்தி அதனைப் பரப்புவது விந்தையானதும், ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியதுமாகும்.

எனவே, இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டி யுள்ளதோடு, முஸ்லிம் சமூகத்தை இத்தகைய ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டியதும் மிக மிக அவசியமாகும்.

எனவே எம்மீதுள்ள கடமையை ஓரளவேனும் நிறைவேற்றும் நோக்கில் "இஸ்லாமிய வரலாற்றில் சிதைக்கப்பட்ட சில உண்மைகள்" எனும் இச்சிறு நூலில் மிகச் சுருக்கமாகவும் தெளிவான ஆதாரங்களுடனும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத் தக்கது.

இந்நூலிற் சில இடங்களில் ஒரே மூல நூலிலிருந்து பெறப்பட்ட விடயங்கள் அடுத்தடுத்து கூறப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் இறுதியிலேயே ஆதாரம் குறிப்படப்பட்டுள்ளது. எனவே வாசகர்கள் அதனைக் கவனத்திற் கொள்வது பயன்மிக்கதாகும்.

மேலும் இந்நூலுக்கு சிறந்ததோர் அணிந்துரையை வழங்கி பெறுமதி சேர்த்த அஷ்ஷெய்க் எஸ்.எச் ஆதம்பாவா ஆ.யு, மொழிச் செம்மை செய்தளித்த தமிழாசிரியர் யூ.எல். ஆதம்பாவா, மேலும் இம்முயற்சிக்கு பல ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய ஏனைய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

யூ.எல்.ஏ.அமீர்
136/57, கவ்டான வீதி
தெஹிவல
06.06.2012

# அறிமுகம்

அல்லாஹ் ஒருவனே புகளுக்குரியவன், கருணையும் சாந்தியும் சர்வதேச வழிகாட்டி நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்கள் வழிநடந்த நல்லவர்கள் அனைவருக்கும் என்றென்றும் கிடைக்க வேண்டுமென்ற பிரார்த்தனையுடன்.

இஸ்லாமிய அல்லது இஸ்லாமியர் வரலாறு (என்ற பதம்) நபி (ஸல்) அவர்களதும் நேர்வழி பெற்ற ஸஹாபாக்களதும் வாழ்க்கை வரலாற்றி னையும் முன்மாதிரிகளையும் அடியாகக்கொண்டு தோற்றம் பெற்றதா கும், இதனாலேயே இஸ்லாத்தின் எதிரிகள் இவ்வரலாற்றில் சந்தேகங் களையும், நச்சுக் கருத்துக்களையும், தம் சொந்தக் கையாடல் களையும் உள் நுழைப்பதற்காக, தனிநபர்களாகவும், குழுக்களாகவும், நிறுவன ரீதியாகவும் அயராது உழைப்பது மட்டுமல்லாது தங்கள் முழு நேரத்தையுமே அத்தீய பணிக்கு அர்ப்பணிப்பதையும் வரலாறு பூராவும் எம்மால் அவதானிக்க முடிகிறது.

இவர்களிடமிருந்து இவ்வரலாற்றைப் பாதுகாப்பதில் முஸ்லிம் வரலாற் றாய்வாளர்கள் ஓரளவு கவனம் செலுத்துகின்ற போதிலும், தேவையான அளவு முயற்சிகள் மேற்கொள்ளப் படாமையால் உண்மையைத் தெளிய முடியாது பாமரர்கள் முதல் படித்தவர்கள் வரை பல்வேறு குழப்பங்களுக்குள் சிக்கிக் கொள்வதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான அத்துமீறிய நடவடிக்கைகளின் முன்னணி சக்திகளில் முதன்மையானதாக பின்வரும் சக்திகளைக் குறிப்பிட முடியும்:-

இஸ்லாத்திற்கு முற்பட்ட காலம் தொட்டே வான்மறைகளில் உட்செருகல்களையும், முரண்பாடுகளையும் தோற்றுவித்தலில் கைதேர்ந்த யூதர்கள்: உதராணமாக புனித போல், அப்துல்லாஹ் இப்னு ஸப.ஃ. போன்ற யூத நயவஞ்சகர்களையும் அவர்களது அத்து மீறல்கள் பித்தலாட்டங்களைக் குறிப்பிடலாம்.

# அல்-குலபாஉர் றாஷிதூன்கள் காலம்

## முதலாம் கலீபா அபூபக்ர் அஸ்-ஸித்தீக் (றழியல்லாஹ் அன்ஹு)

நபி பெருமானார்(ஸல்) அவர்களின் பின், இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் நிர்வாகத்தை பொறுப்பேற்று அதனைச் செவ்வனே நிறைவேற்றிய வர்களுள் முதலாமவர் என்ற பெருமை அபூபக்ர் ஸித்தீக்(றழி) அவர்களையே சாரும். அவர்கள் அனைத்துத் தகைமைகளுடனும் நபியவர்களின் பூரண திருப்தியுடனுமே கிலாபத் பொறுப்பை ஏற்றிருந்த போதிலும் முஸ்லிம் விரோத சக்திகளின் நச்சுக்கருத்துக்களை வேத வாக்குகளாக நம்பியுள்ள, இஸ்லாத்தில் தெளிவோ, முஸ்லிம்களின் வரலாற்றிற்போதுமான அறிவோ இல்லாத சில குழப்பவாதிகளும் குறைமதியாளர்களும் முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளதோடு அதனை உலகளாவிய ரீதியில் பரப்பவும் உழைக்கின்றனர். அவர்களுள் ஷீஆக்கள் முதன்மையானவர்களாகும்.

இவ்வாறு விஷமிகளால் கையாளப்பட்டுக் கொண்டிருக்கும், இஸ்லாமியர் வரலாற்றிற் கறைபடிக்கும் தகவல்களையும் அவற்றின் பின்னணி சக்திகளையும், உறுதியான வரலாற்று ஒளியில் உரசிப் பார்த்து அவற்றின் உண்மை நிலை எவ்வாறானது என்பதனை இங்கு இனங் காண்போம்

## அபூபக்ர் அஸ்-ஸித்தீக் (றழி) அவர்களின் நியமனத்தில் விஷமிகளால் தோற்றுவிக்கப்பட்டுள்ள ஊகங்கள்

01. இப்னு அப்பாஸ் (றழி) அவர்களால் அறிவிக்கப்படும் ஒரு செய்தியில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: (நபியவர்கள் உயிர்வாழ்ந்த இறுதி) வியாழன் தினத்தில் அவர்களது நோய் கடுமையாகியது, அன்றைய தினம் அவர்கள் ஸஹாபாக்களை விளித்து வாருங்கள், நீங்கள் எனக்குப் பின்னால் ஒரு போதும் குழம்பிக் கொள்ளாமல் இருக்கும் வகையில் ஒரு சாசனத்தை எழுதித்தருகிறேன் என அழைத்தார்கள், அங்கு குழுமியவர்கள் தங்களுக்குள் சர்சைப்பட்டுக் கொண்டதால், வெறுப்படைந்த நபியவர்கள் எந்த நபியின் முன்னிலை யிலும் சர்ச்சைக்கு அவசியமில்லை எனக்கூறி அவர்களை வெளியேறி சென்று விடுமாறு பணித்தார்கள். அதற்கு தோழர்கள் ஏன் நபியவர்கள் வெறுப்படைகிறார்கள், விடயத்தைக் கேட்டுத் தெளிவு பெறுவோம் என்றவாறு மீண்டும் நபியவர்களிடம் சென்றார்கள், பின்னர் பேசிய நபி(ஸல்) அவர்கள் தற்போது நான் விட்டு வைத்திருக்கும் இந்நிலை நீங்கள் எதிர்பார்ப்பதைப் பார்க்கிலும் சிறந்ததாகும் எனக்கூறிவிட்டு மூன்று விடயங்களை அவர்களுக்கு உபதேசம் செய்தார்கள், அதில் முதலாவது: அரேபிய தீபகற்பத்திலிருந்து இணைவைப்பாளர்(முஷ்ரிகு) களை வெளியேற்றுங்கள். இரண்டு: தூதுக் குழுக்களுக்கு நான் எந்தளவுக்கு அனுமதி வழங்கினேனோ அவ்வளவுக்கு அனுமதியுங்கள். என்றுவிட்டு, “மூன்றாவதைக் கூறவில்லை அல்லது கூறினார்கள் நான் மறந்து விட்டேன்” (இது அறிவிப்பாளர் கூற்று).

விஷமிகள் முஸ்லிம் சமூகத்தை குழப்பி வழிகெடுக்கப் பயன்படுத்தும் விடயங்களில் இந்த ஹதீதில் குறிப்பிடப்படாத அந்த மூன்றாவது விடயம் முக்கியமானதாகும். அதனை அவர்கள் எவ்வாறு கற்பனை செய்கின்றனரெனில், நபியவர்கள் அலி (றழி) அவர்களை தனக்கு பின்னால் கலீபாவாக நியமிக்க விரும்பியே ஸஹாபாக்களை ஒன்று கூட்டினார்கள், ஆனால் சில ஸஹாபாக்கள் தமக்குள் சர்ச்சைப்பட்டுக் கொண்டதால் தான் அதனை விட்டுவிட்டார்கள், என தாமும் குழம்பி ஏனையோரையும் குழப்பத்திலாழ்த்த முனைகின்றனர்.

இவர்களது வாதம் எவ்வித அடிப்படையுமற்றது என்பதைப் பின்வருமாறு நிரூபிக்கலாம்:

அ. எவ்வித வெளிச்சான்றுகளும் இன்றி வெறும் கற்பனையை அல்லது ஊகங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கமளிப்பதோ தீர்ப்பு வழங்குவதோ இஸ்லாத்தின் வழிமுறையன்று. அத்துடன் சந்தேகங் களைத் தவிர்த்து உறுதியானவற்றைப் பின்பற்றுவதே ஸுன்னாவின் வழிகாட்டலுமாகும்.

ஆ. அந்த மூன்றாவது விடயத்தில் எவ்வித சான்றுகளுமின்றி அலி (றழி) அவர்களைக் கற்பனை செய்யும் அவர்கள், பல் வேறு சான்று களாலும் உறுதிசெய்யப்படும் அபூபக்கர் (றழி) அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயங்குவது நியாயமற்றதாகும்.

இ. நபியவர்களின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தப் போதுமான நம்ப கமான வேறு அறிவிப்புகள் பல உள்ளன. அவற்றில் அன்னை ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கும் ஒரு ஹதீஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: நபி (ஸல்) அவர்கள் தங்கள் மரணப் பீடிகையின் போது "அபூபக்ருக்குரிய விடயத்தில் (பதவியில்) வேறெவரும் ஆசை கொள்ளவோ போட்டிபோடவோ வாய்பில்லாமற் செய்வதற்காக அபூபக்ரையும் அவரது மகனையும் என்னிடம் அழைத்துவாருங்கள்" என வேண்டிக்கொண்டார்கள். பின்பு "அவ்விடயத்தில் அவருடன் போட்டி போடுவதை" அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான், அதே போல் மு.்.மின்களும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என இருதடவைகள் கூறினார்கள். அவ்வாறே அல்லாஹ்வும் மு.்.மின்களும் நிராகரித்து விட்டனர். என ஆஇஷா (றழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

(ஆதாரம் அஹ்மத்)

இதே தொனியில் இன்னும் சில அறிவிப்புக்கள் ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹுல் முஸ்லிம் போன்ற ஹதீஸ் நூற்களிற் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஈ. மேற்கூறப்பட்ட ஐதீகத்தை வலுப்படுத்தும் வகையில் ஷீஆக்கள், ஸுபிகள், மேலும் தரீக்காக்களைச் சார்ந்த ஒரு சாராரும் அலீ (றழி) அவர்களிடம் நபியவர்களால் எழுதச் செய்யப்பட்ட

வஸிய்யத் ஒன்று இருந்ததாகவும் அது அமுல் செய்யப்படவில்லை எனவும் பிதற்றிக் கொள்கின்றனர். அவர்களது இந்த கற்பனை முற்றிலும் அடிப்படை யற்றது என்பதை நிரூபிக்க பின்வரும் அறிவிப்புச் சான்றாகும்.

அலீ (றழி) அவர்கள் ஒரு தடவை உபதேசம் செய்யும் போது குறிப்பிட்டார்கள்: அல்லாஹ்வுடைய வேதத்திலோ, அல்லது (அவர்களி டமிருந்த எழுதப்பட்ட ஒரு பிரதியைக்காட்டி) இந்த ஏட்டிலே இருப்பதை தவிர எழுத்து மூலமான வேறு ஏதாவது (வஸியத்துக்கள்) எம்மிடம் உள்ளதென யாராவது கூறினால் அவர் பொய்யராகும் எனக்கூறிவிட்டு, நபியவர்கள் கூறிய அந்த ஏட்டில் எழுதப்பட்டிருந்த விடயங்களை அவர்களுக்கு வாசித்துக் காட்டினார்கள். அதில்: மதீனாவின் தௌர், ஈர் ஆகிய இரு இடங்(மலை)களுக்குமிடையிலுள்ள பகுதி புனித பிரதேசமாகும். அதில் எவராவது குழப்பம் விளைவித்தாலோ அல்லது குழப்பக்காரர்களுக்கு அடைக்கலமளித்தாலோ அவன் மீது அல்லாஹ் வினதும் அவனது மலக்குகள், அனைத்து மனிதர்களதும் சாபம் உண்டாகும். அவனது எந்த நல்ல விடயத்தையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்ளவுமாட்டான். மேலும் யார் தனது தந்தையை விடுத்து வேறொருவரைத் தந்தையாக (பிரகடனம் செய்து) வாதிடுகிறானோ அல்லது தனது தலைவரை விடுத்து வேறொருவருடன் இணைந்து கொள்கிறானோ அவன் மீதும் அல்லாஹ்வினதும் அனைத்து மனிதர் களதும் சாபம் ஏற்படும், மறுமையில் அல்லாஹ் அவனது எந்த நல்ல செயற்பாடுகளையும் அங்கீகரிக்க மாட்டான். முஸ்லிம்கள் அனைவரும் உரிமையிற் சமமானவர்கள் அதனைக் காப்பதில் அனைவரும் அக்கறை கொள்ள வேண்டும், எவன் ஒரு முஸ்லிமுக்கு மோசடி செய்கிறானோ அவன் மீது அல்லாஹ்வினதும் அவனது மலக்குகள், அனைத்து மனிதர்களதும் சாபம் உண்டாவதோடு மறுமையில் அல்லாஹ் அவனுடைய எந்த நலவையும் ஏற்றுக்கொள்ளவுமாட்டான் எனக் கூறினார்கள்.

(ஆதாரம் புகாரி, முஸ்லிம்)

மேலும் புகாரி, முஸ்லிமில் பதிவாகியுள்ள அன்னை ஆஇஷா (றழி) அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு செய்தியில் அவர்களிடம் (குழப்பவாதிகளை மேற்கோள் காட்டி), அலி (றழி) அவர்களுக்கு நபியவர்கள் இறுதி வஸிய்யத் செய்ததாக (மரணசாசனம் கூறியதாக) கூறுகின்றார்களே! என வினவப்பட்ட போது எதை வஸிய்யத் செய்தார்கள்? நபியவர்கள் இறுதியாக சிறுநீர் கழிப்பதற்காக ஒரு பாத்திரம் தரும்படி கேட்டார்கள் அதற்கிடையில் அவர்கள் என்மடியில் சாய்ந்தவாறே, என்னையும் அறியாதவாறே அவர்களின் உயிர் பிரிந்து விட்டது. இவ்விதம் இறுதி நிகழ்வு அமைந்திருக்க என்ன விடயத்தில் நபியவர்கள் அலி (றழி) அவர்களுக்கு வஸிய்யத் செய்ததாக வாதிடு கிறார்கள்? எனக் கேட்டார்கள்.

ஆதாரம் (புகாரி, முஸ்லிம்)

2. நபி(ஸல்)அவர்கள் தபூக் போருக்குத் புறப்பட்டுச் செல்லும் போது மதீனாவின் நிர்வாகப் பொறுப்பினை முஹம்மதிப்னு மஸ்லமாஹ் அல் அன்ஸாரி(றழி) அவர்களிடமும், நபியவர்களின் குடும்பத் தேவைகளை கவனிக்க ஆண்கள் ஒருவரும் இல்லாததால் அலீ (றழி) அவர்களை அதற்குப் பொறுப்பாகவும் நியமித்துவிட்டுச் சென்றார்கள்.

இதனை அவதானித்த முனாபிகுகள் அலீ (றழி) அவர்கள் உரோமர் களுக்கெதிராகப் போராடுவதற்குப் பயந்து வேறு சாட்டுக்களைக்கூறி நின்றுவிட்டார் என குத்திப்பேச ஆரம்பித்து விட்டனர். இதனால் கவலையடைந்த அலீ (றழி) அவர்கள் தானும் புறப்பட்டுச் சென்று நபியவர்களையும் படையையும் இடைவழியில் சந்தித்த போது விபரத்தைக் கூறினார்கள், அதற்கு நபியவர்கள் அவருக்கு ஆறுதல் கூறி மீண்டும் மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்கள், அப்போது ஹாறுன் (அலை) அவர்களுக்கும் மூஸா (அலை) அவர்களுக்குமிடையில் இருந்த தொடர்பு போல் எனக்கும் உனக்கும் மத்தியில் இருப்பதில் உமக்கு விருப்பமில்லையா? என்று வினவிவிட்டு, இருப்பினும் எனக்குப் பின்னால் எந்த நபியும் வரப் போவதில்லை எனக் கூறினார்கள்”

(ஆதாரம் புஹாரி)

மேற்கூறப்பட்ட நிகழ்வும் அதனை ஒட்டடிய நபியவர்களின் வாக்கும் அலி(றழி) அவர்கள் தான் கிலாபத்திற்கு முதன்மையானவர் என்பதற்கு எவ்விதத்திலும் சான்றாக அமையாது என்பதைப் பின்வருமாறு நோக்கலாம்:

அ. நபியவர்கள் தனது வார்த்தையின் மூலம் அலீ (றழி) அவர்கள் மீது தனக்குள்ள அன்பையும், மதிப்பையும், உறவினையும் வெளிக்காட்டவே அவ்வாறு கூறினார்கள்.

ஆ. அலி (றழி) அவர்களிடம் தனது குடும்பப் பொறுப்பினை மட்டுமே ஒப்படைத்திருந்தார்களே தவிர முழு முஸ்லிம்களதோ, அல்லது மதீனாவின் நிர்வாகப் பொறுப்பினையோ ஒப்படைத்திருக்கவில்லை. ஏனெனில் மதீனாவுக்கு முஹம்மதிப்னு மஸ்லமாஹ் என்னும் வேறொரு ஸஹாபியையே நியமித்திருந்தமை மேலுள்ள ஹதீஸின் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

இ. ஹாறுன் (அலை) அவர்களுடன் ஒப்பிட்டு இந்நிகழ்வை விளக்கினாலும் உண்மையில் ஹாறூன், மூஸா (அலை) ஆகிய இருவருக்குமிடையில் நபி (ஸல்), அலி (றழி) ஆகிய இருவர் போன்ற ஒன்றுவிட்ட சகோர உறவே காணப்பட்டது, ஆயினும் மூஸா (அலை) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஹாறுன் (அலை) நபியாக்கப் பட்டதுபோல். அலீ (றழி) அவர்கள் நபியாக்கப்படவுமில்லை அதற்கான சாத்தியமுமில்லை என்பதையே நபி (ஸல்) அவர்கள் அங்கு சுட்டிக் காட்டினார்கள்.

"உண்மையில் நபியவர்கள் அவ்வாறான வார்த்தைகளூடாக அன்று அதனை வரையறுக்காது விட்டிருப்பின் இந்தப் பித்தலாட்டக்காரர்கள் அலீ (றழி) அவர்களை நபியாகப் பிரகடனப்படுத்தவும் இந்நிகழ்வைப் பயன்படுத்தத் தவறியிருக்கமாட்டார்கள்."

ஈ. மூஸா (அலை) தூர்ஸீனா மலைக்குச் செல்லும் போது ஹாறூன் (அலை) அவர்களைத் தான் வரும்வரை பொறுப்பாக இருக்கும்படி தற்காலிகமாக நியமித்தார்களே தவிர தனக்குப் பின்னால் அப்பொறுப்பு அவருக்கே சாரும் என்பதாகக்

கருதவில்லை, அத்துடன் நபி மூஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கும் போதே ஹாறூன் (அலை) அவர்கள் வபாத்தாகிவிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

உ. நபியவர்கள் அலீ (றழி) அவர்களை விட்டுச் சென்றது குடும்பத்தின் பிரத்தியோக தேவைகளுக்கேயன்றி முழு மதீனாவுக்கும் அல்ல. அவ்வாறிருந்தால் முனாபிகுகள் அப்படி இகழ்ந்து பேசியிருக்க மாட்டார்கள். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் மதீனாவை விட்டு வெளிச்செல்லும் சந்தர்ப்பங்களிலெல்லாம் யாராவது ஒரு ஸஹாபியை நியமிப்பது அவர்களது வழக்கமாகும். இந்த வகையில் வழிதவறியவர் களின் கற்பனை நியாயமாயிருப்பின் நபியவர்கள் மதீனாவை விட்டும் வெளிச்செல்லும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அலீ(றழி) அவர்களையே நியமிப்பதை வழக்கமாகக்கொண்டிருக்க வேண்டும். மேலும் இது போன்று பல ஸஹாபக்களுக்கு அவர்களது அந்தஸ்த்துக்கேற்ப நபி (ஸல்) அவர்கள் கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

உதாரணமாக: அபூபக்ர் (றழி) அவர்களுக்கு: நான் பூமியில் அல்லாஹ்வைத் தவிர எனக்கு இன்னுமொரு நேசனை எடுத்துக் கொள்வதாக இருந்தால் அபூபக்ரையே எடுத்துக்கொள்வேன் எனக் கூறியிருக்கிறார்கள்.

அதேபோல் உமர்(றழி) அவர்களுக்கு: எனக்குப்பின்னால் ஒரு நபியும் வரப்போவதில்லை, அவ்வாறு வருவது சாத்தியமெனில் அது உமறாகவே இருந்திருக்கும் எனக் கூறியுள்ளார்கள். இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம்.

எனவே மேற்கூறப்பட்ட நிகழ்வு அலீ (றழி) அவர்களுக்கும் நபி(ஸல்) அவர்களுக்குமிடையிலான உறவையும் அன்பையும் வெளிப்படுத்து வதேயன்றி விபரமற்றோர் குழம்பிக்கொள்வது போன்று, கிலாபத் சம்பந்தமான எவ்வித தீர்க்க தரிசனமும் கிடையாது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இஸ்லாத்தின் அடிப்படை ஆதாரங்களான அல்குர்ஆனையும், நபி (ஸல்) அவர்களது ஸுன்னாவையும் புறந்தள்ளி விட்டு வெறுமனே

அவர்களது கற்பனைகள், யூகங்களை அடிப்படையாக கொண்டு குழப்பங்களையும் பித்தலாட்டங்களையும் புரிந்து வரும் ஷீஆக்களும் குறிப்பாக இமாமியாக்கள் அவர்களை அடியொட்டிப் பிறந்த ஏனையேரும் முற்றிலும் முரண்பட்ட பொய்களையே நம்பியும் கூறியும் தாமும்வழிகெட்டு பிறரையும் அதன்பால் அழைத்தவண்ணமுள்ளனர்.

இதனை மையமாகக் கொண்டு தமது கொள்கைகளை வலுப்படுத்து வதற்காக கற்பனைக்கு எட்டியவாறு விடயங்களைத் திரித்து, அலியே இவ்வாறெல்லாம் செய்யாதே, இதற்கு இவ்வளவு வெகுமதி உண்டு, அதற்கு இன்ன தண்டனை கிடைக்கும் என்றெல்லாம் அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவின் பெயரால் பல்வேறு விடயங்களை தொகுத்து வைத்துமுள்ளனர். இவர்களது கூற்றுக்கள் முற்று முழுதாக புனையப் பட்டவை என்பதற்கு, அல்குர்ஆன் அல்ஹதீஸின் உயரிய நடைக்கு மிகத்துாரமான கரடுமுரடான சொற்பிரயோகங்களும் யதார்த்தத்திற்கு முற்றிலும் முரணான கருத்துகளுமே போதிய சான்றுகளாகும்.

இவை தவிர நம்பகமான ஹதீஸ் நூற்களில் பதிவாகியுள்ள தெளிவான பல அறிவிப்புக்கள் குழப்பவாதிகளை அடையாளப்படுத்தி அவர்களின் பொய்ப்பிரச்சாரங்களையும் நிர்மூலமாக்கப் போதுமான சான்றுகளாகும்,

## அவற்றிற் சில பின்வருமாறு:-

## அபூபக்ர் ஸித்தீக் (றழி) அவர்களே முதலாம் கலீபா என்பதற் கான சான்றுகள்.

1. பொருமானார் (ஸல்) அவர்கள் வபாத்தாவற்கு ஐந்துநாட்களுக்கு முன்னர் ஸஹாபாக்களை அழைத்து ஓர்உபதேசம் செய்தார்கள் அதில் முஹாஜிரீன்கள், அன்ஸார்களின் சிறப்புக்களை கூறியபின்னர் மக்களே அல்லாஹ் தன் அடியார்களில் ஒருவருக்கு இவ்வுலகில் தொடர்ந்து வாழ்வதற்கும் அல்லாஹ்விடம் போய்ச்சேர்வத(மரணத்தி) ற்குமிடையில் தேர்வு வழங்கியபோது

அவர் இறையடி சேர்வதையே தேர்ந்தெடுத்துக்கொண்டார் எனக் கூறினார்கள்.

இதனைக் கேட்டமாத்திரத்தில் அபூபக்ர் (றழி) அவர்கள் விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டார்கள், இல்லை யாரஸுலல்லாஹ் எங்களையும், எங்கள் குடும்பங்களையும் சொத்து செல்வங்கள் அத்தனையையும் உங்களுக்காக அர்ப்பணிக்கின்றோம் (நீங்கள் அவ்வாறு செய்து விடாதீர்கள்) எனக் கெஞ்சிக் கேட்டார்கள் இதனைக்கண்ட ஏனைய ஸஹாபாக்கள் விவரம் புரியாது ஆச்சரியத்தால் ஒருவரையொருவர் நோக்கிய வண்ணமிருந்தனர், அப்போது நபியவர்கள் அபூபக்ரே பொறுமையாயிருங்கள் என்று கூறிவிட்டு, மஸ்ஜிதுந் நபவீயை சுட்டிக் காட்டி இதிலுள்ள அனைத்து வாயில்களையும் அடைத்து விடுங்கள் அபூபக்ர்(ரழி) அவர்களின் வீட்டிலிருந்து வருவதைத்தவிர ஏனெனில் அவரைவிட மிகச்சிறந்த ஒரு தோழரை நான் கண்டதில்லை எனக் கூறினார்கள்
.
(ஆதாரம்:பைஹகீ)

இதுபோன்ற அறிவிப்புக்கள் புஹாரி, அஹ்மத் போன்ற நூற்களிலும் பதிவாகியுள்ளன.

## மேற்கூறிய நிகழ்விலிருந்து:-

அ. அபூபக்ர் றழி அவர்களின் விரைவாக விடயங்களைப் புரிந்து கொள்ளும் விவேகமும் திறமையும்,

ஆ. குழப்பவாதிகள் பிதற்றுவது போன்று பதவியாசை கொண்டவரல்ல, மாறாக அனைத்தையும் இழந்தாலும் நபியவர்கள் உயிர்வாழ்வதையே மேலாகக் கருதியமை,

இ. ஸித்தீக் (றழி) அவர்களுக்கு நபியவர்களிடம் காணப்பட்ட அந்தஸ்து,

ஈ. நபியவர்களுக்கு இருந்தது போன்ற விசேட வாயில் அபூபக்ர் றழி அவர்களுக்கு மட்டும் இருக்கவேண்டும் ஏனைய அனைத்தும் மூடப்பட வேண்டும் என்பதனூடாக தனக்குப் பின்னர் சமூகத் தலைமைப் பொறுப்பிற்கான ஏக அங்கீகாரம் போன்ற விடயங்களை உணர முடிகிறது.

2. அப்துல்லாஹிப்னு ஸம்து என்ற ஸஹாபி அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்களின் இறுதிக்காலத்தில் நோய் அதிகமாகி எழுந்து நிற்பதற்கேனும் அவர்களால் முடியாமற் போனவேளை, நான் சில ஸஹாபாக்களுடன் அங்கிருந்தேன், அப்போது தொழுகைக்கான அதான் சொல்லப்பட்டது, அப்போது ஒருவரை தொழுகையை நடாத்தும்படி கூறுமாறு நபியவர்கள் என்னைப் பணித்தார்கள், நான் வெளிச்சென்று பார்த்தபோது அபூபக்ர் (றழி) அவர்கள் அங்கு சமுக மளித்திருக்கவில்லை, உமர் (றழி) அவர்களைக் கண்டதும் அவரைத் தொழுவிக்குமாறு கூறினேன், அதனையேற்ற உமர் (றழி) அவர்கள் தொழுகைக்குத் தயாராகி தக்பீர் சொன்னதைச் செவியுற்ற நபியவர்கள் எங்கே அபூபக்ர்? அவரைத்தவிர வேறெவரையும் அல்லாஹ்வோ, முஸ்லிம்களோ அங்கீகரிக்கமாட்டார்கள் என இருதடவைகள் கூறினார்கள். பின்னர் அபூபக்ர் (றழி) அவர்கள் அத்தொழுகையை நடாத்தினார்கள். விடயத்தைப் புரிந்து கொண்ட உமர் (றழி) அவர்கள் அப்துல்லாஹ்வே உனக்கென்ன நடந்தது, ஏன் இப்படிச் செய்தாய்? நபியவர்கள் தான் சொல்லியிருக்கிறார்கள் என்றெண்ணியல்லவா நான் தொழுவித்தேன், இல்லையெனறால் நான் செய்திருக்கவேமாட்டேனே என அங்கலாய்த்தார்கள். அதற்கு நான், உண்மையில் நபியவர்கள் குறிப்பிட்டுச் சொல்லவில்லைதான். இருப்பினும், அபூபக்ர் அங்கு இல்லாதிருந்தமையால்தான் குழுமியிருந்தவர்களில் மிகத் தகுதியான வராக உங்களைக் கண்டேன் அதனாற்தான் கூறினேன் எனக் கூறியதாகக் குறிப்பிடுகின்றார்கள்.

(ஆதாரம் அஹ்மத்)

## மேற்கூறிய நிகழ்விலிருந்து:

1). நபியவர்கள் பொதுவான பணிப்பை விடுத்திருந்தும், வெளிச்சென்ற ஸஹாபி முதலில் அபூபக்ர் (றழி) அவர்களையே தேடிப்பார்த்து விட்டு அவர் அங்கு இல்லாதிருந்தமையாற்தான் அடுத்து சகல தகுதியும் கொண்டிருந்த உமர் (றழி) அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். மாற்றமாக நபியவர்களின் உறவுக்காரர்கள் என்பதற்காக அலீ, அல்லது ஸுபைர், அல்லது அப்பாஸ் அல்லது இப்னு அப்பாஸ் (றழி) போன்றவர்களை

முற்படுத்தவில்லை. இது ஸஹாபாக்கள் மத்தியில் இருந்த பொதுவான நிலைப்பாட்டினைத் தெளிவுப்படுத்துகின்றது.

2). நபியவர்கள் உமர் (றழி) அவர்கள் விடயத்தில் எத்தனையோ சிறப்புக்களை கூறியிருந்தும் கூட அபூபக்ர்(றழி) உயிருடன் இருக்கும் போது அவரைவிட வேறெவரும் முற்படுத்தப்படக் கூடாது என்பதில் எவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

3). சமூகக்கடமையாகிய கூட்டுத் தொழுகைக்கு தலைமைதாங்கும் பொறுப்பை நபியவர்களுக்கடுத்து அபூபக்ரைத் தவீர்த்து வேறொருவர் ஏற்பதை அல்லாஹ் விரும்பவில்லை என நபியவர்கள் கூறியிருப்பது அபூபக்ர் (றழி) அவர்களின் நியமனம் அல்லாஹ்வினதும் அவனது தூதர், முழு முஸ்லிம்களதும் பூரண விருப்பத்தோடு நடைபெறும் என்பதற்கான முன்னறிவிப்பாகும்.

4). அதேபோல் அபூபக்ர்(றழி) அவர்களுக்கு அடுத்த தகைமையில் உமர் (றழி) அவர்களே காணப்பட்டார்களே தவிர வேறெவரும் அங்கு முற்படுத்தப்படவில்லை.

5). உமர் (றழி) அந்த ஸஹாபியின் நடவடிக்கையையே குறைபட்டுக் கொண்டார்களே தவிர அபூபக்ர் (றழி) அவர்கள் முற்படுத்தப்பட்ட தனையல்ல போன்ற விடயங்களை மிகத் தெளிவாக உணரமுடிகிறது.

மேற்கூறப்பட்ட அறிவிப்புப் போன்ற பல அறிவிப்புகள் ஒருசில சொற் பிரயோகங்கள் வித்தியாங்களுடன் புகாரி, முஸ்லிம், போன்ற நூற்களி லும் பதிவாகியுள்ளன.

அவற்றில் ஓர் அறிவிப்பில் நபியவர்கள் தனது இறுதி நாளில் அப்பாஸ், அலீ (றழி) ஆகிய இருவரது தோள்களையும் பற்றியவாறு தொழுகைக்கு வந்தார்கள், அப்போது தொழுகை நடாத்திக் கொண்டிருந்த அபூபக்ர்(றழி) அவர்கள் நபியவர்களுக்கு விட்டுக் கொடுத்து ஸப்பில் சேரமுற்பட்டார்கள், நபியவர்கள் அதனைத் தடுத்து அவர்களும் உட்கார்ந்து பின்தொடர்ந்து தொழுதார்கள்.

(ஆதாரம்: புகாரி, முஸ்லிம்,

3. ஒரு முறை நபி(ஸல்) அவர்கள், எனக்குப் பின்னால் அடுத்தடுத்து வரும் அபூபக்ர், உமர் ஆகிய இருவரையும் உங்களுக்கு வழிகாட்டி களாக எடுத்துக் கொள்ளுங்கள் எனக்கூறியதாக ஹுதைபதுப்னுல் யமான் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

4. அபூஹுரைரா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் சொல்லத் தாம் கேட்டதாக, அதாவது: நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், நான் கனவொன்று கண்டேன் அதில், நான் ஒரு கிணற்றடியில் நின்றேன் அதில் ஒரு வாளியும் இருந்தது, நான் அக்கிணற்றிலிருந்து போதுமானவரை இறைத்தேன், பின்னர் இப்னு அபீ குஹாபா (அபூபக்ர்) எடுத்து ஒருசில வாளிகள் வரை இறைத்தார், அவர்கள் இறைத்ததில் சற்று சிரமம் காணப்பட்டது - அல்லாஹ் அவருக்கு இலகுபடுத்துவானாக - பின்பு விடப்பட்டது அதனை எடுத்த உமறவர்கள் இறைத்தது போன்று அதிசயிக்கத்தக்க அளவு திறம்படச் செய்த ஒருவரை மனிதர்களில் நான் பார்த்ததில்லை, எனக் கூறினார்கள்.

ஆதாரம் (அஸ்ஸுன்னா)

5. அபூபக்ர் (றழி) அவர்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது: ஒரு நாளைய தினம் நபி (ஸல்) அவர்கள் உங்களில் யாராவது கனவு கண்டீர்களா? எனக்கேட்டார்கள், அதற்கு ஒரு ஸஹாபி நான் கண்டேன், என்று தனது கனவைக் கூறினார், அதாவது வானத்திலிருந்து ஒரு தராசு தொங்கியது அதில் நீங்களும் (நபி), அபூபக்ரும் நிறுக்கப்பட்டீர்கள் அவ்வேளை உங்கள் தட்டு கனத்தது, பின்னர் அபூபக்ரும் உமறும் நிறுக்கப்பட்டனர், அதில் அபூபக்ர் அவர்களின் தட்டு கனத்தது, பின்னர் உமரும், உஸ்மானும் நிறுக்கப்பட்டனர், அதில் உமரின் தட்டு கனத்தது. பின்னர் அத்தராசு உயர்த்தப்பட்டு விட்டது, எனக் கூறினார் இதனைக் கேட்டதும் நபியர்களின் முகத்தில் மாற்றம் (கவலை) தென்பட்டது. பின்னர் சொன்னார்கள் இது நுபுவ்வத்தை அடுத்துள்ள கிலாபத் ஆகும். அதன் பின்னர் அல்லாஹ் நாடியவர்களுக்கு ஆட்சியைக் கொடுப்பான் எனக் கூறினார்கள்.

ஆதாரம் (அபூதாவூத்)

6. காபிர்கள் கூட நபி(ஸல்) அவர்களை அடுத்து தகைமையுள்ளவர் அபூபக்ர், பின்பு உமர் (றழி) என்பதை ஏற்றிருந்தார்கள் என்பதைப் பின்வருமாறு நாம் உறுதி செய்யலாம்:- உஹத் யுத்தத்தின் போது முஸ்லிம்கள் தரப்பில் நிகழ்ந்த ஒரு தவறின் காரணமாக முதலில் அவரகளுக்குக்கிருந்த வெற்றி வாய்ப்பு இறுதியில் காபிர்களுக்கு சாதகமாக முடிவுற்றது. அதனால் கர்வம்கொண்ட காபிர்களின் தளபதி அபூஸுப்யான் (இஸ்ஸலாத்தை ஏற்பதற்கு முன்னர்) ஒரு மேட்டில் ஏறி நின்று கொண்டு முஸ்லிம்களை நோக்கி உங்கள் மத்தியில் முஹம்மத் உயிருடன் இருக்கிறாரா? என உரத்த குரலில் கேட்டார், அதற்கு ஒருவரையும் பதிலளிக்க வேண்டாம் என நபியவர்கள் தடுத்து விட்டார்கள். மீண்டும் மீண்டும் இருதடவைகள் அவர் கேட்டும் பதில் வரவில்லை. அடுத்து, உங்களுக்குள் அபூபக்ர் உயிருடன் உள்ளாரா? என மூன்று தடவைகள் கேட்டார் பதிலளிக்கப்படவில்லை. பின்னர் உங்களுக்குள் உமர் உயிருடன் உள்ளாரா? என மூன்று தடவைகள் கேட்டார் பதிலில்லை உடனே மகிழ்ச்சியோடு அவரது அணியினரை விளித்து, இதோ அம்மூவரதும் ஆபத்திலிருந்து நீங்கள் விடுதலை பெற்று விட்டீர்கள். அதாவது மூவரையும் ஒழித்துக்கட்டி விட்டோம் எனும் பொருள்பட பேசினார். இதனால் ஆத்திரமடைந்த உமர் (றழி) பதிலளிக்க முற்பட்ட போது, நபியவர்கள் அனுமதி வளங்கினார்கள். இவ்வாறு சம்பவம் தொடர்கிறது.

இதிலிருந்து முஸ்லிமல்லாதவர்கள் கூட நபியவர்களுக்கு அடுத்து இஸ்லாமிய சமுதாயத்தை வழி நடாத்தும் தகைமையில் அபூபக்ரும் அடுத்து உமறுமே என்பதனை விளங்கியிருந்தமை புலனாகின்றது.

7. ஒருதடவை ஒரு பெண்மணி நபியவர்களிடம் (தமது பிரச்சினைகளை முறையிட)வந்தார், நபியவர்கள் அவரை வேறொரு சந்தர்ப்பத்தில் வருமாறு கூறினார்கள் அதற்கு அப்பெண்மணி நான் வரும்போது நீங்கள் இல்லாது (மரணித்து) விட்டால் என்ன செய்வது என வினவிய போது, நான் இல்லாவிட்டர்ல் அபூபக்ர் அவர்களை வந்து சந்திக்கலாம் எனக் கூறினார்கள்.

ஆதாரம்: (புகாரி, முஸ்லிம்)

இந்நிகழ்வு நபியவர்களின் மரணப் பிணியின் போது இடம் பெற்றிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

8. ஸகீபது பனீஸாஇதா எனுமிடத்தில் அன்ஸார்கள் கூடியிருந்தவேளை அங்கு சென்ற அபூபக்ர், உமர், அபூஉபைதா (றழி) அவர்கள் குழுமி யிருந்தவர்களுக்கு விளக்கமளிக்கும் போது அபூபக்ர் (றழி) அவர்கள் அன்ஸார்களால் முன்மொழியப்பட்ட ஸ.்.திப்னு உபாதா (றழி) அவர்களை விழித்து: நபியவர்கள் குறைஷிகளே இவ் விடயத்திற்கு (கிலாபத்தைக் குறித்து) உரியவர்கள். நல்லவர்கள் அவர்களில் நல்ல வரைப் பின்பற்றுபவர்கள், கெட்டவர்கள் அவர்களில் கெட்டவரைப் பின்பற்றுபவர்கள் எனக் கூறியபோது நீங்களும் இருந்தீர்களல்லவா? எனக் கேட்டபோது, ஸ.்.து (றழி) அவர்கள் ஆமாம் நீங்கள் கூறியது உண்மையே நீங்கள் தலைவர்கள் நாங்கள் உங்களுக்கு உதவியா ளர்கள் எனக்கூறினார்கள்.

அபூபக்ர் (றழி) அவர்களுக்கும் ஸ.்.திப்னு உபாதா (றழி) அவர்களுக்குமிடையில் முரண்பாடு காணப்பட்டதாகவும் ஸ.்.து (றழி) அவர்கள் கலீபாவுக்கு பைஅத் செய்யவில்லை என்பது போன்றும் சில பதிவுகள் வரலாற்றிற் காணப்படுகின்றன. ஆனால் அவை புனையப் பட்டவையும், அபூமுக்னிப் போன்ற ஷீஆ சிந்தனை கொண்ட வரலாற் றாளர்களால் அறிவிக்கப்பட்டதுமான, பலவீனமான செய்திகளுமாகும் என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

ஷீஆ சிந்தனைகொண்ட, கீழைத்தேயவாதிகளால் அதிகம் மேற்கோள் காட்டப்படும் வரலாற்றாளர்களிற் சிலரை இங்கு குறிப்பிடுவது நன்மை பயக்கலாம் எனக் கருதிகிறேன்.

**அவர்களுக்கு உதாரணமாக :-**

1) அல் மஸூஊதி – (நூல்) முறூஜுத் தஹப் வமஆதினுல் ஜவ்ஹர் ஜவ்ஹர்
2) இப்னு அப்தி றப்பிஹி – (நூல்) அல் இக்துல் பரீத்
3) அல் ய.்.கூபி – (நூல்) தாரீகுல் யெ.்.கூபி
4) அபுல் பறஜுல் அஸ்பஹானி – (நூல்) அல் அஙானி
5) அல் பலாதரீ – (நூல்) புதூஹுல் புல்தான்

போன்றவர்கள் ஷீஆ சிந்தனைக்குச் சாதகமாக திரிவுபட்டவையும், முஸ்லிம்கள் மத்தியில் பிளவுகளுக்கு வித்தாக அமையக் கூடியதுமான பல விடயங்களை தமது நூற்களிற் பதிந்து வைத்துள்ளனர். குறிப்பாக அபூமுக்னிப் போன்றவர்களின் அறிவிப்புக்கள் தபரீ, பிதாயா வந் நிஹாயா போன்ற மிக முக்கியமான நூற்களிற் கூட தவறுதலாக இடம்பெற்றுள்ளன. தற்காலத்தில் அவை மிக நுணுக்கமாக ஆய்வு செய்யப்பட்டு இணங்காட்டப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இஸ்லாத்தின் பெயரால் தோற்றுவிக்கப்பட்ட சிந்தனைப்பிரிவுகளில் ஸஹாபாக்கள் விடயத்தில் குறிப்பாக முதலிரு ஸஹாபாக்கள் விடயத்திலும் அதிமோசமான சிந்தனைகளைக் கொண்டவர்கள் ஷீஆக் களில் இமாமிய்யாக்களாகும். வரலாற்றைப் புரட்டிப்பார்க்கும் போது, அத்தகைய அவர்களது சிந்தனைகளின் அடிப்படைகள் யூதர்களாலும் மஜூஸிகளாலுமே இடப்பட்டவை என்பதை அவதானிக்க முடியும்.

“போல்” என்னும் யூதன் எவ்வாறு கிறிஸ்தவ வேடம் பூண்டு இன்ஜீல் வேதத்தைத் திரிவுபடுத்தி அதனை விக்கிரக வணக்கத்திற்கும் இன்னும் பல கீழ்த்தரமான விடயங்களுக்கும் தூண்டக்கூடிய மதமாக மாற்றி னானோ அவ்வாறே அப்துல்லாஹ் இப்னு ஸப.ஃ. என்னும் யூதன் (அல்லாஹ்வின் சாபம் அவன் மீது உண்டாகட்டும்) நயவஞ்சகனாக இஸ்லாத்தில் நுழைந்து அதனைத் திரிவுபடுத்த முற்பட்டான். அது அவனுக்கு முடியாது போகவே, தனது விஷமப் பிரச்சாரத்தின் மூலம் இஸ்லாத்திற் போதிய அறிவில்லாத பல்லாயிரக் கணக்கானோரை தன்பக்கம் ஈர்ப்பதில் வெற்றி கொண்டான், அதற்கு அவன் பயன் படுத்திய ஆயுதமே முஸ்லிம்கள் மத்தியில் அதிகாரப் போட்டி, வகுப்புவாதம் போன்றவற்றைத் தூண்டுவதாகும். அதன் கருவாக நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் அரசியலில் ஒதுக்கி வைக்கப் பட்டுள்ளனர், அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன, நாம் அவர்கள் மீது உண்மையான அன்பு கொண்டிருப்பின் அதனை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பது மட்டுமல்லாது, படிப்படியாக நபி ஈஸா (அலை) அவர்களை கிறிஸ்தவர்கள் எவ்வாறு

இறை அந்தஸ்துக்கு கற்பனை செய்து வைத்துள்ளனரோ அவ்வாறே அலீ (றழி) அவர்களையும் அறிமுகப்படுத்த முற்பட்டதும் அதனால் அவன் முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து குறிப்பாக கலீபா அலீ (றழி) அவர்களாலேயே வெருட்டியடிக்கப்பட்டமையும் வரலாறு படித்தவர் களுக்குத் தெளிவாகும்.

இங்கு நபியவர்களது குடும்பத்தினருக்கோ, அல்லது ஷீஆக்களால் குறிப்பிட்டுக்கூறப்படும் இமாம்களுக்கோ ஸஹாபாக்கள் விடயத்தில் குறிப்பாக முதற்கலீபாக்கள் விடயத்தில் ஷீஆக்களால் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் போலிக்கருத்துக்களுடன் எவ்வித தொடர்போ, உடன்பாடோ இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறே மேற்கூறப்பட்ட சிந்தனைப்பிரிவினர் அலீ, ஸுபைர், பாதிமா(றழி) போன்ற நபிகளாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அபூபக்ர்(றழி) அவர்களுக்கு பைஅத் செய்யவில்லை எனக்கூறுவதும் முற்றிலும் பொய்யான கூற்றாகும். மாறாக அவர்கள் பைஅத் செய்தது மட்டுமல்ல கலீபாவுடன் மிகவும் நெருக்கமாகவும் கண்ணியமாகவும் நடந்து கொண்டார்கள் என்பதே உண்மையாகும் அவற்றைப் பின் வருமாறு நிரூபிக்க முடியும்.

நபியவர்கள் வபாத்தன தினத்தில் ஸகீபது பனீ ஸாஇதாவில் கூடியிருந்த ஸஹாபாக்கள் அனைவரும் அபூபக்ர் (றழி) அவர்களுக்கு பைஅத் செய்தனர். இரண்டாவது தினம் மஸ்ஜிதுன் நபவீயில் பொது மக்கள் அனைவரதும் பைஅத் இடம் பெற்றது, அங்கு குழுமியிருந்த அனைவரும் பைஅத் செய்தனர். பின்னர் மிம்பரில் இருந்தவாறு அபூபக்ர் (றழி) அவர்கள் கூட்டத்தைப் பார்த்தார்கள் அதில் ஸுபைர் (றழி) இருக்கவில்லை உடனே வரும்படி அழைத்ததும் வந்தார்கள், அவர்களிடம் நபியவர்களின் மாமியின் மகனே! முஸ்லிம்கள் பிளவு படுவதை விரும்புகிறீரா? எனக்கேட்ட போது இல்லை அல்லாஹ்வின் தூதரின் கலீபாவே! என்றவாறு உடனே பைஅத் செய்தார்கள். பின்னர் அலீ (றழி) அவர்களைப் பார்த்தார்கள் காணவில்லை, அவ்வாறே அழைப்பித்து அதே போன்று அவரிடமும் கேட்டபோது இல்லை இல்லை கலீபா அவர்களே! என்றவாறு உடனே பைஅத் செய்தார்.

(ஆதாரம்: பைஹகீ)

இதனை இமாம் முஸ்லிம், இப்னு ஹுஸைமா போன்றவர்களும் உறுதிசெய்துள்ளனர். இதுபோன்ற அறிவிப்புக்கள் புகாரி, அஹ்மத், ஸீரது இப்னு ஹிஷாம் போன்ற நூற்களிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் மூஸா இப்னு உக்பா என்பவர்கள் அப்துர்றஹ்மானிப்து அவ்ப்(றழி) அவர்கள் ஊடாக பதிவு செய்துள்ளார்கள்: அதாவது அவர் உமர் (றழி), ஏனைய முஹாஜிரீன்கள் அனைவருடனும் கூடியிருந்த போது (இவ்வறிவிப்பின் தொனியிலிருந்து) ஸஹாபாக்கள் மத்தியில் ஒரு சிறிய சலசலப்பு ஏற்பட்டது, உடனே அபூபக்ர் (றழி) அவர்கள் எழுந்து போசினார்கள். அதில், அவர்கள்: நான் ஒரு கணப்பொழு தேனும் எனக்கு ஆட்சிப் பொறுப்புக் கிடைக்க வேண்டுமென்று ஆசை வைக்கவுமில்லை. இரகசியமாகவோ, பரகசியமாகவோ அதனை நான் வேண்டியதுமில்லை எனக் கூறினார்கள். அப்போது அலீ, ஸுபைர் (றழி) இருவரும் நாங்கள் ஆலோசனை சபையில் கலக்கவில்லை என்பதால் தான் கோபித்தோமே தவிர அபூபக்ரே (றழி) அதற்கு மிகத் தகுதியானவர், அவர் நபியுடன் குகையில் இருந்தவர், அவரது மதிப்பும், அந்தஸ்தும் நாங்கள் மிக அறிந்தவிடயமே, அதுமட்டுமல்ல நபியவர்கள் உயிரோடு இருக்கும் போதே தொழுகை நடாத்தும் பொறுப்பை அன்னாரிடம் ஒப்படைத்திருந்தார்கள் என ஒருமித்துக் கூறினார்கள்.

**இந்நிகழ்விலிருந்து**

1). அலீ, ஸுபைர் (றழி) போன்ற ஸஹாபாக்கள் அனைவருமே அபூபக்ர் (றழி) அவர்களை கலீபாவாக ஏற்றுக்கெள்வதில் எவ்வித முரண்பாடும் கொண்டிருக்கவில்லை.

2). அவர்கள் அதிருப்தி அடைந்தது மஷுரா சபையில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதனாலேயாகும் என்பன போன்ற விடயங்கள் தெளிவாகின்றன.

அலீ, ஸுபைர் (றழி) போன்றவர்கள் ஸஹாபாக்களுள் முக்கியமான வர்கள் என்றவகையில் மஷுரா சபையிற் கலந்து கொள்ளாததையிட்டு அவர்கள் மனவருத்தம் கொண்டது நியாயமானதேயாகும், ஆயினும் அச்சபை திட்டமிட்டு கூட்டப்பட்டதோ, அல்லது அனைவரையும் கூட்டி ஆலோசனை

செய்யுமளவுக்கு பொருத்தமான சூழலிலோ நடைபெற வில்லை என்பதைப் பின்வருமாறு நோக்கலாம்:

(1). (அன்ஸார்கள் தங்களுக்குள் கூடி நடத்திக்கொண்டிருந்த விவாதம் இஸ்லாமிய அரசை அதன் முளையிலேயே அழித்துவிடும் அபாயம் கொண்டதாக காணப்பட்டது. அன்று பொருத்தமான வேளையில் அபூபக்ர், உமர் (றழி) போன்றவர்கள் சமுகமளிக்காதிருந் திருப்பின் அன்ஸார்கள் அவ்ஸ், ஹஸ்ரஜ் என்று மீண்டும் இரண்டாகப் பிரிந்து, முஹாஜிரீன்கள் மூன்றாவது வேறொரு பிரிவாகப் பிரிந்து நபியவர்கள் அடக்கம் செய்வது கூட நடைபெறாது மதீனாவில் சண்டை நடைபெற்றிருக்கலாம்.

(2). சமூகத்தில் அதி உன்னத பொறுப்புவாய்ந்தவர் மட்டுமல்லாது, அனைவராலும் மதிக்கப்பட்டுவந்த அபூபக்ர் (றழி) அவ்விடயத்தில் தாமதம் காட்டுவது எவ்விதத்திலும் ஏற்புடையதன்றாகும்.

(3). இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில் அனைவரும் ஒன்று சேரும்வரை தாமதிப்பதும் சிரமமான விடயமாகும்.

(4). அலீ, அப்பாஸ், ஸுபைர்(றழி) போன்ற மிக நெருங்கிய உறவினர் களே நபியவர்களை குளிப்பாட்டுவதிலும், அடக்கத்திற்கு தயார் செய்வதிலும் ஈடுபட்டிருந்தமையால் அதனை நிறுத்திவிட்டு அவர்களை யும் அழைத்துச் செல்வது பொருத்தமற்றது, மட்டுமல்லாது அங்கு நடைபெற்ற நிகழ்வு தாமதம் காட்டக்கூடிய அளவு சாதாரணமான விடயமல்ல. அத்துடன் மேலும் பலர் இணைந்ததாக பெரும் கூட்ட மொன்று அங்கு சென்றிருப்பின் நிலைமை வேறு விதத்தில் திசை திரும்பியிருக்கவும் சாத்தியமிருக்கிறது.

(5). அடுத்து வந்த சமூகங்களும், இஸ்லாத்தின் விரோதிகளும் ஸஹாபாக்களை தரக்குறைவாக பேசுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

(6). இவை மட்டுமல்லாது அனைவரும் அங்கு கூடியிருந்ததால் முஹாஜிரீன்களைக் கூடப் பிரித்தாழ இப்லீஸ் முற்பட்டிருக்கலாம். ஆக மொத்தத்தில் அல்லாஹ்வின் விருப்பப்படி நடந்து முடிந்த ஒரு விடயத்தில் நாம் மாறுபட்ட கருத்துக்கொள்வது, எவ்வகையிலும் ஏற்புடையதன்றாகும்.

மேலும் அலீ (றழி) அவர்களும் கலீபாவும் மிக நெருக்கமான உறவுடனேயே இருந்து வந்துள்ளனர் என்பதனைப் பின்வருமாறு நிரூபிக்க முடியும்:-

- நபி(ஸல்) அவர்கள் வபாத்தாகி சில தினங்களின் பின்னர் ஒரு நாள் அபூபக்ர் (றழி) அவர்களும் அலீ (றழி) அவர்களும் அஸர் தொழுகையை முடித்து விட்டு மஸ்ஜிதை விட்டு வெளியாகி வந்துகொண்டிருந்த போது ஹஸன் (றழி) அவர்கள் சிறுவர்களோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள், அபூபக்ர் (றழி) அவர்கள் அவரைப் பிடித்துத் தூக்கியவாறு அன்போடு நபியைப் போன்றே இருக்கிறாரே! அலியைப் போன்றில்லையே எனக் கூறினார்கள். அவ்வேளை அலீ (றழி) அவர்கள் சிரித்தவாறு பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள

(ஆதாரம்:புகாரி)

- நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகி ஓரிரு மாதங்களுக்குள் முர்தத்களுக்கு பாடம் புகட்டுவதற்காக கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் வாளை உருவிக்கொண்டு ஸஹாபாக்களுடன் 'தில்கஸ்ஸா' எனும் இடத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்போது கலீபாவின் ஒட்டகத்தை அலீ (றழி) அவர்களே ஓட்டிச்சென்றார்கள். இடையில் அலீ (றழி) அவர்கள் உட்பட்ட முக்கிய பல ஸஹாபாக்கள் கலீபாவை மதீனாவுக்குத் திரும்புமாறும், வீரமிக்க பல ஸஹாபாக்கள் இருப்ப தால், அவர்களது தலைமையில் படைகளை அனுப்பலாம் எனவும் பிடிவாதமாய் வேண்டிக் கொண்டிருந்தமைக்கு ஒருவாறு இணங்கியே கலீபா அவர்கள் பதினொரு ஸஹாபாக்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் தலைமையில் படைகளை அனுப்பிவிட்டுத் திரும்பினார்கள்.

**குறிப்பு:- மேற்கூறப்பட்ட இரு நிகழ்வுகளிலிருந்தும் :-**

(1). அலீ (றழி) அவர்கள் எவ்வித முரண்பாடுகளுமின்றி கலீபாவின் பின்னாலேயே தொழுது வந்திருக்கிறார்கள்,

(2). கலீபாவுடன் ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து வந்திருக் கிறார்கள்

(3). கலீபா அவர்களுடன் மிக அன்யோன்யமாகப் பழகியிருக்கி றார்கள்,

(4). கலீபா அவர்களுடன் யுத்தங்களுக்கும் புறப்பட்டுச் சென்றிருக்கி றார்கள், இது போன்றவற்றிலிருந்து அவர்கள் கலீபாவுடன் எவ்வித முரண்பாடும் கொண்டிருக்கவில்லை மாறாக மிகவிசுவாச மாகவே நடந்து வந்துள்ளார்கள் என்பது புலனாகின்றது.

## பாதிமா (றழி) அவர்களுக்கும் அபூபக்ர் (றழி) அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் :-

அன்னை ஆஇஷா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி பெருமானார் (ஸல்) அவர்கள் வபாத்தான பின்னர் பாதிமா (றழி) அவர்கள் நபி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் உத்தரவின்படி பதக், கைபர் ஆகிய இரு இடங்களிலுமிருந்து ஓதுக்கிக் கொடுக்கப் பட்டிருந்த பகுதியைத் தமது வாரிசுச் சொத்தாகத் தரும்படி கலீபாவிடம் கேட்டார்கள். அதற்கு கலீபா அவர்கள், நபி (ஸல்) அவர்கள் கூறிய: “நபிமார்கள் விட்டுச் சென்ற பொருட்கள் சதக்காவாகக் கருதப்படும், அவை வாரிசுகளுக்குக் கொடுக்கப்படுவ தில்லை'' என்ற ஹதீதைக் கூறி, நபிகளாருக்கு மாற்றம் செய்ய நான் விரும்பவில்லை என மறுத்து விட்டார்கள். இதனால் கோபமுற்ற பாதிமா (றழி) அவர்கள் தான் மரணிக்கும் வரை கலீபாவுடன் பேசுவதை நிறுத்திவிட்டார்கள்
. (ஆதாரம் புகாரி)

ஆமிறுஸ்ஷுஅபீ என்ற ஸஹாபியவர்கள் அலீ (றழி) அவர்கள் கூறத் தாம் கேட்டதாக அறிவிக்கிறார்கள் : “ பாதிமா (றழி) அவர்கள் நோய் வாய்ப்பட்ட போது அபூபக்ர் (றழி) அவர்கள் வந்து அவர்களைப் பார்க்க அனுமதி கேட்டார்கள், அதற்கு அலீ (றழி) அவர்கள் பாதிமா (றழி) அவர்களிடம் வந்து விடயத்தைக் கூறவும், அவர்கள் தான் அனுமதிப்பது உங்களுக்கு விருப்பமா? எனக் கேட்டார்கள், அதற்கு அலீ (றழி) ஆம் எனப் பதிலளித்தார்கள், அதன் பின்னர் அனுமதி பெற்ற கலீபா அவர்கள், பாதிமா (றழி) அவர்களிடம் சென்று: அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் எனது பிறந்த மண், சொத்துக்கள், குடும்பம், உறவினர்கள் அனைவரையும் விட்டு விட்டு மதீனா வந்தது அல்லாஹ்வினதும், அவனது தூதர், அவர்களது குடும்பத்தினரோடும் கொண்ட விசுவாசத்தினாலேயன்றி வேறில்லை

என நடந்தவற்றைக்கூறி ஆறுதல்படுத்தினார்கள். இறுதியில் பாதிமா (றழி) அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள் என அறிவிக்கி றார்கள்.

(ஆதாரம் பைஹகீ)

மேற்கூறப்பட்ட இரு ஹதீதுகளும் ஒன்றுக்கொன்று முரண்படுவது போன்று காணப்பட்டாலும், உண்மையில் அவை முரண்படவில்லை என்பதைப் பின்வருமாறு நோக்கலாம்.

(1). முதலாவது ஹதீஸ் ஆஇஷா(றழி) அவர்களூடாகவும் இரண்டாவது ஹதீஸ் அலீ (றழி) அவர்கள் ஊடாகவும் வந்துள்ளமையால் முதல் ஹதீஸில் ஆஇஷா (றழி) அவர்கள் தமக்கு எட்டியவரை தெரிந்தி ருந்ததைக் கூறியுள்ளார்கள். பாதிமா (றழி) அவர்கள் அலீ (றழி) அவர்களது மனைவி என்ற வகையில் இறுதி வரை என்ன நடந்தது என்பதனை அறியும் வாய்ப்பு அவருக்கே அதிகமாகும், ஆகையால் அலீ (றழி) அவர்களது வீட்டில் நடந்த இவ்விடயம் அன்னை ஆஇஷா (றழி) அவர்களுக்கு தெரியாமலிருந்திருக்க வாய்ப்புண்டு.

(2). பாதிமா (றழி) அவர்களும் எல்லாப் பெண்களையும் போன்று ஒரு பெண்ணே என்பதால் இயல்பான ஒரு வெறுப்பும் அதன் மீதான பிடிவாதமும் ஏற்பட்டிருக்கலாம், பின்னர் தெளிவுபடுத்தப்பட்டதும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் (அல்லாஹ் அவர்களுக்கு பன் மடங்கு அருள் செய்ய வேண்டும்) ஏனெனில் இந்த சொத்து விவகாரத் தில் முரண்பாடு கொண்டதில் அப்பாஸ்(றழி) அவர்களும் ஒருவராகும், அவர் ஹதீஸ் தெளிவுபடுத்தப்பட்டதுமே அதனை ஏற்றுக் கொண்டது டன் கலீபாவுடனான உறவையும் தொடர்ந்து பேணி வந்தார்.

(3). நபி(ஸல்) அவர்கள் உயில் வாழும் போதே வறுமையில் வாடிய அவர்களது குடும்பம் அவர்களது மரணத்தின் பின் மேலும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கலாம், ஏனெனில் இந்த ஹதீஸ் ஸித்தீக் (றழி) அவர்களால் தெரிவிக்கப்படுமுன்னர் நபியவர் களின் மனைவிமார்கள் கூட வாரிசுரிமையை எதிர்பார்த்திருந்தனர், எனவே அவ்வாறான பொருளாதார நெருக்கடிகள் அவர்களை அந்நிலைக்கு இட்டுச் சென்றிருக்கலாம்.

(4). அபூபக்ர் ஸித்தீக் (றழி) அவர்கள் தூய உள்ளம் கொண்டவர். அவர் அதனை மறுத்தது நபியவர்கள் மீதும் அவர்களது குடும்பம் மீதும் கொண்ட உண்மையான அன்பினாலேயன்றி வேறில்லை. அது மட்டுமல்லாது பைத்துல் மாலுக்கு நிதிகள் சேரும் போதெல்லாம் விசேடமாக நபியவர்களின் குடும்பத்தினரைக் கவனித்துவந்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தந்தையின் பிரிவு, வறுமையின் தாக்கம், உடல் நலக்குறைவு போன்ற பல அசௌகரியங்களுக்குட்பட்ட அன்னை பாதிமா (றழி) அவர்கள் நாளடைவில் நோய்வாய்ப்பட்டு பலவீனமுற்றிருந்தமையாலும், அல்லாஹ்வின் தூதரின் சந்ததியில் எஞ்சியிருந்த ஒரேயொருவர் என்ற காரணத்தினாலும் அவர்களோடு மிக்க பரிவுடன் நடந்து கொண்ட அலீ (றழி) அவர்கள், எந்த விடயத்திலும் அவரைக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை அவரது திருப்திக்கேற்பவே நடந்து கொண்ட அதே வேளை கலீபாவுடனான உறவிலும் எவ்வித இடைவெளியும் விட்டு வைக்கவில்லை, இந்நிலையில் சுமார் ஆறு மாதங்களுக்குள் பாதிமா (றழி) அவர்கள் இறையடி சேர்ந்து விட்டார்கள்.

அன்றைய சமூகம் கலீபாவின் மீது முழுமையான பற்றுக் கொண்டிருந்ததால் கலீபாவுக்கும் பாதிமா (றழி) அவர்களுக்கு மிடையில் ஏற்பட்ட இச்சிறுநிகழ்வு காலப்போக்கில் மக்கள் மத்தியில் நபியவர்களின் குடும்பத்தினர் மீது அதிருப்தியை ஏற்படுத்தி வித்தியாச மான கண்ணோட்டத்தில் அவர்கள் நோக்கப்படக்கூடாது என்பதற்காக வும், இந்த கசப்பான நிகழ்வுக்குப் பரிகாரம் காண வேண்டும் என்பதற் காகவும் அலீ (றழி) அவர்கள் கலீபாவுக்கான தனது பைஅத்தை மீண்டும் உறுதிப்படுத்திக் காட்டினார்களேயன்றி விடயம் புரியாதவர் கள் குழப்பிக்கொள்வது போன்று புதிதாக பைஅத் செய்து கொள்ள வில்லை என்பதே உண்மையாகும்.

## நபி(ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் கலீபாவாக எவரையும் நியமித்திருக்கவில்லை என்பதற்கான சான்றுகள்:-

1. இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : உமர் (றழி) அவர்கள் கத்தியால் குத்தப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்தபோது, அமீருல் மு.்.மினீன் அவர்களே! உங்களுக்குப் பின்னால் ஒரு பிரதிநிதியை (தலைவரை) நியமிப்பதில்லையா? எனக் கேட்கப்பட்ட போது: நான் அவ்வாறு ஒருவரை நியமிப்பதானாலும் என்னை விடசிறந்த ஒருவர் நியமித்துச் சென்ற வழிமுறை இருக்கிறது, - அதாவது அபூபக்கர் (றழி) – அவ்வாறு நியமிக்காது விடுவதானாலும் என்னைவிடச் சிறந்த ஒருவர் நியமிக்காது விட்டுச் சென்ற வழிமுறை இருக்கிறது –அதாவது நபி (ஸல்) அவர்கள் - எனக் கூறினார்கள். தொடந்து இப்னு உமர் (றழி) அவர்கள் கூறுகிறார்கள்: உமர் (றழி) அவர்கள் பெருமானாரை இறுதியாகக் குறிப்பிட்டதுமே, அவர் யாரையும் குறிப்பிட்டு நியமிக்கமாட்டார் என்பதை உணர்ந்து கொண்டேன் எனக் கூறுகிறார்கள்.

(ஆதாரம்: புகாரி)

2. ஜமல் யுத்த தினத்தில் அலீ(றழி) அவர்கள் மக்கள் முன் உரை நிகழ்த்திய போது: “மனிதர்களே! றஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் மரணிக்கும் போது கிலாபத் சம்பந்தமான எந்தக்குறிப்பை(உயிலை)யும் விட்டுச்செல்லவில்லை, நாங்களாவே அபூபக்ரை தகுதி கண்டு நியமித்தோம், அவரும் சீராக நடந்து அவரது பொறுப்பையும் சரிவரச் செய்து இறையடி சேர்ந்துவிட்டார், பின்னர் அபூபக்ர் (றழி), உமரை தனக்குப் பின்னால் நியமிப்பதை சரியெனக் கண்டு நியமித்து விட்டுச் சென்றார், உமறும் சீராக நடந்து தனது பணியையும் மிக்க சிறப்பாக நிறைவேற்றி விட்டு அவர் வழி சென்றுவிட்டார்” எனத் தொடர்ந்து பேசிமுடித்தார்கள்

. (ஆதாரம்: பைஹகீ)

3. அலீ (றழி) அவர்களிடம் உங்களுக்குப் பின்னால் ஒருவரையும் நியமிப்பதில்லையா? என வினவிப்பட்ட போது: றஸுல் (ஸல்) அவர்கள் தனக்குப் பின் யாரையும் நியமித்து விட்டுச் செல்லவில்லை அவ்வாறு செய்திருந்தால் நானும் நியமிப்பேன். எனினும் அல்லாஹ் மக்களுக்கு நன்மையை நாடினால் எவ்வாறு

அவனது தூதருக்குப் பின்னால் அங்கிருந்தவர்களில் மிகச்சிறந்தவரின் தலைமையின் கீழ் அவர்களை ஒன்று சேர்த்தானோ அவ்வாறு எனக்குப் பின்னாலுள்ளவர் களில் மிகச்சிறந்த ஒருவரின் கீழ் அவர்களை ஒன்றிணைப்பான் எனக் கூறினார்கள்.

(ஆதாரம்: பைஹகீ)

4. புகாரி, முஸ்லிமில் பதிவாகியுள்ளது: இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நபி(ஸல்) அவர்களுக்கு அந்த ஒப்புதலை எழுத முடியாமற் போனது முழுக்க முழுக்க துரதிஷ்டமாகும் எனக் றினார்கள், அதாவது ஓர் ஒப்புதலை எழுதிக் கொடுப்பதற்காக ஸஹாபாக்களை நபியவர்கள் அழைத்தபோது அவர்கள் தங்களுக்குள் கருத்துப் பரிமாறிக் கொண்டு சத்தமெழுப்பிய வண்ணமிருநதனர், அதனால் வெறுப்புற்ற நபியவரகள் (என்னைவிட்டும்) அப்புறப்படுங்கள். நான் தற்போது விட்டிருக்கும் நிலை நீங்கள் என்னிடம் எதிர்பார்ப்பதை விடச் சிறந்தது எனக் கூறிவிட்டு பின்னர் “அல்லாஹ்வும் மு.ஃ.மீன்களும் அபூபக்ரை விடுத்து வேறெவரையும் ஏற்கப் போவதில்லை” எனக் கூறினார்கள்.

(ஆதாரம் : புகாரி)

மேற்கூறப்பட்ட ஆதாரங்கள், இவைபோன்ற இன்னும் பல ஆதாரங்களினூடே (விரிவஞ்சித் தவிர்க்கப்பட்டுள்ளன) நபி (ஸல்) அவர்கள் தனக்கு பின்னால் யார் இந்த சமூகத்தை வழிநடாத்த வேண்டும் என்பதை நேரடி வார்த்தையிலோ, அல்லது எழுத்து மூலமோ தெரிவிக்கவில்லை. ஆனால் அபூபக்ர் (றழி) அவர்களே தகுதியானவர் என்பதை அவர்களது செயல்கள் மூலமாகவும், மறைமுகமான வார்த்தைப் பிரயோகங்கள் மூலமாகவும் தெளிவு படுத்திவிட்டே சென்றுள்ளார்கள்.

குழப்பக்காரர்கள் கற்பனை செய்வது போன்று அலீ (றழி) அவர்களையோ அல்லது அவர்களது குடும்பத்தினரையோ, சுட்டிக் காட்டக்கூடிய ஓர் அசைவு கூட நபியவர்களிடமிருந்து வெளிப்பட்டிருக்க வில்லை என்பது மிகத் தெளிவானதாகும்.

அனைத்திற்கும் மேலாக அலீ (றழி), இப்னு அப்பாஸ்(றழி) போன்றவர்களே அபூபக்ர் (றழி) அவர்களை அங்கீகரித்தும் போற்றிப் புகழ்ந்ததும் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளமையும், கலீபாவுடன்

இடையறாத தொடர்பு கொண்டிருந்தமையும் மேற்கூறப்பட்ட சான்றுகள் மூலம் திட்டவட்டமாக நிரூபிக்கப்படுகின்றன. இதுவே அல்லாஹ் வினதும் அவனது தூதரினதும் அனைத்து மு..மின்களதும் விருப்பமாக வும் இருந்துள்ளது.

மேலும் நபி (ஸல்) அவர்களின் நடவடிக்கைகள், அவர்களது வார்த்தைகளின் அடிப்படையில் ஸஹாபாக்களால் மேற்கொள்ளப்பட்ட இஜ்மா. எனும் ஏகோபித்த முடிவே அபூபக்ர்(றழி) அவர்களின் தெரி வாகும், எனவே இஜ்மாஉஸ்ஸஹாபா (ஸஹாபாக்களின் ஏகோபித்த முடிவு) நபியவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆதாரங்களுள் ஒன்றாகக் காணப்படுவதால் அபூபக்ர் (றழி) அவர்களின் தேரிவு முற்று முழுதாக ஷரீஆவின் அடிப்படையில் நிகழ்ந்ததேயன்றி வேறில்லை.

இத்தனை தெளிவான சான்றுகள் இருக்கத்தக்க ஷீஆக்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் மாற்றுக்கருத்துக் கொண்டிருப்பது வேடிக்கையானதும், நியாயமற்றதுமாகும். எனவே அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழிகாட்டப் பிரார்த்திப்போம்.

முதலாம் கலீபா அபூபக்ர் (றழி) அவர்களது தனிப்பட்ட சிறப்புக்கள் பற்றியோ, இஸ்லாமிய சாம்ராஜ்யத்திற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் பற்றியோ எழுதுவதானால் மிக மிக நீளமாக எழுத வேண்டியேற்படும், ஆனால் நமது இவ்வாய்வின் நோக்கம் வரலாற்றில் அன்று முதல் இன்று வரை சில சில்லறைகளால் தோற்று விக்கப்பட்டும் தூபமிடப்பட்டும் வரும் அபாண்டங்கள் இஸ்லாமிய வரலாற்றிற் போதிய அறிவில்லாதவர்களால் நமது பிரதேசங்களிலும் பரப்பப்படும் அபாயம் காணப்படுகின்றது. எனவே அவற்றிலிருந்து சமுதாயத்தைப் பாதுகாக்கும் நோக்கிலேயே முக்கியமான சர்ச்சைக் குரிய பகுதிகள் மட்டும் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன என்பதைக் கருத்திற்கொள்க.

# இரண்டாம் கலீபா

## உமர் இப்னுல் கத்தாப் (றழியல்லாஹு அன்ஹு)

முஸ்லிம்கள் வரலாற்றில் இரண்டாம் கலீபா உமர்(றழி) அவர்களது பாத்திரம் விசேடமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும், அன்னாரது விடயத்திலும், அவரது நியமனம், அரசியல் வாழ்வு போன்றவற்றிலும் மிக நுட்பமாக திட்டமிடப்பட்டதும், நியாயமற்றதுமான பல்வேறு குற்றச்சாட்டுக்களும், தவறான கருத்துக்களும் புகுத்தப் பட்டுள்ளதுடன் விஷமப்பிரச்சாரங்களும் மேற்கொள்ளப் படுகின்றன. அவற்றின் யதார்த்தத்தினை அடையாளங்காட்டி உண்மையைத் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

கலீபா உமர்(ரழி) அவர்களின் தெரிவைப் பொறுத்தவரை அபூபக்ர்(றழி) அவர்களது விடயத்திற் கூறப்பட்ட சான்றுகளே போதுமானது, இருப்பினும் வழி தவறியவர்கள் இருவரையும் சேர்த்தே தகாத முறையில் விமர்சிப்பதோடு, அவ்விருவரும் அலீ (றழி) அவர்களின் உரிமையைப் பறித்தவர்கள், அநியாயக்காரர்கள், இஸ்லாத்தில் அவர் களுக்கு எந்த இடமுமில்லை எம்மிடம் மக்கா, மதீனாவின் நிர்வாகம் கிடைக்கப் பெறுமானால் நபியவர்களின் அருகாமையிற் புதைக்கப்பட்டுள்ள இரு பிணங்களையும் (அபூபக்ர், உமர்) தோண்டிவீசுவதே முதற்பணியாகும் என்றெல்லாம்

அசிங்கமான, தகாத வார்த்தைகளால் திட்டு வதும் அவ்விரு புனிதர்களது கப்றுகளை நோக்கிக் காறி உமிழ்வது போன்ற அற்பமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே இவ்வாறானவர்களின் விஷமத்தனமான பிரச்சாரங் களின் போது நம்மவர்கள் விடயதானம் தெளிவின்றி அவர்கள் பக்கம் ஈர்க்கப்பட்டு நஷ்டவாளர்களாக மாறக் கூடாது என்பதற்காக வரலாறு இன்றுவரை காணாத ஆற்றல் மிக்க கலீபா உமர் (றழி) அவர்கள் பற்றிய ஒரு சில முக்கிய விடயங்கள் இங்கு எடுத்தெழுதப்படுகின்றன.

## உமர் (றழி) அவர்கள் பற்றிய சிறப்புச் செய்திகள்:-

1. அபூஹுரைரா (றழி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு முறை நபி(ஸல்) அவர்களுடன் நாங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தோம் அப்போது அவர்கள் கூறினார்கள்: நான் தூங்கிக்கொண்டிருக்கும் போது சுவர்க்கத்தில் இருப்பது போன்று ஒரு கனவு கண்டேன், அவ்வேளை ஒரு பெண் ஒரு மாளிகையின் அருகில் வுழூஉ செய்து கொண்டிருந்தார், நான் அம்மாளிகையைக் காட்டி அது யாருடையது எனக்கேட்டபோது அது உமறுக்குரியது எனக்கூறினார், உடனே உமருடைய உரோஷம் எனது நினைவுக்கு வந்ததும் பின் நோக்கி வந்துவிட்டேன் என்றார்கள். இதனைக்கேட்ட உமறவர்கள் அல்லாஹ்வின் தூதரே உங்கள் மீதுமா நான் கோபிப்பது எனக்கேட்டவாறு அழுதுவிட்டார்கள்

(ஆதாரம்: பிதாயா வந்நிஹாயா)

2. அபூமூஸா(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் நபியவர்களுடன் மதீனாவின் ஒரு தோட்டத்தில் இருந்து கொண்டிருந்தேன், அப்போது ஒருவர் வந்து கதவைத் திறக்கும்படி கேட்டார், அதற்கு நபி(ஸல்) அவர்கள் கதவைத் திறந்து அவரை வரவிடுவதுடன் அவருக்கு சுவர்க்கத்தின் நற்செய்தியையும் கூறிவிடு என்றார்கள், நான் கதவைத்திறந்த போது அங்கு அபூபக்ர் (றழி) அவர்கள் நின்றிருந்தார்கள், நபியவர்கள் கூறியதைக் கூறவும் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினார்கள். பின்பு இன்னொருவர் வந்து அவ்வாறே கதவைத்திறக்கும்படி கேட்டுக்கொண்டதும் அவருக்கும்

நபியவர்கள் சுவர்க்கத் தின் சுபசெய்தி கூறுமாறு சொன்னார்கள் அங்கே சென்று பார்த்தபோது உமறவர்கள் நின்று கொண்டிருந்தார்கள் நபியின் செய்தியைச் சொன்னதுமே அல்ஹம்துலில்லாஹ் எனக்கூறினார்கள். இவ்வாறு உஸ்மான் ஏனைய ஏழு ஸஹாபிகளும் ஒருவர் பின் ஒருவராக அன்று சுவன வாக்குறுதி வழங்கப்பட்டனர்.

மேற்கூறப்பட்ட செய்தி இது போன்று இங்கு கூறப்படாத இன்னும் பல ஹதீஸ்கள் மூலம் உமர்(றழி) அவர்கள் உலகிலேயே சுவன வாக்குறுதி வழங்கப்பட்ட ஒருவர் என்பதை உறுதிசெய்கின்றன.

## நபி(ஸல்) அவர்களுடன் உமர்(றழி) அவர்களுக்கிருந்த நெருங்கிய உறவு

1. அனஸ் இப்னு மாலிக் (றழி) அவர்கள் தெரிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை உஹத் மலையில் ஏறினார்கள் அவர்களுடன் அபூபக்ர், உமர், உஸ்மான் (றழி) ஆகிய மூவரும் ஏறினார்கள், அப்போது மலை நடுங்கவாரம்பித்தது உடனே நபியவர்கள் தனது காலால் தட்டி உஹதே! அசையாதே உம்மீது ஒரு நபி ஒரு ஸித்தீக் இரு ஷஹீத்கள் ஆகியோரைத் தவிர வேறு யாருமில்லை எனக்கூறினார்கள்.

2. இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் அறிவிப்பதாவது: உமர்(றழி) அவர்களை அடக்கம் செய்வதற்கு தயார்செய்து வைக்கப்பட்டிருந்தது, மக்களெல்லாம் முண்டியடித்துக் கொண்டு சாரை சாரையாகத் தொழுபவர்களாகவும் பிரார்த்தனை செய்பவர்களாகவும் காணப்பட்டனர், அவ்வேளை ஒருவரது கை எனது தோளிற்பட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினேன், அங்கே அலீ(றழி) அவர்கள் நின்றவண்ணம் உமர்(றழி) அவர்களுக்கு றஹ்மத் வேண்டிப் பிரார்த்தித்தவர்களாக: நான் பின்பற்றி ஒழுகக்கூடிய தகைமையில், உங்களைவிட சிறந்த ஒருவரை உங்களுக்குப் பின்னால் நான் காணவில்லை, நிச்சயமாக அல்லாஹ் உம்மை உமது இரு தோழர்களுடனும் சேர்த்து வைப்பான் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன், ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி, நானும் அபூபக்ரும் உமறும் போனோம், நானும் அபூபக்ரும் உமறும் நுழைந்தோம், நானும்

அபூபக்ரும் உமறும் புறப்பட்டோம் என பெரும்பாலான சந்தர்ப்பங்களி லெல்லாம் நீங்கள் மூவரும் இணை பிரியாதிருந்ததைக் குறிப்பிடக் கேட்டிருக்கிறேன் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

3. ஒரு முறை ஒரு யுத்தத்திற்கு நபி(ஸல்) அவர்கள் ஸஹாபாக்களின் படையொன்றை அனுப்பியவேளை சில ஸஹாபாக்கள் யாறஸூலல்லாஹ் அபூபக்ர் அல்லது உமரின் தலைமையில் படைகளை அனுப்பலாமே எனக் கருத்துத் தெரிவித்த போது, நபியவர்கள் அவ்விருவரும் எனது கண்களையும், காதுகளையும் போன்றவர்கள் (அதாவது ஆலேசகர்கள்) அவர்களை விட்டுவிட்டு என்னால் எவ்வாறு இயங்க முடியும் எனக்கேட்டார்கள்.

4. அலீ(றழி) அவர்களது மகன் முஹம்மதிப்னுல் ஹனபிய்யா கூறுகிறார்கள்: ஒருமுறை நான் என் தந்தையிடம் றஸூல்(ஸல்) அவர்களையடுத்து சிறந்தவர் யார் எனக்கேட்ட போது அபூபக்ர் எனக்கூறினார்கள், பின்பு யார் எனக்கேட்டபோது உமர் எனக் கூறினார்கள் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

5. மேலும் உமர்(றழி) அவர்களின் அபிப்பிராயத்தை அங்கீகரித்து சுமார் ஏழுதடவைகளுக்கு மேல் அல்-குர்ஆன் வசனங்கள் இறக்கப்பட்டுள்ளமை போன்றன, அன்னவரது அந்தஸ்தையும் விவேகத்தையும் கோடிட்டுக் காட்ட போதுமான சான்றுகளாகும்.

## உமர்(றழி) அவர்கள் கிலாபத்திற்குத் தெரிவுசெய்யப்படல்:-

இப்னுல் ஜவ்ஸீ என்பவர் அறிவிக்கிறார்: அபூபக்ர் (றழி) அவர்களுக்கு மரணப் பிணி கடுமையாகி, தனது இறுதிக் காலம் நெருங்கிவிட்டதை அவர்கள் உணர்ந்தபோது மக்களை ஒன்று கூட்டி, இதோ எனது நிலைமை நீங்கள் அனைவரும் அறிந்த விடயம், இதுவே எனது கடைசித் தருணம் என நான் உறுதியாக நம்புகிறேன், இப்பொழுது என் மீது சுமத்தப்பட்டுள்ள உங்கள் பொறுப்புக்களிலிருந்து நான் நீங்கிவிட்டதாகக் கருதுகிறேன், எனவே எனக்குப் பின்னால் நீங்கள் குழம்பிக் கொள்ளாதிருக்கும் வகையில் என் முன்னாலேயே உங்களுக்கொரு தலைவரைத் தேர்ந்தெடுங்கள் எனக் கூறினார்கள். அங்கு கூடியிருந்தவர் களால் ஒரு முடிவுக்கு வர இயலாது போகவே

இறுதியில் கலீபா அவர்களே! நீங்களே எங்களுக்கு ஆலோசனை வழங்குங்கள் எனக் கேட்டுக் கொண்டனர், அதற்கு கலீபா நீங்கள் முரண்படக்கூடுமே என்றதற்கு அவர்களனைவரும் ஒருமித்த குரலில் அவ்வாறு நடக்காது கலீபா அவர்களே என உறுதிவழங்கினார்கள், அதற்கு கலீபா அவ்வாறாயின் எனக்கு உறுதிமொழி தாருங்கள் எனக்கேட்டபோது ஆமென்று ஒப்புதல் வழங்கினர். நான் அல்லாஹ்வுக்கும் அவனது மார்க்கத்துக்கும் அவனது அடியார்களுக்கும் பொருத்தமான ஒருவரைத் தேர்ந்தெடுக்க அவகாசம் தாருங்கள் எனப் பெற்றுக் கொண்ட கலீபா, உஸ்மான்(றழி) அவர்களை அழைத்து எனக்கு இவ்விடயத்தில் ஆலோசனை கூறுங்கள் எனக்கேட்டுக் கொண்டதுடன் அல்லாஹ்வின் மீது ஆணையாக நீரும் இதற்கு மிகத்தகுதியும் பொருத்தமானவருமாகும் எனக் கூறினார்கள். அதற்கு உஸ்மான் (றழி) அவர்கள் இல்லை உமரே இதற்கு மிகப் பொருத்தமானவர் எனக்கூறினார்கள், அவ்வாறாயின் எழுதுங்கள் என உஸ்மானைப் பணித்தார்கள், அவர்களும் எழுதவாரம்பித்து உமர் எனப்பெயர் குறிப்பிடும் இடம் வந்தபோது கலீபா மயங்கிவிட்டார்கள், பின்னர் மயக்கம் தெளிந்ததும் உமரின் பெயரை எழுதுங்கள் எனப்பணித்தார்கள்.

(ஆதாரம்: மனாகிப் உமர்)

மற்றோர் அறிவிப்பில்: அபூபக்ர் (றழி) அவர்களுக்கு நோய் கடுமையான போது அப்துர் றஹ்மானிப்னு அவ்ப்(றழி) அவர்களை அழைத்து உமறைப் பற்றிக் கூறுங்கள் எனக் கேட்டார்கள் அதற்கவர் அந்த விடயத்தில் என்னைவிட நீங்கள் மிக அறிந்தவராயிற்றே என்றார், இருப்பினும் உமது கருத்தைக்கூறும் என கலீபா கேட்கவும் அல்லாஹ்வின் மீது ஆணையாக அவரைப்பற்றி நீங்கள் கருதுவதைவிடவும் அவர் சிறந்தவர் எனக் கூறினார்கள், பின்னர் உஸ்மான்(றழி) அவர்களை அழைத்து உமறைப் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தைக் கூறுங்கள் என வினவினார்கள், அதற்கவர் அவரைப்பற்றி எங்களை விடவும் உங்களுக்குத்தான் நன்றாகத் தெரியுமே எனக்கூறினார், அது இருக்க உங்களுக்குத் தெரிந்ததைக் கூறுங்கள் என்றபோது, எனக்கெட்டியவரை அவரது அகம் புறத்தைவிடவும் சிறந்தது, அவர்போன்று நல்லவர் எங்களில் யாரும் கிடையாது எனக்கூறினார்கள், அதற்கு கலீபா அல்லாஹ் உமக்கு அருள்புரியட்டும், நான் உமரை விட்டுவிட்டால் உம்மைத்தவிர

வேறெவரையும் தேர்ந்தெடுக்கப் போவதில்லை எனக் கூறிவிட்டு ஸஃத் பின் ஸைத், உஸைதிப்னு ஹுழைர், இன்னும் பல முஹாஜிர்கள், அன்ஸாரிகளை அழைத்து ஆலோசனை செய்தார்கள், அவ்வேளை உஸைத்(றழி) அவர்கள், இருப்பினும் உங்களுக்குப்பின் நல்லவர்கள் யார் யாரென்பதை அவருக்குச் சொல்லிவையுங்கள். அவர் ஏற்கவேண்டியவற்றை ஏற்பவர் மறுக்கவேண்டியவற்றை மறுப்பவர், அவரது அந்தரங்கம் வெளிச்செயல்களை விடவும் தூய்மையானது, அவரைத்தவிர இவ்விடய(கிலாப)த்தைப் பொறுப்பேற்கப் பொருத்தமானவர் வேறுயாருமில்லை எனக்கூறினார்கள்.

அப்துர்றஹ்மான், உஸ்மான் (றழி) ஆகிய இருவரும் கலீபாவுடன் ஆலோசனையில் ஈடுபடுகின்றனர் என்பதை அறிந்த சிலர் கலீபா அவர்களிடம் சென்றனர், அவர்களில் ஒருவர் உமருடைய கடும் போக்கைத் தெரிந்திருந்தும் அவரை கலீபாவாக நியமித்து விட்டுச்சென்றால் அல்லாஹ்விடம் என்னபதில் கூறப்போகிறீர்கள்? எனக் கேட்டார். அதனைக்கேட்ட கலீபா என்னைத்தூக்கி உட்காரவையுங்கள் எனவேண்டினார், உட்கார வைத்ததும் அல்லாஹ்வை முன்னிறுத்தியா என்னைப்பயமுறுத்து கிறீர்கள்? அவ்வாறு உங்களுக்கு அநீதி இழைப்பவர் நஷ்டவாளி என்று கூறிவிட்டு அவ்வாறல்ல உமது சமூகத்தில் மிக சிறந்த ஒருவரையே உங்களுக்குத் தலைவராக நியமிக்கிறேன், நான் உனக்குக் கூறியதைப் பின்னாலுள்ளவர்களுக்கும் அறவித்துவிடு எனக்கூறிவிட்டு மீண்டும் சாய்ந்த வண்ணம் உஸ்மான் (றழி) அவர்களை அழைத்து எழுதுங்கள் என்று பின்வருவன வற்றைக் கூறினார்கள்: பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம் இது அபூபக்ரிப்னு அபீ குஹாபா இவ்வுலகில் தனது இறுதியும் மறுமையின் ஆரம்பக்கட்டத்திலும் கூறிவைக்கும் உயிலாகும். அதாவது: நான் எனக்குப் பின்னால் உமரை உங்களுக்கு கலீபாவாக நியமிக்கிறேன், அவருக்கு பூரணமாக கட்டுப்பட்டொழுகுங்கள், நான் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் அவனது மார்க்கம், நான் நீங்கள் அனைவருக்கும் நன்மையையே எதிர்பார்க்கிறேன், இதற்குப் பின்னால் எவர் முரண்படுகிறாரோ அவரவர் செய்யும் குற்றங்களுக்குத் தண்டனையை அனுபவிப்பர், நான் நலவையே நாடுகிறேனே தவிர, எனக்கு மறைஞானம் கிடையாது, அநியாயக்காரர்கள் எங்கு செல்வார்கள் என்பதை அவர்கள் அதிவிரைவில் அறிந்து கொள்வார்கள்,

அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹி வபறகாதுஹு என்று முடித்து கடிதத்திற்கு முத்திரையிட்டார்கள்.

வேறுசில அறிவிப்பாளர்கள் குறிப்பிடும்போது,இக்கடிதத்தின் ஆரம்பப்பகுதியை சொல்லி விட்டு உமறவர்களின் பெயர் குறிப்பிடவிருக்கும் சமயத்தில் கலீபா திடீரென மயக்கமுற்று விட்டார்கள், ஆனால் உஸ்மான் (றழி) அவர்கள் தொடர்ந்து உமர் (றழி) அவர்களின் பெயரை எழுதி விட்டார்கள், மயக்கம் தெளிந்த கலீபா எழுதியவற்றை வாசிக்கும்படி கேட்டதும் உஸ்மான் (றழி) அவர்கள் வாசித்தார்கள் அதில் உமர் எனக் குறிப்பிட்டிருந்ததைக் கேட்டதும் ஸித்தீக் (றழி) அவர்கள் உடனே அல்லாஹு அக்பர் என்று கூறிவிட்டு நான் மயக்கமுற்ற நிலையில் எனது உயிர் பிரியவும், அதன் பின்னர் மக்கள் கருத்து முரண்படவும் கூடும் என்ற அச்சத்திற்தான் நீங்கள் உமரின் பெயரைக் குறிப்பிட்டிருப்பீர்கள் என நினைக்கிறேன், அல்லாஹ் உங்களுக்கு இஸ்லாத்தின் பேரிலும் முஸ்லிம் சமுதாயத்தின் பேரிலும் நல்லருள் புரியட்டும் எனப் பிரார்த்தித்துவிட்டு அல்லாஹ்வின் மீது ஆணையாக நீரும் அப்பொறுப்பிற்கு தகுதியுடையவராயிருந்தும் இவ்வாறு நடந்துகொண்டுள்ளீர்கள் எனக்கூறிவிட்டு, எழுதப்பட்ட வற்றை மக்களுக்குப் படித்துக்காட்டும்படி அனுப்பினார்கள்: உமர், உஸைத் (றழி) இருவரையும் அழைத்து வந்து மக்கள் முன் தோன்றிய உஸ்மான் (றழி) அவர்கள் குழுமியிருந்தவர்களை விழித்து இம்மடலிற் குறிப்பிடப் பட்டிருக்கும் நபருக்கு நீங்களனைவரும் பைஅத் (விசுவாசப் பிரமாணம்) செய்வீர்களா? எனக்கேட்டபோது அனைவருமே ஒருமித்தகுரலில் ஆமெனப் பதிலுரைத்தனர். தொடர்ந்து அம்மடல் வாசிக்கப்பட்டு அதில் உமரிப்னுல் கத்தாப் எனக் குறிப்பிடப்பட்டதுமே அனைவரும் ஏகோபித்து அவர்களுக்கு பைஅத் செய்தார்கள். பின்னர் அபூபக்ர்(றழி) அவர்கள் உமர் (றழி) அவர்களை அழைத்து மிகக்காத்திரமான அறிவுரைகளை அவருக்குக்கூறி தம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருந்த அமானிதத்தை புதிய கலீபாவிடம் ஒப்படைத்து விட்டு தனது முடிவையும் நோக்கங்களையும் அல்லாஹ் விடம் பரம்சாட்டிப் பிரார்த்தனையும் செய்தார்கள்.

(ஆதாரம்: அத்தபரீ, தபகாதுல் குப்றா, மனாகிப் உமர்)

மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்து பின்வருவனவற்றை எம்மால் விளங்க முடிகிறது:-

1. அபூபக்ர்(றழி) அவர்களின் நேர்மையான ஆட்சியும் ஸஹாபாக்களின் பண்பட்ட நிலையும்,

2. அதிகாரத்திலுள்ள ஆட்சியாளர் மக்கள் நலன் கருதி அவரைத்தொடர்ந்து அவரது பிரஜைகளில் மிகத் தகுதியானவர் எனக்கருதப்படும் ஒருவரை நியமிக்க முடியும்.

3. அவ்வாறான நியமனத்திற்கு முன்னர் தகைமை படைத்தோரைக் கலந்தாலோசித்தல் அவர்களின் அபிப்பிரா யங்களைப்பெறல். இதில் தலைநகரவாசிகள் கூடிய பங்களிப்புச் செலுத்துவர். ஏனெனில், புத்திஜீவிகள் சமூக முக்கியஸ்தர்கள் தலைநகரிலும் அதனைச் சூழவும் குடியிருத்தல் இஸ்லாமிய அரசியல் கோட்பாட்டில் முக்கியத்துவ மளிக்கப்பட்டுள்ள விடயமாகும்)

4. நியமனத்தை உறுதிப்படுத்தி எழுத்துமூலம் அறிவிப்பதும் அதற்கான ஒப்புதலை தான் உயிர்வாழும் போதே பெறுதலும்.

5. பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்து ஏகோபித்த அங்கீகாரம் கிடைக்கும் போது ஓரிருவரின் அதிருப்திகள் கவனத்திற்கொள்ளப்படத் தேவையில்லை.

6. உஸ்மான்(றழி) அவர்களின் நடவடிக்கையிலிருந்து தகைமைக்கு மதிப்பளிக்கும் ஸஹாபாக்களின் உயரிய பண்பாடும், நேர்மையும் உறுதி செய்யப்படுகின்றது. ஏனெனில் கலீபா அவர்கள் மயக்கமுற்றதைப் பயன்படுத்தி உமறின் பெயரைக் குறிப்பிடாது தனது பெயரையோ அல்லது தான் விரும்பிய வேறொருவரின் பெயரையோ குறிப்பிட்டிருக்கலாம், ஆனால் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை.

இவை தவிர மேலே அபூபக்ர்(றழி) அவர்களின் தெரிவில் கூறப்பட்ட பல ஆதாரங்களும் இரண்டாம் கலீபாவாக உமர் (றழி) அவர்கள் தேர்வு செய்யப்படுவதை உறுதி செய்யப் போதுமான சான்றுகளாகும்.

## கலீபா உமர்(றழி) அவர்கள் மீது சுமத்தப்படும் அபத்தங்கள்

இரண்டாம் கலீபா உமர்(றழி) அவர்களது செம்மையான நிர்வாகத்தை அன்று முதல் இன்றுவரை நியாயவாதிகள் மெச்சுகின்ற அதேவேளை, சேறுபூசுவதும் குழப்பமேற் படுத்துவதுமே பொழுது போக்காக கொண்ட வஞ்சகர்கள் எவ்வித அடிப்படைகளுமின்றி அன்னாரை விமர்சிக்காமலு

மில்லை. அந்த வகையில் நோக்கும்போது துரோகிகளுக்கு எவ்வித துரும்பும் கிட்டாமையால் அன்னார் கிலாபத்தைப் பொறுப்பேற்று மிகக்குறுகிய காலப்பகுதிக்குள்ளேயே தகுதி வாய்ந்த வெற்றிமேல் வெற்றி பெற்று இறாக், ஷாம் பிரதேசங்களை இஸ்லாமிய நிர்வாகத்தின் கீழ் இணைத்துக் கொண்டிருந்த தளபதியான காலதிப்னுல் வலீத், முதன்னா (றழி) ஆகிய இருவரையும் தளபதிப் பதவியிலிருந்து நீக்கியதை இயல்பான சிந்தனைக்கே எட்டாத சில காரணங்களைக் கூறி விமர்சிக்க முற்படுகின்றனர்.

அதில் காலித்(றழி) அவர்களைப் பதவி நீக்கியமைக்குப் பின்வரும் காரணிகளைத் திரித்து களங்கம் ஏற்படுத்த முனைகின்றனர், அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்:-

1. உமறும், காலிதும் (றழி) சிறுபராயத்திலிருக்கும் போது ஒருமுறை ஒருவரை யொருவர் கட்டிப்பிடித்து (மல்யுத்தம் செய்து) வீழ்த்த முயன்ற போது காலித் உமறின் கணுக்காலை உடைத்து விட்டார், அதனை வஞ்சகமாக தனது அடிமனதில் இருத்திக் கொண்ட உமர், கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்டதும் காலிதைப் பதவி நீக்கம் செய்து தீர்த்துக் கொண்டார்.
2. உஹதுப் போரின்போது முதலில் வெற்றிகண்ட முஸ்லிம்கள் பின்னர் அதனை நழுவ விட்டு இழப்புக்களை சந்திப்பதற்கு மூல காரணமாயிருந்தவர் காலிதே என்பதற் காகவும்,
3. அபூபக்ர் (றழி) அவர்கள் காலத்தில் காலித் (றழி) கலீபாவின் கட்டளைகளை எதிர்பாராது படைநகர்வுகளை மேற்கொண்டமை போன்ற ஏற்கமுடியாத காரணங்களை முன்வைக்கின்றனர்.

யதார்த்தத்திற்கு முன்னால் இவையனைத்தும் செல்லுபடி யற்றவை என்பதனைப் பின்வருமாறு நோக்கலாம்:-

1. நபியவர்களே உமர் முஸ்லிமாவதன் மூலம் இஸ்லாத்தைப் பலப்படுத்துமாறு பிரார்த்திக்குமளவு வீரராக திகழ்ந்தவர், முஸ்லிமாகிய பின்னர் முன்பை விடவும் பன்மடங்கு வீரம்பெற்ற உமர் (றழி) அவர்கள் தமது சிறு பராயத்தில் நடந்து முடிந்த ஒரு சிறு விடயத்திற்கு பழி தீர்ப்பதற்காக சுமார் ஐம்பதாண்டுகள் பொறுத்திருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது.

2. உண்மையில் அது ஒரு முக்கிய நிகழ்வாக இருந்திருப்பின் அன்று குடும்பச் சச்சரவுகளில் பாரிய அக்கறை செலுத்திய ஜாஹிலிய சமூகம் அன்றே அதன் பழியைத் தீர்த்து முடித்திருக்கும்.

3. தான் எதிர்காலத்தில் ஒரு கலீபாவாகவும் காலித் (றழி) தனக்குக் கீழ் ஒரு தளபதியாகவும் வருவார் அப்போது தனது பழிவாங்கலை மேற்கொள்ளலாமென முற்கூட்டி அவர்கள் அறிந்திருந்தார்களா?

4. பழிவாங்கலே தனது ஒரேயொரு நோக்கம் என்றிருந்தால், முழுமையான அதிகாரம் பெற்றிருந்த கலீபா அவர்கள் காலித் (றழி) அவர்களை சிறையிலடைத்திருக்கலாம், அல்லது கொலையே செய்திருக்கலாம் மாறாகத் தனது நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு தொடர்ந்தும் பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டது ஆதாரபூர்வமான உண்மையாகும்.

5. தான் இஸ்லாத்தில் நுழைந்த பின்னர் ஜாஹிலிய நிகழ்வுகளை நினைத்து நினைத்து அழுது பாவமன்னிப்பு வேண்டிக்கொண்டிருந்த கலீபா அவர்கள் சாதாரண ஒரு நிகழ்வுக்காக தனது வெண்மையான பக்கங்களில் கரிபூச எத்தனிப்பதென்பது விமர்சிக்கும் விசமிகளுக்குப் பொருந்தி னாலும் உமர் (றழி) போன்ற உயர்ந்தவர்களுக்கு மிக மிகத்தூரமான விடயமாகும்.

    இவையனைத்திற்கும் மேலாக உமர்(றழி) அவர்களே காலித்(றழி) அவர்களைப் புகழ்ந்து கூறிய பல சந்தர்ப்பங் களும் நிகழ்வுகளும் வரலாற்றிற் பதியப்படாமலில்லை.

உதாரணத்திற்காக சிலவற்றை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகுமென நினைக்கிறேன்.

1. உமர் (றழி) அவர்கள் மரணத்தறுவாயில் இருந்தபோது தாங்களுக்குப் பின்னர் ஒரு தலைவரை நியமிக்கலாமே என ஸஹாபாக்கள் வேண்டியபோது காலித் இவ்வேளை உயிருடனிருந்தால் அவரை நியமித்து விட்டு, நான் என் இரட்சகனை சந்திக்கும் போது, அவன் முஹம்மதின் (ஸல்) சமுதாயத்துக்கு யாரை நியமித்து விட்டு வந்துள்ளீர் என வினவினால்: உனது நேசர் முஹம்மத் (ஸல்) அவர்கள் காலித்

முஷ்ரிக்குகளுக்கெதிராக அல்லாஹ்வினால் உருவப்பட்ட ஒரு வாள்'' எனக்கூறக் கேட்டிருக்கிறேன், எனவே அவரையே நியமித்து விட்டு வந்துள்ளேன் எனக்கூறலாமே! என்று அங்கலாய்ப்புடன் கூறினார்கள்.

2. ஷாம் தேசத்தில் மிகப்பலம் வாய்ந்த ஒரு நகரத்தினை கடுமையான போராட்டத்தின் பின்னர் காலித் (றழி) தனது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவந்த செய்தி கலீபா உமர் (றழி) அவர்களை எட்டியபோது அபூபக்ருக்கு அல்லாஹ் அருள்செய்யட்டும், அவர் தளபதிகளைத்தெரிவு செய்வதில் என்னைவிட ஆற்றல் மிக்கவராக இருந்திருக்கிறார், அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் எந்தக்குற்றத்திற் காகவும் காலிதை பதவி நீக்கம் செய்யவில்லை, மாறாக மக்கள் அவர்மீது அளவுகடந்து நம்பிக்கை கொண்டு விடுவர் என்பதைப் பயந்ததினாலேயே பதவி நீக்கம் செய்தேன் எனக்குறிப்பிட்டார்கள்.

3. மற்றுமொரு சந்தர்ப்பத்தில்: காலிதைப் போன்று இன்னும் பலரை எமது பெண்கள் பெற்றெடுக்க மாட்டார்களா! என ஆதங்கப்பட்டார்கள்.

4. காலித் எதிரிகளின் குரல்வளையை நசுக்குபவராகவும், சிறந்த அனுபவமிக்கவரும், புத்திசாலியுமாகும் எனப் புகழ்ந்து கூறினார்கள் கலீபா உமர்(றழி) அவர்கள்.ரை எமது பெண்கள் பெற்றெடுக்க மாட்டார்களா! என ஆதங்கப்பட்டார்கள்.

5. மேலுமொரு முறை: நான் காலிதை கோபத்துக்காகவோ அல்லது மோசடிக்காகவோ பதவி நீக்கம் செய்யவில்லை மாற்றமாக மக்கள் அவர்மீது அதீத (ஈமானைப் பாழாக்கி விடும்) நம்பிக்கை கொண்டிருந்தார்கள், எனவே அவர்கள் அவ்வாறே (அல்லாஹ்வினால்) கைவிடப்பட்டு விடுவார் களோ எனப்பயந்தேன், ஆதலால் அல்லாஹ்வே இவை யனைத்தையும் செய்து முடிப்பவன் என்பதை நிரூபிக்கவே காலிதைப் பதவிநீக்கம் செய்தேன் எனக் குறிப்பிட்டார்கள்.

6. உஹதுப் போரின் போது காலித் (றழி) அவர்களது வியூகமே முஸ்லிம்களைப் பாதித்தது என்பதற்காகப் பழி தீர்ப்பதாயின், இஸ்லாத்தின் மூலம் முன்செய்த அனைத்துக் குற்றங்களும்

மன்னிக்கப்பட்டு விடும் எனும் இஸ்லாத்தின் அடிப்படையை கலீபா உமர் (றழி) அறியாதிருந்தார்களா? அல்லது இஸ்லாமான பின்னர் காலித் (றழி) இஸ்லாத்திற் காற்றிய அரும்பெரும் தியாகங்கள் கலீபாவுக்குத் தெரியாமலிருந்ததா? எனவே நிச்சயமாக இவற்றில் எவ்வித உண்மையுமில்லை.

## காலிதிப்னுல் வலீத்(றழி) அவர்களின் பதவிநீக்கத்தின் பின்னாலுள்ள உண்மைகள்:-

1. அபூபக்ர்(றழி) அவர்கள் தமது நிர்வாகத்தில் மாகாண ஆளுநர்கள், படைத்தளபதிகளுக்கு தத்தமது அதிகாரத்திற் குட்பட்ட பகுதிகளின் நிர்வாகம் ஏனைய சாதாரண விடயங் களனைத்திலும் சுயமாக முடிவுகளை மேற்கொள்ளும் பூரண சுதந்திரத்தை வழங்கியிருந்தார்கள், ஆனால் உமர் (றழி) அவர்கள் நிர்வாகத்தைக் கையேற்றதும் சிறிய பெரிய அனைத்து விடயங்களிலும் தனது ஆலோசனை பெறப்பட்டே அமுல்படுத்தப்பட வேண்டுமென அனைவருக் கும் பணிப்புரை வழங்கினார்கள். அதேவேளை தமது பணிப்புரைக்கு இசைந்தவர்கள் தொடர்ந்தும் சேவையில் நீடிக்கவும் விரும்பாதவர்கள் நீங்கிக்கொள்ளவும் அனுமதி யும் வழங்கினார்கள்.

   அவ்வாறு மறுத்தவர்களில் காலித்(றழி) அவர்களும் ஒருவர், இருந்த போதிலும் கலீபா அவர்கள் தமது நிபந்தனையை ஏற்றுப் பதவியிலிருக்குமாறு மீண்டும் மீண்டும் பல தடவைகள் வலியுறுத்தியும் அவ்வாறு செயல் பட தம்மால் முடியாதென மறுத்து விட்டார்.

   தனது கொள்கையில் பிடிவாதமாயிருந்த கலீபா, காலித் (றழி) அவர்களின் இடத்திற்கு அபூஉபைதா (றழி) அவர்களை நியமித்ததுடன் எக்காரணம் கொண்டும் காலிதைத் தள்ளிவைக்கக்கூடாது அவரைக் கலந்தாலோ சித்த பின்பே முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் புதிய தளபதிக்குப் பணிப்புரை வழங்கினார்கள்.

இதிலிருந்து நாம் காலிதிப்னுல் வலீத் (றழி) அவர்கள் நீக்கப்படவில்லை தாமாகவே நீங்கிக்கொண்டவர் என்பதை விளங்க முடியும், அதனை மேலும் வலுப்படுத்த காலித் (றழி) அவர்கள் புதிய தளபதியோடு தமது வழக்கமான செயல்பாடுகளில் பூரண திருப்தியோடு தொடர்ந்தும் சுமார் நான்கு வருடங்கள் பணியாற்றியதும் கலீபா அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டதும் தக்க சான்றுகளாகும்.

2. அன்றைய கள நிலவரங்களைப் பொறுத்தமட்டில் ஷாம் பிரதேசத்தில் பலம் வாய்ந்த பகுதிகள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்திருந்தமையும், உரோம வல்லரசன் ஹிறக்ல் ஷாம் முழுவதற்கும் பிரியாவிடை சொல்லிப் புறப்பட்டதையடுத்தும் அங்கு வாழ் மக்கள் (முஸ்லிம், முஸ்லிமல்லாதோர்) மத்தியில் காலித் (றழி) போன்ற கடும் போக்குள்ள தளபதிகளை விடவும் அபூஉபைதா (றழி) போன்ற மிதவாதப்போக்குள்ள தளபதிகளின் பொருத்தப் பாடும் கலீபாவுக்குத் திருப்தியளித்தமை.

3. காலித், முதன்னா (றழி) போன்ற தளபதிகள் தலைமை வகித்தால் தோல்வியே கிடையாது என்ற வித்தியாசமான நம்பிக்கை இஸ்லாமியப் படையணியுள் வளர்ந்திருந்தமை யால், ஹுனைன் யுத்தத்தில் பாடம் புகட்டப்பட்டது போன்ற தொரு துர்ப்பாக்கிய நிலை மீண்டும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை.

4. என்பவற்றுடன் இஸ்லாமியப் போராட்ட வரலாற்றில் இன்னும் பல ஆளுமைமிக்க தளபதிகள் தோற்றம்பெறவும் இவ்வாறான பதவி விலகல்கள் வழிகோலின.

அனைத்திற்கும் மேலாக துரோகிகள் கூறுவது போன்று அற்பமான சிந்தனைப்போக்குகள் அவ்விரு தலைவர்கள் மத்தியிலும் இருந்திருக்குமேயானால் அன்று முழு அதிகாரமும் கொண்டிருந்த கலீபா விரும்பியவாறு பழி தீர்த்திருக்கலாம் அதேவேளை ஷாமிலும், இறாக்கிலும் போரில் ஈடுபட்டிருந்த படையணியுள் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த தளபதி காலித் (றழி) அவர்கள் ஒரு பலமான மாற்றணியை உருவாக்கி கலீபாவுக்கு சவாலாக மாறி யிருக்கலாம், ஏன் ஆட்சியைக்கூடக் கைப்பற்ற முனைந்தி ருக்கலாம், ஆனால்

அவ்விதமான அற்ப செயல்களுக்கு அவர்கள் கிஞ்சிற்றும் முனையவில்லை. மாறாக ஈமானிய உணர்வும் இறையச்சமும் காலித் (றழி) அவர்கள் ஷாமிலிருந்து மதீனா திரும்பியவேளை கலீபா இடைவழி சென்று வரவேற்கவும், இருவரும் ஒருவரையொருவர் ஆரக்கட்டித்தழுவவும் செய்ததே வரலாறன்றி வேறில்லை.

அதுமட்டுமன்றி காலித் (றழி) தனது இறுதித் தறுவாயில் சூழ இருந்தவர்களிடம் உமர் (றழி) அவர்களைப் புகழ்ந்து கூறியதோடு, அவர் அனைத்திலும் நேர்மையாகவும் அல்லாஹ்வின் விருப்பத்தை எதிர்பார்த்துமே செயற்பட்டார். நான் அவரது உறவினராக இருந்தும் கூட எனக்கும் மற்ற வர்களுக்குமிடையில் எவ்வித வேற்றுமையுமின்றி நடந்து கொண்டார் எனப்பெருமிதமடைந்ததோடு, அவருக்குப் பின் அவரது சொத்துக்களின் பொறுப்புக்களையும் அவரிடமே விட்டுச் சென்றார்கள். இவ்விதமிருக்க இவர்கள் மீது சேறுபூச எத்தனிக்கும் பண்பற்ற செயலை எவ்வாறு நியாயங்காண முடியும்.

கவர்னர்களும், தளபதிகளும் தன்னிச்சையாக இயங்குவது நிர்வாக சீர்கேடுகளுக்கு வழிவகுக்கும் என்ற கலீபாவின் கொள்கையும், நிகழ்வுகளின் யதார்த்த நிலைகளை களத்திலுள்ளவரால் தெளிவாக உணர முடிவது போல் தொலைவிலுள்ளவரால் உணரமுடியாது என்ற காலித் (றழி) அவர்களின் நிலைப்பாடுமே இங்கு முரண்பட்டன.

# கலீபா உஸ்மான் (றழி) அவர்கள்

முதலாம், இரண்டாம் கலீபாக்கள் விடயத்தில் நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று மூன்றாம் கலீபாவின் தெரிவிலும் குழப்பவாதிகள் உடன்பாடு கொள்ளவில்லை, காரணம் அவர்கள் கூற்றுப்படி அலீ (றழி அவர்களே அனைவரைப் பார்க்கிலும் முற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் அவர்கள் வெறும் பிரச்சாரத்திற்கு மட்டுமே அதனைப் பயன்படுத்தினார்களே அன்றி, இஸ்லாத்திலும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியிலும் குழப்பங்களையும் பிளவுகளையும் ஏற்படுத்து வதும் அதனால் இஸ்லாமிய அரசைப் பலவீனப்படுத்தி, இறுதியில் இஸ்லாம் நாதியற்று யூத, கிறிஸ்தவ சமயங்கள் போன்று விரும்பியவா றெல்லாம் கையாடல் செய்யலாம் என்ற நப்பாசையே அவர்களது அடிமனதிற் காணப்பட்டது. அதற்கான தக்க தருணம் பார்த்திருந்த நயவஞ்சகன் அப்துல்லாஹ் இப்னு ஸபஉம் அவனது அடிவருடிகளான பாரஸீகர்களும், இன்னும் சில சித்தம் குழம்பியவர்களும் தங்களது திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க களமிறங்கினர்.

பல ஆண்டுகள் பல்வேறு தியாகங்கள் புரிந்தும் சில அரசியற் பிளவுகளையே அவர்களால் தோற்றுவிக்க முடிந்ததே தவிர இஸ்லாத்தை மாற்றியமைக்கும் அவர்களது நப்பாசை பூரண தோல்வியையே தழுவியதென்பது மிகத்தெளிவான உண்மையாகும்.

இனி நாம் மூன்றாம் கலீபாவுக்கு காணப்பட்ட சமூக அங்கீகாரம் கிலாபத்திற்காக அவர் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார் என்பவற்றை நோக்குவோம்.

## உஸ்மான் (றழி) அவர்களுக்கு காணப்பட்ட சமூக அங்கீகாரம்:-

1. இப்னு உமர் (றழி) அவர்கள் ஓர் அறிவிப்பில் : நாங்கள் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் (ஸஹாபாக்களுள்)அபூபக்ருடன் யாரையும் சமமாகக் கணிக்கமாட்டோம், அடுத்து உமர், அடுத்து உஸ்மான்(றழி) அவர்கள். இவர்கள் மூவரையும் தவிர்ந்த ஏனையோர் மத்தியில் அந்தஸ்தில் எவ்வித ஏற்றத்தாழ்வும் பார்க்காது சமமாகவே மதிப்போம் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

2. நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை : யார் றூமா என்ற கிணற்றைத் தோண்டுவிக்கிறாரோ அவருக்கு சுவர்க்கம் நிச்சயம் எனக் கூறியதும், எவ்வித தாமதமும் இன்றி உஸ்மான் (றழி) அவர்கள் அதனைத் தனது செலவில் செய்து முடித்தார்கள்.

3. மேலுமொரு முறை நபி (ஸல்) அவர்கள், யார் யாரெல்லாம் கஷ்ட காலப்(தபூக்) போருக்குப் புறப்படும் படையைத் தயார் செய்யும் செலவினங்களிற் பங்கேற்கிறாரோ அவருக்கு சுவர்க்கம் கிடைக்குமென உறுதியளித்தார்கள், அதிற்பல ஸஹாபாக்கள் பங்கேற்றனர். ஆயினும் உஸ்மான்(றழி) அவர்கள் மொத்தச் செலவினங்களில் அரைவாசியைத் தனியாகப் பொறுப்பேற்றார்கள்.

4. அபூ மூஸா(றழி) அவர்கள் ஊடாக அறிவிக்கப்படும் ஹதீஸில்: நபியவர்களால் ஒருமுறை சுவர்க்கம் நிச்சயமென வாக்களிக்கப்பட்ட பதின்மருள் உஸ்மான்(றழி) அவர்கள் மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தார்கள் என்பது உறுதிசெய்யப்படுகின்றது.

இதுபோன்று இன்னும் பல சிறப்புக்களை அடுக்கிக்கொண்டே போகலாம், விரிவஞ்சி இத்துடன் போதுமாக்கிக் கொள்ளப்படுகின்றது.

## உஸ்மான் (றழி) அவர்கள் கிலாபத்துக்குத் தெரிவு செய்யப்படல்:-

முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று மூன்றாம் கலீபாவின் தெரிவிலும் குழப்பவாதிகள் பொருத்தமற்ற, முரண்பட்ட பல கருத்துக்களை நுழைத்துள்ளனர். அவற்றில் அலீ (றழி) அவர்கள் தாமே கலீபாவாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென எதிர்பார்த்திருந்தாகவும், உஸ்மான் (றழி) அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதில் அவருக்கு உடன்பாடு இருக்க

வில்லை என்பதாகவும், மத்தியஸ்தம் வகித்த அப்துர்றஹ்மானிப்னு அவ்ப் (றழி) அவர்களை நோக்கி “உஸ்மான் உனது சொந்தக்காரர் என்பதாலும், அவர் தனது இறுதிக்காலத்தில் உம்மிடம் கிலாபத்தை ஒப்படைப்பார் என்ற எதிர்பார்ப்பிலுமே நீர் அவரைத் தெரிவு செய்துள்ளீர், அதற்கான பிரதிபலனை நீங்கள் கண்டு கொள்வீர்கள்’’ என கோபத்துடன் கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களது இக்கூற்று ஏற்கத்தகாத முற்றிலும் பொய்யானது என்பதனைப் பின்வருமாறு நோக்கலாம்.

1. உஸ்மான் (றழி) அவர்களே கிலாபத்திற்கு தகுதி என்பதை அலீ (றழி) அவர்களே ஏற்றிருந்தமை
2. இவ்வாறான கூற்று ஸஹாபாக்களைப் பொறுத்தவரை குறிப்பாக அலீ (றழி) போன்றவர்களுக்கு இழுக்கேற்படுத்தக்கூடியதாகும்
3. உண்மையில் உஸ்மான் (றழி) அவர்களைவிட அலீ (றழி) அவர்களே மிகத் தகுதியானவர் என்றிருந்தால் ஏனைய ஸஹாபாக்கள் மௌனிகளாக இருந்திருக்க மாட்டார்கள்.
4. இக்கூற்று உண்மை என்றிருந்தால் அப்துர்றஹ்மானிப்னு அவ்ப் (றழி) அவர்கள் உஸ்மான் (றழி) அவர்களுக்குப் பின்னரும் உயிர் வாழ்வார் என்பதை அலீ (றழி) அவர்கள் அறிந்திருந்தார்களா?
5. அப்துர்றஹ்மான் (றழி) கிலாபத்தில் ஆசை கொண்டிருந்திருப்பின், பின்னால் வரக்கூடிய செய்தியின் அடிப்படையில் சிபாரிசு செய்யப் பட்டிருந்த அறுவரின் பட்டியலில் இருந்து முதன் முதலில் தன்னை விலக்கிக் கொண்டிருக்கமாட்டார், மாறாக எப்பாடுபட்டாயினும் தாம் அதனை அடைய வேண்டுமென்றே இறுதிவரை முயன்றிருப்பார்.

இவையனைத்திற்கும் மேலாகப் பின்வரும் செய்தி அன்றைய உண்மையான சூழலைத் தெளிவுபடுத்தப் போதுமானதாகும்.

இமாம் புகாரி (றஹ்) அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்: உமர் (றழி) அவர்கள் தாக்கப்பட்டு நிலைமை மோசமான போது அங்கு குழுமியிருந்த ஸஹாபாக்கள் உமர் (றழி) அவர்களைப் பார்த்து அமீறுல் மு..மினீன் அவர்களே! எங்களக்கு வஸிய்யத் செய்யுங்கள்,

அத்துடன் உங்களுக்குப் பின்னால் ஒருவரை கலீபாவாக நியமியுங்கள் என வேண்டினார்கள். அப்போது அவர்கள் அதற்கு மிகப்பொருத்தமாக (சுவனம் வாக்களிக்கப்பட்ட) அவ்வறுவரில் ஒருவரையே காண்கிறேன், எனக்கூறி விட்டு "உஸ்மான், அலீ, ஸுபைர், தல்ஹா, ஸஃத், அப்துர்றஹ்மானிப்னு அவ்ப் (றழி) ஆகியோரைக் குறிப்பிட்ட பின் அப்துல்லாஹ் இப்னு உமரை ஏழாவதாகக் குறிப்பிட்டு, மேற் கூறப்பட்ட அறுவரும் மும்மூவராய் சமமாகப் பிரிய நேரிட்டால் நான்காமவராக இருந்து ஓர் அணியைப் பலப்படுத்தும் உரிமையை வழங்கியதோடு எக்காரணம் கொண்டும் அவருக்கு கலீபாப் பதவி வழங்கப்படலாகாது என்பதையும் வலியுறுத்திக் கூறினார்கள், பின்னர் அவர்களனைவருக்கும் பொதுவாக உபதேசம் செய்தார்கள்.

உமர் (றழி) வபாத்தானதும் ஜனாஸாவைக் கொண்டு சென்று அன்னை ஆயிஷா (றழி) அவர்களிடம் அனுமதி பெற்று அவரது இரு தோழர்களான நபி (ஸல்), அபூபக்ர் (றழி) ஆகியோரின் அருகில் அடக்கம் செய்யப்பட்டார்கள். அடக்கம் முடிவடைந்ததும் உமர்(றழி) குறிப்பிட்ட அறுவரும் ஒன்று கூடினர் அவ்வேளை அப்துர்ரஹமான்(றழி) அந்த அறுவரில் மூவரை விட்டுக் கொடுக்குமாறு கோரினார் அப்போது ஸுபைர்(றழி) அவர்கள் நான் அலீ அவர்களுக்கு எனது ஆதரவை வழங்குகிறேன் என்றார், தல்ஹா (றழி) நான் உஸ்மானை ஆதரிக்கிறேன் என்றார் ஸஃத் (றழி) நான் அப்துர்ரஹ்மானைப் பிரேரிக்கிறேன் என்று அம்மூவரும் விட்டுக்கொடுத்தனர். பின்னர் அப்துர்ரஹமான் (றழி) அவர்கள் உஸ்மான், அலீ (றழி) ஆகியோரை விழித்து அல்லாஹ்வுக்காகவும் இஸ்லாத்துக்காகவும் இவ்விடயத்தைப் பொறுப்பேற்று சிறந்த ஒருவரைத் தெரிவு செய்ய உங்களில் யார் முன் வருகிறீர்கள் எனக் கேட்டபோது இருவருமே மௌனித்தனர். அவ்வாறாயின் அல்லாஹ்வுக்காக எவ்வித பக்கச்சார்புமின்றி நீதியான முறையில் ஒருவரைத் தெரிவு செய்ய எனக்கு வாய்ப்புத் தருகிறீர்களா? எனக் கேட்ட போது ஆமெனப் பதிலளித்தனர்.

உடனே அலீயின் கரத்தைப் பிடித்து நீர் றஸூலுல்லாஹ்வின் உறவினர் இஸ்லாத்தின் ஆரம்ப கால உறுப்பினர் உம்மைத் தெரிவு செய்தால் நீர் நீதமாக நடந்துகொள்ள வேண்டும், உஸ்மானைத் தெரிவு செய்தால் அவருக்கு கட்டுப்பட்டு வழிபட வேண்டும் என்று சத்திய வாக்கெடுத்தார்கள். அவ்வாறே அலீ தெரிவு செய்யப்பட்டால் கட்டுப்

படுவேனென உஸ்மானிடம் வாக்குறுதி பெற்றார்கள். பின்பு உஸ்மானின் கையைப் பிடித்து பைஅத் செய்தார்கள். அடுத்து அலீ (றழி) அவர்களும் அவரைத் தொடர்ந்து ஏனைய அனைவரும் பைஅத் செய்தனர்.

(ஆதாரம்: புஹாரி)

இன்னுமோர் அறிவிப்பில்: உமர் (றழி) தமக்குப் பின்னர் நியமித்த குழுவிற்கு மூன்று நாட்கள் கால அவகாசம் கொடுத்திருந்தார்கள் அதற்குள் அவர்கள் தங்களுக்குள் கலந்தாலோசித்து மக்கள் அபிப்பிராயத்தையும் பெற்று ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதாக. மேற்குறிப்பிட்டது போன்று தெரிவுப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட அப்துர்ரஹ்மான் (றழி) மூன்று தினங்களும் தூக்கத்தைக்கூட தியாகம் செய்து தொடராக தனித்தனியாகவும் கூட்டாகவும் ஸஹாபாக் களில் முக்கியமானவர்களின் ஆலோசனைகளைப் பெற்றார். அதில் பெரும்பாலும் அனைவரது அபிப்பிராயமும் உஸ்மான் (றழி) அவர்கள் மீதே இருந்ததாலும் நபியவர்களின் முற்கூட்டிய சில சைகைகளாலும் உஸ்மான் (றழி) அவர்களைத் தெரிவு செய்தனர். அதற்கு அனைத்து ஸஹாபாக்களுமே அங்கீகாரம் வழங்கினர் என்பதாக வரலாறு இயம்புகின்றது.

### மூன்றாவதாக உஸ்மான்(றழி) அவர்களே கிலாபத்தைப் பொறுப்பேற்க வேண்டியவர் என்பதற்கான சான்றுகள்:-

1. உமர் (றழி) ஊடாக இமாம் அஹ்மத் (றஹ்) அவர்களால் அறிவிக்கப்படும் ஒரு ஹதீஸில்: ஒரு நாள் காலை நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் வந்து நான் இன்று பஜ்றுத் தொழுகைக்கு சற்று முன்பதாக ஒரு கனவு கண்டேன் அதில் என்னிடம் சில திறப்புக்களும், ஒரு தராசும் தரப்பட்டது அத்தராசில் ஒரு தட்டில் நானும் மறுதட்டில் எனது உம்மத்தினர் அனைவருமாக நிறுக்கப்பட்டோம் அதில் எனது பக்கமே கனதியானது, பின்னர் அபூபக்ர், உமர், உஸ்மான் ஆகியோர் அடுத்தடுத்து உம்மத்தின ருடன் நிறுக்கப்பட்டபோது இவர்களது தட்டுக்களே எடையிற் கூடின. பின்னர் அத்தராசு உயர்த்தப்பட்டுவிட்டது எனக் கூறினார்கள்.

(ஆதாரம்:அஹ்மத்)

2. இப்னு உமர் (றழி) ஊடாக இமாம் அஹ்மத் அவர்கள் அறிவிப்பது: நபி(ஸல்) அவர்கள் ஒரு குழப்பம் பற்றிக்குறிப்பிட்டு விட்டு அதில் அதோ போர்த்தியிருப்பவர் அநியாயமாகக் கொல்லப் படுவார் எனக்கூறினார்கள். நான் யாரெனப் பார்த்த போது அங்கு உஸ்மான் (றழி) அவர்களே காணப்பட்டார்கள். இக்குழப்பம் உஸ்மான் (றழி) அவர்கள் காலத்திலேயே தோன்றியது அதில் கலீபாவாயிருந்த உஸ்மான்(றழி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள் என்பது நிதர்சனமாகும்.

(முஸ்னத் அஹ்மத்)

3. இன்னும் பல ஆதாரங்கள் அபூபக்ர், உமர்(றழி) அவர்களது கிலாபத் தகைமைகளுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளன என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**குழப்பவாதிகளால் புனையப்பட்டு சுமத்தப்பட்ட வீண் பழிகள்:-**

1. அம்மாரிப்னு யாஸிர்(றழி) அவர்களுக்கு அவரது குடல் சரியும் வரை அடித்தார்.
2. அப்துல்லாஹிப்னு மஸ்ஊத்(றழி) அவர்களது விலா எலும்புகள் முறியும் வரை அவருக்கு அடித்து அவருக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த இலவச வநியோகத்தையும் தடைசெய்தார்.
3. குர்ஆனை ஒன்று சேர்த்து நூலுருவாக்கி புதுமை உண்டாக்கிய துடன் குர்ஆன் பிரதிகளை எரிக்கவும் செய்தார்.
4. மேய்ச்சல் நிலங்களை வரையறுத்து அரச உடைமை யாக்கினார்.
5. அபூதர் அல் கிபாரி(றழி) அவர்களை “றபதா” என்னும் கிராமத்திற்கு நாடு கடத்தினார்.
6. அபூதர்தா(றழி) அவர்களை ஷாமிலிருந்து வெளியேற்றினார்.
7. மர்வானிப்னு ஹகம் என்பவரை நபியவர்கள் நாடு கடத்தியும் உஸ்மான் அவரை மீண்டும் வர அனுமதித்தார்.
8. பிரயாணங்களில் சுருக்கித் தொழுவதை நிறுத்தினார்.
9. முஆவியா, அப்துல்லாஹிப்னு ஆமிர், மர்வான், வலீதிப்னு உக்பா போன்றோரை மாகாணங்களுக்கு ஆளுனராக நியமித்தமை.

10. எகிப்தைச் சேர்ந்த ஒரு சிலரைக் கொன்றுவிடும்படி தனது கவர்னருக்கு கடிதமெழுதி அவரது அடிமையிடம் கொடுத்து அவரது ஒட்டகத்தில் அனுப்பி வைத்தார்.

போன்ற உண்மைக்குப் புறம்பானதும் தவறாகப் புரியப்பட்டதுமான பல குற்றச்சாட்டுக்கள் நயவஞ்சகரகளால் சுமத்தப்பட்டு தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அவற்றின் யதார்த்தங்களையும் பின்னணிகளை யும் உற்று நோக்கும்போது.

## கலீபா மீது சுமத்தப்பட்ட அபத்தங்களின் யதார்த்த நிலை:-

**தெளிவுரை: 1**

அம்மாரிப்னு யாஸிருக்கும் உத்பா இப்னு அபீலஹபிற்குமிடையிற் தகராறு ஏற்பட்டது அதனைத் தீர்த்து வைக்க வேண்டிய கடப்பாடு கலீபா என்றவகையில் உஸ்மான்(றழி) அவர்களைச் சார்ந்தது. எனவே முன்சென்ற கலீபாக்களின் நடைமுறையை ஒழுகி தண்டித்தார்கள். ஆனால் பொய்யர்கள் கொக்கரிப்பது போன்று குடல் வெளிப்படும் வரை அடித்திருந்தால் அம்மார் (றழி) அன்றே மரணித்திருக்க வேண்டுமல்லவா? மறுபுறம் உஸ்மான் (றழி) அவர்களின் இரக்க சிந்தைக்கும் மிருதுவான போக்கிற்கும் இது முற்றிலும் தூரமானதாகும்

இது இவ்வாறிருக்க விஷமிகள் தூரப்பிரதேசங்களில் குழப்பத்திற்கு தூபமிடுகிறார்கள் என்பதை அறிந்த கலீபா அவர்கள் தனக்கு நம்பிக்கையான பலரைத் தெரிவு செய்து கயவர்களின் பொய்ப் பிரசாரங்களை மக்களுக்கு உணர்த்து முகமாக அனுப்பினார்கள். அதில் அம்மாரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் அம்மார்(றழி) அவர்கள் தமது கடமையை சரிவர நிறைவேற்றவில்லை என அறிந்து திருப்பி அழைத்த கலீபா அம்மாருக்கு தமது அதிருப்தியை வெளிக்காட்டிவிட்டு அவரை அனுப்பிவிட்டார். அவரது நடவடிக்கையால் மக்கள் அவரையே வெறுத்தனரே தவிர கலீபாவின் மீது வேறெந்த களங்கமும் ஏற்படவில்லை. ஆனால் குழப்பக்காரர் களோ அம்மாரின் போக்கினைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இவ்வாறு புனைந்து விட்டனர்.

## தெளிவுரை: 2

அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் கலீபா உமர் (றழி) ஷஹீதாக்கப்பட்டபோது கூபாவின் நிதிப் பொறுப்பிலிருந்தார். உஸ்மான் (றழி) கலீபாவான போது அவர்கள் பற்றி நற்சான்று கூறியவர்களுள் இப்னு மஸ்ஊதும் ஒருவர். கலீபா அவரை அதே பணியில் அங்கீகரத்தார்கள் அவரும் கலீபாவிற்கு விசுவாசமாகவே செயல் பட்டார். காலவோட்டத்தில் முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்ட சில மாற்றங்கள் அல்குர்ஆனை பாராயணம் செய்வதில் வித்தியாசங் களைத் தோற்றுவித்திருந்தன எனவே அதனை சரி செய்து ஒருமுகப் படுத்த வேண்டிய அவசியம் கலீபாவிற்கு ஏற்பட்டது. அப்போது இப்னு மஸ்ஊத் (றழி) தன்னிடமிருந்த தொகுப்பினடிப்படையில் இஸ்லாமிய சமுதாயம் ஒருங்கிணைக்கப்படுவதை அல்லது அல்குர்ஆனை பிரதி பண்ணும் பணி தன்னிடம் ஒப்படைக்கப்படுவதை எதிர்பார்த்தார்கள், ஆனால் கலீபா முதலில் ஒன்று சேர்க்க அபூபக்ர், உமர் (றழி) யாரை நியமித்தார்களோ அவரையே நியமித்தார்கள். அத்துடன் மக்களிட மிருந்த வித்தியாசமான பிரதிகளை ஒன்று சேர்க்கும்போது இப்னு மஸ்ஊத் (றழி) அவர்களிடம் இருந்த பிரதியையும் சேர்த்தே எடுத்தார் கள். இந்நிகழ்வால் அவர்கள் மத்தியில் சிறு கசப்பு ஏற்பட்டிருக்கலாம், இருந்த போதிலும் பரஸ்பரம் ஒருவரையொருவர் மதிக்கவும் கௌரவிக் கவுமே செய்தனர். உறவையோ அவருக்கான கொடுப்பனவையோ கலீபா துண்டிக்கவில்லை என்பதே உண்மை. அதற்கு மாற்றமான செய்திகள் யாவும் புனையப்பட்டவையே.

## தெளிவுரை: 3

அல்குர்ஆனை ஒன்று திரட்டிப் புதுமையை மார்க்கத்திற் புகுத்தினார் என்பது முற்றிலும் முரணான பொய்யாகும். ஏனெனில் அல்குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டது கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் காலப்பகுதியி லாகும். கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் காலத்தில் இஸ்லாம் வெகுவாகப் பரவி அறபியல்லாத பெருந்தொகையினர் இஸ்லாத்தில் நுழைந்ததும் அல்குர்ஆனை ஓதும் ஆர்வத்தில் தங்களுக்கு எட்டிய வற்றை தத்தமது அறிவிற் கேற்ப பாராயணம் செய்ய முற்பட்டனர் அப்போது அவர்கள் எதிர்பாராத பல்வேறு பிழைகளும் திரிவுகளும் அல்குர்ஆன் ஓதலில் இடம்பெற்றன. இதன் அபாயத்தை உணர்ந்த பல முக்கிய ஸஹாபாக்கள் கலீபாவிற்கு எடுத்துக் கூறியபோது, இறை

வேதத்தைப் பாதுகாக்கும் அப்பணியினை வெகு சிரத்தையோடு கலீபா அவர்கள் மேற்கொண்டார்கள்.

அதனடிப்படையில் முன்னைய கலீபாக்களால் மிகத்தகுதியும் பொருத்த முமாக கருதி தெரிவு செய்யப்பட்டிருந்த ஸைதிப்னு தாபித் (றழி) அவர்களையும் அவருக்குத் துணையாக இன்னும் மூவரையும் நியமித்து அபூபக்ர்(றழி) காலத்தில் தொகுக்கப்பட்டு அன்னை ஹப்ஸா (றழி) அவர்களிடம் பாதுகாக்கப்பட்டிருந்த பிரதியை அழைப்பித்து பிரதி பண்ணுபவர்களிடம் கையளித்து அதனை மீண்டும் சரிபார்த்து பல பிரதிகள் செய்து இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பிவைத்து அதனை அடிப்படையாகக் கொண்டே அல்குர்ஆனைக் கற்பிக்கும்படியும் ஓதும்படியும் பணித்தார்கள்.

அத்துடன் மக்கள் கரங்களில் உலாவந்த அனைத்தையும் ஒன்று சேர்த்து அவை மீண்டும் தூய்மையானவற்றுள் கலந்துவிடக்கூடாது என்கின்ற எச்சரிக்கையில் அவையனைத்தையும் எரித்து விட்டார்கள். கலீபாவின் இப்பணி மகத்தானதும் நன்றி கூரத்தக்கதுமாகும். அதே வேளை அல்குர்ஆனை எரித்தார் எனும் நயவஞ்சகக் கும்பலின் பிரச்சாரம் பொய்யானதும் உண்மைக்குப் புறம்பானதுமாகும்.

### தெளிவுரை: 4

பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை (சரணாலயங்கள்) விஸ்தரித்தமை: அதாவது உமர்(றழி) அவர்கள் காலத்தில் அரச மேய்ச்சல் நிலமாகக் காணப்பட்ட நிலப்பரப்பை அதிகரித்தார் என நயவஞ்சகர்கள் குற்றம் சுமத்தினர், அதன் பின்னணிகளையும் உண்மைகளையும் ஆழமாக நோக்கும்போது:-

1. இது நபி(ஸல்) அவர்கள் காலம் தொட்டே இருந்து வந்த நடை முறையாகும், அதாவது ஜாஹிலிய்யா கால தலைவர்கள் புலம் பெயர்ந்து புதிதாகக் குடியேறும் பகுதியில் தங்கள் நாய்களைக் குரைக்கவிட்டு அதன் ஒலி கேட்கும் தூரம் வரை தனது சொந்தக் கால்நடைகளுக்காக ஒதுக்கிக் கொள்வர், நபி (ஸல்) அவர்கள் இந்நடை முறையை மாற்றியமைத்து இஸ்லாமிய அரசுக்கு வழங்கப் படும் ஸகாத் கால்நடைகளில் ஜிஹாதுக்கும் ஏனைய பொதுப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும் குதிரை, ஒட்டகம் போன்ற கால் நடைகளின் பயன்பாட்டுக்கு அவ்வாறான நிலங்களை ஒதுக்கினார்கள்.

2. அபூபக்ர் (றழி) அவர்கள் காலத்தில் எவ்வித விஸ்தரிப்பும் இப்பகுதி களில் மேற் கொள்ளப்படவில்லை, உமர் (றழி) அவர்கள் காலத்தில் ஜிஹாத் விஸ்தீரணமடைந்து அதற்கான தேவைகளும் அதிகரித்ததோடு ஸகாத், பைத்துல்மால் கால்நடைகளும் அதிகரித்தன, இதனால் அவர்கள் மேலும் பல புதிய பகுதிகளை அரச பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக மாற்றியிருந்தார்கள்.

3. கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் முன்பைவிட விரிவுபட்டதால் ஸகாத் வரவுகளும் அதிகமாகி மேய்ச்சல் நிலங்களின் தேவைகளும் அதிகரித்தன, ஆதலால் அவர்கள் அதில் மேலும் விஸ்தரிப்பு செய்தார்கள். அத்துடன் கலீபா உமர் (றழி) காலத்தில் வறியவர்களான சிலருக்கு அரச தடுப்புப் பகுதிகளில் மந்தை மேய்ப்புக்கு அனுமதி வழங்கி யிருந்தார்கள். கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் காலத்தில் வசதி படைத்தோரும் அதில் போட்டி போடவாரம்பித்தபோது, நிலமையைச் சமாளிப்பதில் பிரச்சினைகளை எதிர்கொண்ட அதன் பொறுப்பாளர் களான கலீபாவின் பணியாளர்கள் ஒட்டுமொத்தமாக அனைவரையும் தடுத்துவிட்டனர்.

இதனையே குழப்பக்காரர்கள் பெரிதுபடுத்தி முக்கியத்துவம் கொடுத்து தமது விஷமப் பிரச்சாரத்திற்குத் துரும்பாகப் பயன்படுத்தினர்.

### தெளிவுரை: 5

அபூதர் அல் கிபாரி (றழி) அவர்களை நாடு கடத்தி துன்புறுத்தியதாக கூறப்பட்ட குற்றச்சாட்டும் அடிப்படையில் வெறும் போலியானது என்பதை பின்வரும் சான்றுகழூடாகத் தெளிவுபடுத்தலாம்:-

அபூதர்(றழி) அவர்கள் மிகக்கடுமையான உலகப்பற்றற்ற கொள்கை யைக் கொண்டிருந்தவர், அந்த வகையில் ஷாம் பகுதியில் அவர் வாழ்ந்து வந்த வேளை சூறதுத் தௌபாவின் 34ம் வசனத்தின் தெளிவுரையில் அவர்கொண்டிருந்த கொள்கையின் அடிப்படையில் “அன்றாட தேவைக்குமேல் செல்வம் தேடுதல் சேமித்து வைத்தல் மார்க்கத்தில் தண்டனைக்குரிய குற்றமாகும்” எனப் பிரச்சாரம் செய்து ஏழைகளைத் தூண்டிவிட்டார். இதனால் பாரிய சிக்கல்களுக்கு முகங்

கொடுத்த அன்றைய கவர்னர் முஆவியா (றழி) அபூதரை அழைத்து உண்மையை உணர்த்த முயன்றார் ஆனால் அது பலனளிக்கவில்லை இறுதியாக கலீபாவிற்கு நிலமையை சுட்டிக்காட்டி கடிதமெழுதினார். அதனடிப்படையில் அபூதரை மதீனாவிற்கு அனுப்பி வைக்கும்படி கலீபா பதிலனுப்பினாரகள். அதற்கேற்ப கவர்னர் அபூதரை ஒரு வழிகாட்டியின் துணையுடன் மதீனாவிற்கு அனுப்பி வைத்தார். மதீனாவை வந்தடைந்த அபூதர் அங்கும் தனது பிரச்சாரத்தை ஆரம்பித்தார், இதனை அவதானித்த கலீபா அவரை அழைத்து உண்மையைத் தெளிவு படுத்தினார் அதுவும் அபூதரில் எந்த மாற்றத்தினையும் ஏற்படுத்த வில்லை. ஆகவே தனிமனித விருப்பு வெறுப்புக்கள், இலாப நஷ்டங் களை விடவும் சமூக நலனே ஓர் ஆட்சியாளருக்கு அவசியம் என்ற அடிப்படையை அபூதருக்கு உணர்த்தி கருத்துக் கேட்டார்கள். அன்றைய சமூக சூழலில் தனது சிந்தனைப் போக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த அபூதர் (றழி) அவர்கள் மதீனாவிற்கு வெளியில் ஒதுங்கியிருக்கத் திட்டமிட்டு கலீபாவிடம் “றபதா” எனுமி டத்திற் குடியேற அனுமதி கோரினார். அவணரது விருப்பத்திற் கேற்ப அனுமதியளித்த கலீபா அபூதர்(றழி) அவர்கள் நாட்டுப்புற அறபிகளின் இயல்பிற்கு மாறாதிருக்க இடையிடையே மதீனாவுக்கு வந்து செல்லுமாறு பணித்ததோடு அவருக்கென ஒருதொகை ஒட்டகங் களையும் இரு பணியாட்களையும் வழங்கியதோடு அன்று முஸ்லிம்கள் பெற்று வந்த அரச உதவித்தொகை போன்ற ஒரு தொகையை தொடர்ந்து வழங்குமாறும் உத்தரவிட்டு ஒதுங்கி வாழ அவருக்கு அனுமதி வழங்கினார்கள்.

அபூதர்(றழி) கலீபாவிடம் அனுமதி கோரும் போது நபி(ஸல்) அவர்கள் தமக்குக் கூறிய ஓர் உபதேசத்தைச் சுட்டிக்காட்டினார்கள் அதாவது “மதீனா நகரமயமானால் அதைவிட்டு வெளியேறு” எனப் பணித்துள் ளார்கள் என்பதே அந்த உபதேசமாகும்.

அதேபோல் அப்துல்லாஹிப்னு மஸ்ஊத்(றழி) அவர்கள் அபூதர்(றழி) அவர்களின் ஜனாஸாவிற்கு சமுகமளித்தபோது “அபூதர் தனியாகவே செல்வார், தனியாகவே மரணிப்பார், தனித்தே எழுப்பப்படுவார்” என நபி(ஸல்) அவர்கள் கூறியது உண்மையாகிவிட்டது எனக்கூறினார்கள்.

**மேற் கூறப்பட்டவற்றிலிருந்து நாம் பல உண்மைகளை புரிந்து கொள்ள முடியும் அதாவது :-**

1. அபூதர்(றழி) அவர்கள் பொருளாதாரம் சம்பந்தமாகக் கொண்டிருந்த கொள்கை இஸ்லாத்தினதும், இன்று வரையுள்ள இஸ்லாமிய அறிஞர் களதும் விளக்கங்களுக்கு முரணானது. இருப்பினும் இஜ்திஹாத் இஸ்லாம் ஊக்குவிக்கும் விடயமாதலால், அவரது ஆய்வில் ஏற்பட்ட தெளிவின்மைக்காக அவரைக் குறைகூற முடியாது.
2. கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் அபூதர் (றழி) அவர்களை மதித்து அவருடன் கௌரவமாகவே நடந்து கொண்டார்களே அன்றி கடுமையாக நடந்துகொள்ளவில்லை, அதுமட்டுமல்லாது அவருக்குப் பிரார்த்தனையும் புரிந்துள்ளார்கள்.
3. அபூதர் (றழி) அவர்களை கலீபா நாடு கடத்தவில்லை மாறாக அவராகவே மதீனாவுக்கு சுமார் மூன்று மைல்கள் தொலைவிலுள்ள "றபதா" என்னும் ஒரு கிராமத்தை தனது துறவற வாழ்க்கைக்குத் தேர்ந்தெடுத்தார்கள்.
4. அபூதர் (றழி) அவர்களின் நிலைப்பாடு சரியென அன்றைய ஸஹாபாக்கள் கண்டிருந்தால் கலீபாவிடம் நேரடியாக அதனை சுட்டிக் காட்டியிருப்பார்கள், அல்லது குறைந்தபட்சம் அவர்களில் ஒரு தொகை யினராவது அவரது கொள்கையில் ஈர்கப்பட்டு அவருடன் இணைந்து வெளியேறியிருப்பார்கள், ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை.

எனவே இது வெறுமனே இஸ்லாத்தின் எதிரிகளான நயவஞ்சகர்களின் திட்டமிட்ட விஷமப் பிரச்சாரமேயன்றி வேறில்லை என்பது தெளிவாகின்றது.

**தெளிவுரை: 6**

சொந்தக்காரர்களைப் பதவிகளில் அமர்த்துகிறார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக:-

கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் பதவியேற்ற பின் அவரது உறவுக் காரர்களையே பெரிய பதவிகளில் அமர்த்துகிறார் என எதிரிகள் குற்றம் சுமத்தினர். அவ்வாறு அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட முஆவியா, அப்துல்லாஹ் பின் ஆமிர், அல் வலீதிப்ன் உக்பா,

மர்வான் போன்றவர்களது பதவி வரலாற்றை எடுத்து நோக்கும் போது அவர்களிற் சிலர் நபி (ஸல்) அவர்கள் காலம் தொட்டே தளபதிகளா கவும் கவர்னர்களாகவும் ஏனைய பொறுப்பு வாய்ந்த பதவிகளிலு மிருந்து வந்துள்ளனர்.

இன்னும் சிலர் கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் காலம் தொட்டே பொதுப்பணிகளிலும், பொறுப்பான பதவிகளிலும் நியமிக்கப்பட்டு வந்துள்ளனர். இன்னும் சொல்லப்போனால் தகைமையும், அனுபவமும் கொண்ட இவர்கள் உஸ்மான் (றழி) அவர்கள் ஆட்சிக்கு வருமுன்பே நிர்வாகத் துறையில் நுழைந்து ஆற்றல் பெற்றிருந்தனர். எனவே அவ்வாறான அனுபவமிக்கவர்களின் சேவையைப் பெற்று நிர்வாகத்தை செம்மை செய்யவே கலீபா அவர்களைத் தொடர்ந்தும் பதவியிலமர்த்தி னார்கள்.

இது ஒரு புறமிருக்க ஆட்சி பீடத்திலுள்ள அனைவருமே தமது உத்தரவுகளுக்குக் கட்டுப்படக்கூடிய உயரதிகாரிகளைத் தேடி நியமிப்பதானது வழக்கமானதும் நியாயமானதுமாகும். அதைவிடுத்து குறைஷிகள், அல்லது குடும்பத்தவர்கள் என்ற காரணத்தால் தகைமை யுடையவர்களை ஒதுக்கிவிட்டு திறமையற்ற குழப்பமேற்படுத்தக் கூடியவர்களை நியமிக்கக் கோருவதோ நியமனம் செய்வதோ அறிவுடைமையாகாது.

எனவே இந்த வகையில் விஷமிகளின் பிரச்சாரம் முற்றிலும் வேடிக்கை யானதும் விஷமத்தனமானதுமாகும். அடிப்படையில் கலீபா சரியாகவே காணப்பட்டாரென்பது நடுநிலையாளர்களுக்கு விளங்காதவையல்ல

இவை போன்ற இன்னும் பல அற்பமான குற்றச்சாட்டுக்களையும் வீண் பழிகளையும் நயவஞ்சகர்கள் திட்டமிட்டு கலீபாவின் மீது சுமத்தி, கலீபாவைப் பற்றியோ அல்லது நேர்வழி நடந்த ஸஹாபாக்கள் பற்றியோ தெளிவாகப் புரிந்திராத தூரப்பிரதேசத்து முஸ்லிம்களிடமும், அறிவிற் சூன்யமானவர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்து கிளர்ச்சிக்கு ஆட்திரட்டி கிலாபத்தை அழிக்க முற்பட்டனர்.

## உஸ்மான்(றழி) அவர்களுக்கெதிரான கிளர்ச்சியும் அவர்கள் கையாண்ட வழிமுறைகளும்.

மேலே குறிப்பிட்டது போன்று யூத நயவஞ்சகன் அப்துல்லாஹிப்னு ஸப∴. தனது பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொள்ள இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தூரப் பகுதிகளைத் தெரிவு செய்து அதிலும் அறிவிற் குறைந்த பாமரர்கள் வாழும் பகுதிகளிலேயே கூடுதல் கவனம் செலுத்தி வந்தான். அந்த வரிசையில் எகிப்து, கூபா, பஸ்றா போன்ற பிரதேசங்களின் பின் தங்கிய பகுதிகளிலேயே அவனது பிரச்சாரம் கூடுதல் செல்வாக்குப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவ் விஷமப் பிரச்சாரத்தால் கவரப்பட்ட பல வாலிபர்கள் இப்னு ஸபஇன் பின்னால் அணிதிரள ஆரம்பித்தனர், விபரீதத்தை உணர்ந்த கலீபா அவர்கள் மேற்படி அபாயத்தை முறியடிக்க பல வழிமுறைகளைக் கையாண்டார்கள்.

### அவற்றை பின்வருமாறு நிரற்படுத்தலாம் :-

1. கூபா வாசிகள் சிலர் நெறிபுரண்டு அங்கிருந்த கலீபாவின் கவர்னரோடு குழம்பிக் கொண்டிருந்தனர், அதனை முடிவுக்கு கொண்டு வர பலவாறு முயன்றும் பலன் கிட்டவில்லை ஆதலால் கவர்னர் நிலமையைத் தெரிவித்து கலீபாவுக்கு எழுதினார். தீர்வாக கலீபா குழப்பக்காரர்களில் முண்னணி வகிப்பவர்களை அடையாளங்கண்டு அவர்களனைவரையும் சிரியாவுக்கு நாடு கடத்துமாறு பணித்ததோடு சிரிய கவர்னர் முஆவியா(றழி) அவர்களுக்கு நிலமையைத் தெளிவு படுத்தி வருபவர்களுடன் நல்ல வழிமுறைகளைக் கையாண்டு அவர்களை நெறிப்படுத்த முயலுமாறும் கட்டளை பிறப்பித்தார்கள். அமீர் முஆவியாவும் குழப்பக்காரர்களை சீர்திருத்த பல்வேறு வழி முறைகளைக் கையாண்டார் ஆயினும் அவர்கள் தமது அறியாமையிற் பிடிவாதமாகவே இருந்தனர்.

2. மேலும் பஸ்றாவிலிருந்து ஒரு பிரிவை எகிப்துக்கும் மற்றுமொறு குழுவினரை ஷாமுக்கும் அனுப்பி வைத்தார்கள்.

3. ஸஹாபாக்களின் ஷூறா சபையைக்கூட்டி நிலைமையை ஆராய்ந்து அவர்களது வழிகாட்டலுக்கேற்ப நடவடிக்கை மேற்கொண்டார்கள்.

4. இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் தகமை வாய்ந்த நம்பகமான தூதுவர்களை அனுப்பி யதார்த்தத்தைப் புரிய வைக்க முயற்சித்தார்கள்.

5. மாகாண கவர்னர்கள், தளபதிகளை ஒன்று கூட்டி நிலைமையை ஆராய்ந்ததோடு குழப்பக்காரர்களோடு கடும்போக்கினைக் கையாளாது தண்டனைகளுக்குப் பதிலாக புத்திமதி கூறி நல்வழிப்படுத்த முயலு மாறும் பணிப்புரை விடுத்தார்கள்,

   கலீபா விரும்பியிருந்தால் குழப்பக்காரர்களை விரும்பியவாறு தண்டித்தி ருக்கலாம் அல்லது சிறையிலடைத்திருக்கலாம் அல்லது மரண தண்டனையே விதித்திருக்கலாம். இருப்பினும், அவரது இரக்க சிந்தை அவற்றுக்கெல்லாம் இடமளிக்கவில்லை. அகிம்சை முறைகளையே கடைப்பிடித்தார்கள். அதனைக் குழப்பவாதிகள் முறையாகப் புரியாது கலீபாவின் பலவீனமாகக் கருதினார்கள் என்பது இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

6. குழப்பக்காரர்களைத் தூண்டிவிடும் பின்னணிகளைக் கண்டறிந்து, அவர்களது குறைகள் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கட்டளை பிறப்பித்தார்கள்.

7. குழப்பக்காரர்களின் சில வேண்டுகோள்களை ஏற்று அவர்கள் விரும்பியவாறு சில கவர்னர்களை பதவி நீக்கம் செய்து, அவர்கள் கேட்டுக் கொண்டவர்களை நியமனமும் செய்தார்கள்.

8. மதீனாவை நோக்கித் திரண்டு வந்திருந்த கும்பலை மஸ்ஜிதுன் நபவீயில் ஒன்று சேர்த்து அவர்களுக்கு தகுந்த ஆதாரங்களுடன் பதிலளித்தார்கள். குழப்பக்காரர்கள் திருப்தியடைந்து தமது கொள்கை களிலிருந்து மீண்டுவிட்டதாக கலீபாவிடம் உறுதியுமளித்தனர்.

   இவ்வாறு ஓர் இரக்க சிந்தனையுள்ள ஆட்சியாளர் என்ற வகையில் முடிந்தவரை அகிம்சை வழியில் அனைத்து விடயங்களுக்கும் தெளிவான பதிலையும் சிறந்த தீர்வுகளையும் கலீபா அவர்கள் முன்வைத்தும், குழப்பக்காரர்களின் பின்னணி சக்திகள் அவர்களை திருப்தி காணவோ தமது மடமையிலிருந்து விடுபடவோ சந்தர்ப்ப மளிக்கவில்லை, மாறாகத் தமது

சதித்திட்டங்களில் பிடிவாதமாக இருந்ததோடு அதற்கு சாதகமாக மதீனாவிலிருந்த அலீ, தல்ஹா, ஸுபைர், ஆயிஷா(றழி) ஆகியோரது பெயர்களில் அவர்கள் கலீபாவுக் கெதிராக படைதிரட்டி வருமாறு அழைப்பது போன்று பொய்யாக கடிதங்களை தயாரித்து மக்கள் முன் காட்டி ஆதரவு திரட்டினார்கள். இவையனைத்தும் இப்னு ஸபஇனதும் அவனது கூலிப் படைகளினதும் இரகசியத் திட்டமே என்பது வரலாறு தெரிந்தவர்களுக்குப் புதிதல்ல.

## நயவஞ்சகர்களின் கபடங்களும் குரூரச் செயல்களும்:-

கடிதப் பறிமாற்றங்களால் தங்களுக்குள் தொடர்புகளை வைத்திருந்த எகிப்து, கூபா, பஸ்றாவைச் சேர்ந்த இப்னு ஸபஇன் ஆதரவாளர்கள் உம்றாவுக்குச் செல்லும் பாசாங்குடன் ஹிஜ்ரி 35ம் வருடம் ஷவ்வால் மாதம் மதீனா நோக்கிப் புறப்பட்டனர். சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் தத்தமது தலைவர்களுடன் மூன்று பிரிவுகளாகப் புறப்பட்டு மதீனாவை அடைந்ததும் மூன்று வெவ்வேறு முகாம்களிலே தங்கியிருந்தனர், அவர்களுள் எகிப்தியர்கள் உஸ்மான் (றழி) அவர்களை பதவிநீக்கியபின் பதிலாக அலீ(றழி) அவர்களையும், கூபாபிரிவினர் ஸுபைர்(றழி) அவர்களையும், பஸறாபிரிவினர் தல்ஹா (றழி) அவர்களையும் நியமிப்பதென தத்தமக்குள் திட்டமிட்டிருந்தனர். அதனடிப்படையில் அவரவர் தமக்குப் பிடித்தமானவரைத் தனிமையில் அணுகவும் திட்டமிட்டிருந்தனர்.

“கிளர்ச்சிக்காரர்கள் கூட ஒரே கருத்தில் ஒன்றுபடக்கூடாது என்பதில் நயவஞ்சகன் இப்னு ஸப.். மிகவும் அவதானமாக செயல்பட்டுள்ளான். அதாவது உஸ்மான் (றழி) அவர்களைக் கொல்வதில் ஒருமித்தும் அதன் பின்னர் முரண்பட்டும் சீரழிய வேண்டும் என்பதற்காகவும் இவ்வாறு திட்டமிட்டுள்ளான் ஆனால் அந்த ஸஹாபாக்கள் பதவிமோக மற்றவர்கள் என்பதால் அவனது திட்டம் முழுமையாக நிறைவேற வில்லை”. இதனிடையில் குழப்பக்காரர்கள் அணிதிரண்டுள்ளமையை அறிந்து கொண்ட மதீனாமக்கள் மேற்கூறப்பட்ட ஸஹாபாக்களின் தலைமையிற் குழப்பவாதிகளை எதிர்கொள்வதற்காக மதீனாவிற்கு வெளியில் முகாமிட்டிருந்தனர்.

திட்டமிட்டவாறு குழப்பக்காரர்களின் பிரதிநிதிகள் தத்தமது திட்டங்களை வெளிப்படுத்த மேற்படி மூன்று தலைவர்களையும் தனித்தனியாக அணுக முற்பட்டபோது மூவருமே ஒரே வகையான பதிலைக்கூறி அவர்களை நெருங்கக்கூட விடாது வெருட்டி விட்டனர். பின்னர் கலீபாவின் வழிகாட்டலுக்கேற்ப அலீ(றழி) குழப்பக்காரர் களுடன் மேற்கொண்ட சமரச முயற்சியால் தத்தமது பகுதிகளுக்குத் திரும்பி விடுவது போல் பாசாங்கு செய்து சில நாட்கள் பயணித்தபின் திடீரென தக்பீர் முழக்கத்துடன் மதீனாவை முற்றுகையிட்டனர், குறிப்பாக கலீபாவின் வீட்டையே அதிகமானோர் சூழ்ந்திருந்தனர்.

போனவர்கள் மீண்டும் ஏன் திரும்பி வந்திருக்கின்றனர் என்பதை அலீ(றழி) அவர்கள் வினவியபோது "கலீபா எகிப்தைச் சேர்வர்களைக் கொன்றும், சிறையிலடைத்தும், கைகால்களை வெட்டியும் சித்திரவதை செய்யும்படி பணித்து தமது கவர்னருக்குக் கடிதமெழுதி அதனைத் தமது அடிமையிடம் கொடுத்து ஸகாத் ஒட்டகத்ததில் அனுப்பியிருந்த தாகவும் இடைவழியில் அதனைத் தெரிந்து கொண்டதும் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்து திரும்பியதாகவும்'' அவர்கள் பதிலளித்தனர்.

எகிப்தியர்கள் ஒரு திக்கிலும் இறாக்கியர்கள் அதற்கு நேரெதிரான மறு திசையிலும் பல நாட்கள் பயணித்தபின் ஒரே நேரத்தில் இரு தரப்பினரும் மதீனாவை வந்தடைவது சாத்தியமற்றது ஆகவே இது இங்கிருந்தே திட்டமிடப்பட்ட சதியாகும் என அலீ (றழி) கூறியபோது நீங்கள் எப்படி வைத்தாலும் சரி இவர் (கலீபா) எங்களுக்குத் தேவை யில்லை எனக்கூறினர். நிலைமையை அவதானித்த கலீபா கிளர்ச்சிக் காரர்களுக்கு உண்மையை உணர்த்தி உடன்பாட்டுக்கு வரும் முயற்சி யில் தனக்கும் கடிதத்துக்கும் எவ்வித தொடர்புமில்லையென சத்திய மிட்டுக் கூறியபோது மர்வானைக் குற்றம் சுமத்தி அவருக்குத் தண்டனை வழங்க தம்மிடம் ஒப்படைக்குமாறும் கோஷமெழுப்பினர்.

அத்துடன் மதீனாவாசிகள் மீது ஆவேஷமடைந்தவர்களாக எம்முடன் யாரும் மோதிக் கொள்ளாதவரை உங்கள் உயிருக்கு உத்தரவாத முண்டு இல்லையேல் ஆயுதங்கள் பிரயோகிக்கப்படுமென எச்சரித்தனர். தொடர்ந்து பல அசம்பாவிதங்கள் நடந்தமையால் மதீனா வாசிகள் செய்வதறியாது வீடுகளுக்குள் முடங்க ஆரம்பித்தனர், இருந்தும் அலீ, தல்ஹா, ஸுபைர்(றழி) போன்ற

முக்கிய ஸஹாபிகள் தங்கள் ஆண் பிள்ளைகளை ஆயுதம் தாங்கிய சுமார் 700 ஸஹாபாக்களுடன் இணைந்து கலீபாவுக்குப் பாதுகாப்பு வழங்க அனுப்பியிருந்தனர்.

மேற்கூறப்பட்ட விடயங்களினடிப்படையில் கலீபா உஸ்மான்(றழி) அவர்களின் படுகொலை நிகழ்வு தொடர்பாக, நயவஞ்சகர்களாலும் வர்க்க வெறியாளர்களாலும் முன்வைக்கப்படும் விமர்சனங்கள் குற்றச் சாட்டுக்களுக்குத் தகுந்த பதில்களை முன்வைக்கமுடியும்.

## கலீபாவின் படுகொலை விடயத்தில் முன்வைக்கப்படும் சில விமர்சனங்களும் குற்றச் சாட்டுக்களும் :-

1. உஸ்மான் (றழி) அவர்களின் படுகொலைக்கு அலீ, தல்ஹா, ஸுபைர் (றழி) போன்ற முக்கிய ஸஹாபாக்கள் உடந்தையா யிருந்தனர்.
2. மதீனாவாசிகள் கலீபாவைப் பாதுகாக்க முன் வரவில்லை.
3. கலீபாவின் பெயரால் கடிதமெழுதி அவர் கொல்லப்படுவதற்கு வழி சமைத்தவர் மர்வானிப்னு ஹகமேயாகும். என்பன போன்ற பல விமர்சனங்களும், குற்றச்சாட்டுக்களும் வரலாற்றில் காணப்படுகின்றன. அவற்றை நாம் ஆழமாக நோக்கும் போது ஒன்றில் அவர்கள் வரலாற்றில் தெளிவற்றவர்கள், அல்லது தவறான அரசியல் இயக்கங்களின் பின்னால் அணிதிரண்டவர்கள் எனக் கொள்ளமுடியும்.

## குற்றச்சாட்டுக்களையும் அதற்கு முரணான உண்மைகளையும் அவதானிக்கும் போது :-

1. ஸஹாபாக்கள் பெயரில் எழுதப்பட்ட கிளர்ச்சியைத் தூண்டும் அனைத்து ஆவணங்களும் போலியானவை அவற்றைச் செய்தவன் கலீபா உஸ்மான் (றழி) அவர்களின் பராமரப்பில் வளர்க்கப்பட்டு பின்னர் அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்டு ஒழித்தோடிய முஹம்மதிப்னு அபீஹுதைபா என்பவனாற் தயாரிக்கப்பட்டவைகளாகும்.

   "முஹம்மதிப்னு அபீஹுதைபா என்றழைக்கப்படும் இவன் கலீபாவுக் கெதிராக அணிதிரட்டும் வேலையில் ஈடுபட்டான், அதற்காக அவனுக்குத் தோன்றிய அனைத்து யுக்திகளையும்

கையாண்டான் அதில் ஒன்றே அவன் சிலரைத் தெரிவு செய்து அவர்களைக் காலை வெயிலில் வீட்டின் கூரைகளின் மேல் ஏறவைத்து நீண்ட பயணம் செய்து களைத்தவர்கள் போன்று மாற்றி அவர்களது பிரயாணப் பொதியுள் உம்மஹாதுல் மு.:.மினீன் மற்றும் அலீ, தல்ஹா, ஸுபைர் (றழி) போன்ற முக்கிய ஸஹாபாக்கள் பெயரில் புனையப்பட்ட கடிதங்களை மறைத்து வைத்து அவர்களை மக்காவிலிருந்து எகிப்து வரும் பாதைக்கு அனுப்பி அங்கிருந்து அவர்கள் வருவதோடு அவர்களது வரவை மக்களுக்குப் பறைசாற்றி அவர்களது வருகையைத் தெரிவித்து மக்களைக்கூட்டி அவர்கள் முன் இவற்றை வாசித்துக்காட்டி அப்பாமரர்களின் ஆக்ரோஷத்தைத் தூண்டிக் கொண்டிருந்தான்".

2. கலீபா முற்றுகையிடப்பட்டபோது அன்னை ஆயிஷா (றழி) அவர்கள் ஹஜ் கடமைக்காக மக்கா சென்றிருந்தார்கள் அங்கு அவர்களிடம் மஸ்றூக் இப்னுல் அஜ்த.:. அல்ஹமதானி என்ற இமாமவர்கள் நீங்கள் ஏன் கலீபாவிற்கு எதிராகக் கடிதெமெழுதி மக்களை குழப்புகிறீர்கள்? என்று அதிருப்த்தியோடு கேட்டார்கள். அதற்கவர்கள் மிக அழுத்தமாக அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு அவ்விவகாரத்தில் தமக்கு எவ்விதத் தொடர்புமில்லை என வருத்தத்தோடு தெரிவித்தார்கள்.

3. குழப்பக்காரர்கள் புறப்படும் செய்தி அறிந்து அவர்களை தடுத்து நிறுத்த ஆட்திரட்டி அவ்வணிகளுக்கு தலைமை வகித்து மதீனாவுக்கு வெளியில் முகாமிட்டிருந்தவர்கள் அலீ, தல்ஹா, ஸுபைர் (றழி) போன்ற முக்கியஸ்தர்களே.

4. குழப்பக்காரர்கள் இரகசியமாக அம்மூவரையும் அணுக முற்பட்ட போது அனைவருமே ஒரே வகையான பதிலைக் கூறி துரத்தியடித் தார்கள் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

5. கலீபா படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்து கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனக் குரலெழுப்பியவர் களுள் அன்னை ஆயிஷா, தல்ஹா, ஸுபைர் (றழி) போன்றோர் முக்கியமானவர்களாகும்.

6. கலீபாவுக்கு முக்கிய ஆலோசகர்களாக இவர்கள் இருந்துள்ளதோடு இறுதிவரை கலீபாவுக்கான தங்கள் விசுவாசத்தைப் பேணியே வந்துள்ளனர்.

**இரண்டாம் குற்றச்சாட்டுத் தொடர்பாக :-**

1. குழப்பக்காரர்கள் தங்களது திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்கு தக்க தருணமாக ஹஜ்ஜுக் காலத்தைத் தேர்ந்தெடுத்திருந்தனர், ஏனெனில் அவ்வேளை மதீனாவாசிகளில் அதிகமானோர் ஹஜ்ஜுக்காக புறப்பட்டுச் சென்றிருந்தனர்.

2. மதீனா வாசிகள் கலீபா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்கவோ, அல்லது கலீபா பதவிக்குத் தகுதியில்லை, அவரை பதவி நீக்கம் செய்யவேண்டும் என்பதிலோ உடன்பட்டிருக்கவில்லை.

3. கலீபாவிற்கு உயிராபத்து வருமென்பதை மதீனா வாசிகள் சற்றும் எதிர்பாத்திருக்கவில்லை.

4. குழப்பக்காரர்கள், தங்களுடன் மோதிக் கொள்வோரை கொல்வதாக எச்சரித்தமையாலும் அவர்களின் நாகரிகமற்ற நடவடிக்கைகளாலும் விலகி நடக்க எண்ணினர் மதீனா வாசிகள்.

5. பிரச்சினையின் ஆரம்பகட்டங்களில் நகருக்கு வெளியில் சென்று குழப்பவாதிகளை தடுத்து நிறுத்தும் முயற்சியில் மதீனாவாசிகள் ஒன்று பட்டுசெயற்பட்டனர்.

6. தாம் எண்ணிக்கையில் குறைந்தவர்களாயிருந்தும் இறுதி மூச்சுவரை போராடி கலீபாவை ஆபத்திலிருந்து விலக்குவதற்குப் போராட அணி திரட்டினர், இருந்தபோதிலும் முஸ்லிம்களுக்கு மத்தியில் இரத்த ஆறு ஓடக்கூடாது என்பதற்காக கலீபா வேண்டாம் என்று அல்லாஹ்வின் பெயரால் கேட்டுக் கொண்டதனாலேயே மதீனாவாசிகள் பின்வாங்கினர்.

7. ஆவேஷம் கொண்ட சிலர் கலீபாவின் வேண்டுகோளைக் கூடப் பொருட்படுத்தாது குழப்பக்காரர்களுடன் மோதலில் ஈடுபட்டனர் என வரலாறு கூறுகின்றது.

8. இறுதிக்கட்டத்திற் கூட பின் வழியூடாகவே கலீபாவின் இருப்பிடத்தை எதிரிகள் சென்றடைந்தனர், அதுவரை அவர்களால் முன்வாயிலூடாக உட்செல்ல முடியாது இளம் ஸஹாபாக்கள் காவலில் ஈடுபட்டிருந்தனர்.

மேற்கூறப்பட்வற்றிலிருந்து துரோகிகளைத் துரத்தியடிக்க அல்லது தடுத்துநிறுத்த மதீனாவாசிகள் பலவழிகளிலும்

முயன்றுள்ளனர். ஆயினும் தமது இறுதிக்கட்டத்தை நன்கு விளங்கியும் இறைவனின் தீர்ப்பை பூரணமாக நம்பியுமிருந்த கலீபா நிச்சயிக்கப்பட்ட மரணத்தை எவ்வகையிலும் தடுத்துவிட முடியாதென்பதால் வீணாக முஸ்லிம்களின் இரத்தம் ஓட்டப்படுவதை தவிர்ப்பதற்கே முயன்றார்கள். எனவே மதீனா வாசிகளைக் குறைகூறுதல் நியாயமற்றதாகும்.

**மூன்றாம் குற்றச்சாட்டுத் தொடர்பாக :**

எகிப்திலிருந்து வந்திருந்த குழப்பக்காரர்களை கொன்றும் கை கால்களை வெட்டியும் சிறையிலடைத்தும் சித்திரவதை செய்யுமாறு பணித்து கலீபா கடிதமெழுதினார், அல்லது கலீபாவின் செயலாளராக இயங்கி வந்த மர்வானிப்னு ஹகம் கலீபாவிற்குத் தெரியாமல் இதனைச் செய்திருக்கலாம் என்பதே குழப்பக்காரர்களின் வாதமாகும். ஆனால் இவை இரண்டிலும் எவ்வித உண்மையுமில்லை என்பதைப் பின்வருமாறு தெளிவுபடுத்தலாம்.

1. குழப்பக்காரர்கள் மதீனாவுள் நுழைந்தபோது, கலீபா அவர்கள் அலீ (றழி) அவர்களது மத்தியஸ்தத்துடன், அவர்களது வேண்டுகோள்களை பரிசீலித்து அவற்றைத் தீர்த்துவைப்பதாக உறுதிமொழி வழங்கியதால் வந்தவர்களும் திருப்தியுடன் தத்தமது இடம் நோக்கித் திரும்பினர், அதில் எகிப்தியர்கள் வடமேற்கு நோக்கியும் கூபா, பஸறா வாசிகள் வடகிழக்கு நோக்கியும் சுமார் ஒரு வார காலம் பயணித்துமிருந்தனர்.

2. திடீரென தக்பீர் முழக்கத்துடன் மதீனாவை முற்றுகையிட்டபோது அலீ(றழி) அவர்கள் குழப்பவாதிகளை விழித்து காரணம் கேட்டபோது கலீபா எங்களுக்கு வாக்குறுதி வழங்கிவிட்டு இரகசியமாக எங்களை கொல்வதற்கு செய்தியனுப்பியுள்ளார் எனத்திட்டியவாறு எகிப்தியரும், எங்கள் சகோதரர்களுக்கு உதவ வந்தோமென இறாக்கியர்களும் பதிலளித்தனர்.

   இதனைக் கேட்ட அலீ (றழி) அவர்கள் நீங்கள் இரு பிரிவினரும் நேரெதிர்த் திசையில் பல நாட்கள் பயணித்துவிட்டு திடீரென ஒரே நேரத்தில் மீண்டும் மதீனாவை அடைவதென்பது சாத்தியமற்றதாகும்.

   எனவே இது நீங்கள் புறப்படுமுன்பே மதீனாவிற்

திட்டமிட்டுள்ளீர்கள். என்றதும் குழப்பக்காரர்கள் நீங்கள் எவ்வாறு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள் ஆனால் இவர் எங்களுக்குத் தேவையில்லை எனக் கோஷமிட்டனர்.

**"தொலைத் தொடர்பு வசதிகளற்ற அக்காலத்தில் அவர்கள் தங்களுக்கிடையில் செய்திப் பரிமாற்றம் செய்து, மீண்டும் மதீனா திரும்புவதானால் ஆகக் குறைந்தது அவர்கள் பயணித்த காலத்தின் இரு மடங்கு தேவை, ஆனால் அது இங்கு நடைபெறவில்லை என்பது இங்கு கவனிக்கத் தக்கதாகும் ".**

3. இக் குற்றச்சாட்டிற்குப் பதிலளித்த கலீபா குழப்பக்காரர்களை சாட்சியங்களுடன் நிரூபிக்கும்படி கேட்டார், அது அவர்களால் முடிய வில்லை. அத்துடன் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு இவ்விடயத்தில் எனக்கு எவ்வித தொடர்புமில்லை எனப்பிரகடனம் செய்ததோடு, எனது பெயரால் ஒருவர் எழுதி எனது முத்திரை போன்று போலியாக செய்து இதனை நடத்தியிருக்கவும் இடமுண்டல்லவா? என்று கலீபா வினவிய போது பழியை மர்வான் மீது சுமத்தி, அவருக்குத் தண்டனை வழங்கத் தங்களிடம் அவரை ஒப்படைக்குமாறு குழப்பவாதிகள் கேட்டனர், ஆனால் கலீபா அதற்கு மறுத்து விட்டார்.

"நிரூபிக்கப்படாத குற்றத்திற்காக ஒருவரை தண்டிப்பது அநியாயமாகும், அதேவேளை குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டாலும் கூட தண்டனை வழங்கும் அதிகாரம் ஆட்சியாளருக்கேயன்றி கிளர்ச்சிக்காரர் களுக்கல்ல என்பது தெளிவான விடயமாகும்".

4. கிளர்ச்சிக்காரர்கள் எகிப்திலிருந்து மதீனா நோக்கிப் புறப்பட்டதை அறிந்த அன்றைய எகிப்தின் கவர்னர் அப்துல்லாஹிப்னு அபீஸறஹ் அவர்களும் கலீபாவின் அனுமதியுடன் அவரைச்சந்திக்க மதீனா நோக்கி பலஸ்தீன் வழியே புறப்பட்டிருந்தார். அதனைப் பயன்படுத்தி உஸ்மான் (றழி) அவர்களிடமிருந்து ஒழித்தோடி அவர்களுக்கெதிராய்ப் பிரச்சாரம் செய்துவந்த முஹம்மதிப்னு அபீ ஹுதைபா என்பவன் தனது ஆதரவாளர்களோடு எகிப்தின் கவர்னராகத் தன்னைப்பிரகடனம்

செய்து கொண்டான். இவற்றை கலீபா அறிந்திருந்தும் பதவியிலில்லாத ஒருவருக்குக் குழப்பக்காரர்களைத் தண்டிக்குமாறு உத்தரவிடுவது நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.

5. ஏற்கனவே கூறப்பட்டது போன்று பல்வேறு கபட நாடகங்கள், ஏமாற்றுவித்தைகள் காட்டிப் பாமரர்களை வசப்படுத்திய அவர்களுக்கு கலீபாவின் பெயரால் ஒரு கடிதத்தை புனைந்து ஓர் இடையனைக் கூலிக்கமர்த்தி செயற்பட்டிருப்பது தூரமானதல்ல.

6. அக்கடிதத்தில் விபரித்திருப்பது போன்று தண்டனை வழங்குமாறு கலீபா உத்தரவிட்டிருப்பார் எனக்கற்பனை செய்வதுகூட கலீபாவின் இரக்க சிந்தைக்கு முற்றிலும் முரணானதாகும். ஏனெனில் இவர்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் போதெல்லாம் தனது கவர்னர்களிடம் மிருதுவான போக்கினைக் கடைப்பிடிக்குமாறே கட்டளை பிறப்பித்தார்கள், கலீபா விரும்பியிருந்தால் இவர்களை முளையுடனேயே கிள்ளியெறிந்திருக்கலாம் குறைந்த பட்சம் கலீபாவின் சைகைக்கே அணிதிரளும் மதீனா மக்களைப் பயன்படுத்தி முதற் கட்டத்திலேயே அவர்களைத் தீர்த்துக்கட்டியுமிருக்கலாம், அல்லது வெளியிலிருந்து எதிரிகளோடு போர்புரிந்து நன்கு பயிற்றப்பட்டிருந்த இஸ்லாமிய படையணியை உதவிக்கழைத்திருக்கலாம் ஆனால் இரத்த மோட்டுவதை கிஞ்சிற்றும் விரும்பாத கலீபா தயாரானவர்களைக் கூட தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

7. கடிதம் வைத்திருந்தவன் உண்மையில் கலீபாவின் தரப்பிலிருந்து சென்றிருந்தால் குழப்பக்காரர்கள் செல்லும் பாதையிலிருந்து தூரமாகி அவர்களது பார்வைக்கு எட்டாதவாறு விலகிச் சென்றிருப்பான். ஆனால், இவனோ அவர்களது கண்களுக்குப் புலப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கேற்ப அவர்கள் சந்தேகிக்கக் கூடியவாறு அவர்களது கண்களிற் படுவதும், மறைவதுமாய்ப் பாசாங்கு செய்து அவர்களிடம் பிடிபட்டு கடிதத்தை ஒப்படைத்தான். இது முழுமையாக திட்டமிடப்பட்ட கபட நாடகம் என்பதற்கு இந்நிகழ்வே மிகத் தெளிவான சான்றாகும்.

8. சந்தேகத்திற்கிடமில்லாத உண்மை யாதெனில் அப்துல்லாஹ் பின் ஸபஇன் அடிவருடிகளான அல்-அஷ்தர், ஹகீமிப்னு ஜப்லா ஆகிய இரு கயவர்களும் திட்டமிட்டபடி மதீனாவிற் தங்கியிருந்து அவர்களது அதிரடிச் சூட்சியை உறுதி செய்யுமுகமாக கலீபாவின் பெயரால் ஒரு கடிதத்தை தயார் செய்து அனுப்பிவைத்தனர் என்பதேயாகும்.

## உஸ்மான்(றழி) அவர்கள் அநீதியாகவே படுகொலை செய்யப்படுவார் என்பதை உறுதிசெய்யும் முன்னறிவிப்புக்கள்:

1. அன்னை ஆஇஷா (றழி) அவர்களூடாக நு.்.மானிப்னு பஷீர் (றழி) அவர்கள் அறிவிப்பது:- நபி (ஸல்) தமது இறுதிக்காலத்தில் உஸ்மான் (றழி) அவர்களை வரவழைத்தார்கள். அவர் வந்ததும் நபியவர்கள் அவர் பக்கம் திரும்பினார்கள், அதனைக் கண்டதும் நாங்கள் (உம்மஹாதுல் மூ.்.மினீன்) ஒருவரையொருவர் நோக்கினோம். நபியவர்கள் உஸ்மானின் தோளைத்தட்டி தனது இறுதிப்பேச்சை அவருடன் பேசினார்கள். அதில் உஸ்மானே! அல்லாஹ் உமக்கோர் ஆடையை அணிவிக்கக்கூடும். அதனைக் கழற்றுமாறு நயவஞ்சகர்கள் கேட்டால் என்னுடன் வந்து சேரும் வரை அதனைக் கழற்றிவிடாதே என்று மூன்று முறை கூறினார்கள்.

(ஆதாரம்: முஸ்னத் அஹ்மத்)

2. இன்னுமோர் அறிவிப்பில் நபி(ஸல்) அவர்கள் எனக்கொரு உறுதி மொழி வழங்கியுள்ளார்கள். அதற்காக நான் என்னை அர்ப்பணிக் கிறேன் என உஸ்மான்(றழி) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: அஹ்மத்)

3. இப்னு உமர்(றழி) அவர்களூடாக அறிவிக்கப்படுகிறது:- ஒரு குழப்பத்தைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுவிட்டு அதில் இதோ தலையை மூடிக்கொண்டிருப்பவர் அநியாயமாகக் கொல்லப் படுவார் எனக்கூறினார்கள். நான் உடனே சென்று பார்த்தபோது அங்கு உஸ்மான் (றழி) அவர்கள் காணப்பட்டார்கள்.

(ஆதாரம்: திர்மிதி, அஹ்மத்)

4. மூஸா பின் உக்பா(றழி), அவரது பாட்டனார் ஊடாக அறிவிக்கிறார்கள்: உஸ்மான் (றழி) அவர்கள் விரோதிகளால் முற்றுகையிடப் பட்டிருந்த போது அபூஹுறைரா(றழி) அவரிடம் பேச அனுமதி கேட்டுப் பேசினார். அதில் அவர், அல்லாஹ்வைப் புகழ்ந்த பின் நபி (ஸல்) அவர்கள்: நீங்கள் எனக்குப் பின் குழப்பத்தையும், முரண்பாடுகளையும் சந்திப்பீர்கள் எனக்கூறினார்கள், அப்போது கூடியிருந்தவர்களில் ஒருவர் அப்போது நாங்கள் யாருடன் இருக்க வேண்டும் யாறஸூலல்லாஹ் எனக்கேட்க, அவர்கள் உங்கள் - உஸ்மான்(றழி) - பக்கம் சைகை செய்து நீங்கள் அமீனையும் அவரது ஆதரவாளர்களையும் சேர்ந்திருங் கள். அவர்களைப் பிரிந்து விடவேண்டாம் எனக் குறிப்பிட்டதாகக் கூறினார்கள்.

(ஆதாரம் : அஹ்மத்)

5. முர்ரதுல் பஹஸீ (றழி) வாயிலாக இமாம் அஹ்மத் (றஹ்) அறிவிக்கிறார்கள்: ஒருமுறை நாங்கள் நபியவர்களுடன் மதீனாவின் ஒரு பாதையால் சென்று கொண்டிருக்கும் போது மாட்டின் கொம்பு போல் பூமியின் பல பகுதிகளிலிருந்தும் வெடிக்கவிருக்கும் குழப்பக் காலத்தில் எவ்வாறு நடந்து கொள்ளப்போகிறீர்கள்? என வினவினார் கள். அதற்கு அனைவருமே நாங்கள் என்ன செய்யவேண்டும் யாறஸூலல்லாஹ் எனக் கேட்டோம். அதற்கு நபியவர்கள் (ஒருவரை சுட்டிக்காட்டி) அவரையும் அவரது தோழர்களையும் பின்பற்றி நடவுங்கள் எனப்பதிலளித்தார்கள். நான் உடனே மூச்சிரைக்க விரைந்து சென்று அம்மனிதரைக் காட்டி இவரா? எனக் கேட்டேன், ஆம் என்றார்கள். அங்கே பார்த்தபோது உஸ்மான் (றழி) அவர்கள் காணப்பட்டார்கள். (ஆதாரம் : அஹ்மத்)

இவை போன்ற இன்னும் சில அறிவிப்புக்கள் நயவஞ்சகர்களின் இக்கிளர்ச்சியை முற்கூட்டியே பறைசாற்றியுள்ளதோடு அதில் கலீபா உஸ்மான் (றழி) குற்றமற்றவராகவும் அநியாயமாகவுமே கொல்லப் படுவார். குழப்பக்காரர்கள் நயவஞ்சகர்கள். அவர்களது கோஷங் களில் எவ்வித உண்மையுமிருக்காது என்பதையெல்லாம் மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டுகின்றது.

ஆகவே, இவ்விடயத்தில் கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் நடந்து கொண்டதை அவதானிக்கும் போது அவர்கள் நபி (ஸல்) அவர்களது வாக்கில் முழுமையான நம்பிக்கையும், மறுமையையே தமது முழு இலக்காகவும், தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒரு மரணம் எவ்வகையிலும் தடுத்து நிறுத்தப்பட முடியாதது என்பதில் உறுதியாகவும் காணப் பட்டுள்ளார்கள். எனவேதான் அதன் பெயரால் எவ்வித அசம்பாவிதமோ இரத்தமோட்டும் நிகழ்வுகளோ நடைபெற்று விடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்திருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டு மென்மேலும் கண்ணியப்படுத்துவானாக.

# கலீபா அலீ இப்னு அபி தாலிப் (றழி) அவர்கள்

### 1. கிலாபத்தைப் பொறுப்பேற்ற பின்னணிகள் :

நான்காம் கலீபா அலீ (றழி) அவர்கள் கிலாபத்தை ஏற்று விசுவாசப் பிரமாணம் செய்யப்பட்ட நிகழ்வும் சூழ்நிலையும் முன்சென்ற மூவரினதும் தேர்வுச் சூழலுக்கு முற்றிலும் வித்தியாசமானதாகும்.

முதல் மூன்று கலீபாக்கள் தெரிவிலும் இஸ்லாமிய அரசியல் கோட்பாட்டின்படி அன்றைய தலைநகரில் வசித்து வந்த, பொதுவாக இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் புத்திஜீவிகளின் ஆலோசனைகளுடனும், பூரண அங்கீகாரத்துடனும் இடம்பெற்றது. ஆனால், அலீ (றழி) அவர்களது தெரிவு அவற்றிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டது. உண்மையில் அன்றைய சமூகத்தில் அலீ (றழி) அவர்களே மிகப் பொருத்தமானவர் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்திருக்க முடியாது. ஆயினும், அவ்வேளை கலீபாத் தெரிவுக்காகப் புத்திஜீவிகள் ஒன்று கூடவோ, ஆலோசனைகள் மேற்கொள்ளவோ பொருத்தமான சூழ்நிலை இருக்கவில்லை. காரணம், வெளியிலிருந்து அத்துமீறிப் பிரவேசித்து கலீபாவைக் கொன்றுவிட்டு இறுமாப்புக் கொண்டிருந்த காடையர்கள் கும்பலே ஆயுத முனையில் தலைநகரைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இந்நிலையில் இரண்டு முக்கிய பணிகள் அனைவர் முன்னிலையிலும் அவசியமாகக் காணப்பட்டது.

1. இஸ்லாமியக் கிலாபத்தைத் பாதுகாத்தல்.
2. முஸ்லிம் உலகை இயல்பு நிலைக்குக்கொண்டு வருதல்.

இவையிரண்டும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்தனவாகும். இது இவ்விதமிருக்க உஸ்மான் (றழி) அவர்களின் கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதன் பின்னரே கலீபாத்தெரிவு இடம்பெற வேண்டுமென ஒரு சாராரும், எப்பாடுபட்டாவது ஒரு கலீபாவைத் தெரிவு செய்துவிட வேண்டும். இல்லையேல் பிரச்சினை புதியவடிவம் பெற்று தமது தலைகளை உருட்டிவிடலாமென்ற பதட்டத்துடன் கொலைஞர்களுமாக முரண்பட்ட இலக்குகளைக் கொண்ட இரு பிரிவினரின் மத்தியிலேயே அலீ(றழி) அவர்கள் பதவியேற்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அலீ, தல்ஹா, ஸுபைர், அப்துல்லாஹ் இப்னு உமர், ஸ.்.திப்னு அபீவக்காஸ் (றழி) போன்ற முன்னணி ஸஹாபாக்களிடம் யாராவது ஒருவர் கிலாபத் பொறுப்பை ஏற்க வேண்டுமென தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எவருமே அதற்கு முன்வராது ஒதுங்கிக் கொண்டேயிருந்தனர். அலீ (றழி) அவர்கள் தூரச்சென்று ஒரு தோட்டத்தினுள் மறைந்து கொண்டார்கள். இருப்பினும் தேடியலைந்து அவரைக்கண்டு பிடித்த குழப்பக்காரர்கள் பதவியேற்காவிடில் கண்ணிற் படும் மதீனா வாசிகள் அனைவரையும் வாளுக்கிரையாக்குவோம் என எச்சரித்தனர்.

செய்வதறியாது திகைத்த அலீ (றழி) அவர்கள், கலீபாவைத் தெரிவு செய்ய நீங்கள் அருகதையற்றவர்கள். சமூக அந்தஸ்துடைய முக்கிய ஸஹாபாக்கள் பலர் உள்ளனர். அவர்கள் உடன்பாடு தெரிவித்தாலே நான் பொறுப்பேற்பேன் எனக்கூறினார்கள்.

குழப்பக்காரர்களும் சளைத்து விடாது முக்கியமானவர்களை பலவந்தமாக ஒன்று கூட்டினர். அதனடிப்படையில் கலீபாத் தெரிவு இடம்பெற்றது.

அடுத்தகட்டமாக கலீபாவைத் தனிமையில் சந்தித்த தல்ஹா, ஸுபைர் (றழி) போன்றோர் உடனடியாக குழப்பக்காரர்களைத் தண்டிக்குமாறு நிர்ப்பந்தித்தனர். நிலைமையை உணர்த்தி அதற்கான தருணம்

இதுவல்ல, சற்று அவகாசம் தரவேண்டும் என கலீபா கேட்டுக் கொண்டும் மேற்கூறப்பட்டவர்கள் போன்ற சில ஸஹாபாக்கள் தமது கருத்திற் பிடிவாதமாகவே காணப்பட்டனர். வெறுப்படைந்த கலீபா பொறுமைகாக்க முடியாவிட்டால் நீங்களே அதனைச் செய்து முடியுங்கள் என்ற போதுதான் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டனர். ஏனெனில், அன்றைய தலை நகர் ஒழுங்குபடுத்தப்பட்ட எந்தப் படையணியுமின்றி பலமிக்க கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கத்திற்கே உட்பட்டிருந்தது. இந்நிலையை மாற்றியமைக்க நிர்ப்பந்தமாக சில காலம் காத்திருக்க வேண்டியிருந்தது.

இதற்கிடையில் பொறுமையிழந்த தல்ஹா, ஸுபைர் (றழி) போன்ற சில ஸஹாபாக்கள் கலீபாவின் அனுமதியோடு உம்றா செய்யும் நோக்கில் மக்கா சென்றனர். அங்கு ஆஇஷா (றழி) அவர்களைச் சந்தித்துப் பேசிய போது அதிர்ச்சியும் ஆக்ரோஷமும் அவர்களை ஆட்கொண்டது. அதற்குப் பக்கபலமாக யெமென், பஸ்றா போன்ற சில மாகாண கவர்னர்களின் பிரசன்னமும் அமைந்திருந்தது. அங்கு கலீபாவைக் கொன்றவர்களைக் கொல்ல வேண்டும் என்ற தொனி மட்டுமே உரக்க ஒலித்ததே தவிர சமகால நிலைமையை ஆழமாக நோக்கும் பக்குவம் இழக்கப்பட்டிருந்தது. இறுதியாக கொலைகாரர்களைத் தண்டித்து சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஆளணிதிரட்டுவதற்காக பஸ்றா நோக்கிப்புறப்பட முடிவு செய்தனர்.

அன்று அங்கு அணிதிரண்ட சுமார் 1000 க்கு மேற்பட்டவர்கள் கலீபாவுக்கு உதவியாக நேரே மதீனா நோக்கிச் சென்றிருக்கலாம். அது கலீபாவின் கரங்களைப் பலப்படுத்துவதோடு கலகக்காரர் களுக்கும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும். குறைந்தபட்சம் அவர்கள் தமது நகர்வுக்கு முன்னர் நோக்கத்தை கலீபாவுக்குத் தெரியப்படுத்தி யிருக்கலாம். ஆனால் அதுவும் அங்கு நடைபெறவில்லை. அத்துடன் துரதிஷ்டவசமாக இருசாராருக்குமிடையிலான தூரம் செல்வாக்குச் செலுத்தியதால் விரிசல்கள் மேலும் விஸ்வரூபம் பெற்றன.

புதிதாகப் பதவியேற்ற கலீபா நிர்வாகத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மாகாண கவர்னர்களின் பக்கம் தமது கவனத்தைச் செலுத்தினார். அதில் உஸ்மான்(றழி) அவர்கள் காலத்து கவர்னர்கள் சிலரை அங்கீகரித்தும் இன்னும் சிலரை மாற்றுவதற்கும் திட்டமிட்டார். அதில் முஆவியா(றழி) போன்றோரைப் பதவி

நீக்குவதில் உறுதியாயிருந்தார். ஹஸன், முகீறா(றழி) போன்ற சில ஸஹாபாக்கள் இவ்விடயத்தில் சற்று நெகிழ்ச்சியை கடைப்பிடிக்குமாறு ஆலோசனை கூறியும் கலீபா அவ்விடயத்திற் பிடிவாதமாயிருந்தார்.

காரணம், முஆவியா தாமே உஸ்மான்(றழி) அவர்களின் நெருங்கிய உறவினர், அவருக்காகப் பழி தீர்க்கும் பொறுப்பும் தன்னையே சாரும். எனவே கொலையாளிகளைக் கைதுசெய்து தம்மிடம் ஒப்படைத்த பின்பே கலீபாவுக்கு பைஅத் செய்வேன் என அடம் பிடித்துக் கொண்டிருந்தார்.அவரது இப்போக்கு இஸ்லாமிய கிலாபத்தின் எதிர்காலத்தை சாவாலுக்குள்ளாக்கும் எனக்கருதிய கலீபா அதற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தயாரானார்.

கலீபா உஸ்மான் (றழி) கொல்லப்பட்டதற்குப் பழிதீர்க்க வேண்டும் என்பதில் கலீபா அலீ (றழி) உறுதியாகவே இருந்தார். ஆனால், அன்றைய சூழ்நிலையில் கிளர்ச்சிக்காரர்களின் பின்னணியில் பெரும் தொகையினர் காணப்பட்டமையாலும், நிர்வாகம் ஸ்திரமற்ற நிலையிலி ருந்தமையாலும், அப்போது அதனுள் மூக்கை நுழைப்பது புத்தி சாதுரியமில்லை, சிறிது காலம் பொறுத்திருந்தால், அமைதியான சூழ் நிலை ஏற் படும் போது அவர்களாகவே பிரிந் து பலவீனமடைவார்கள். அதனிடையில் இஸ்லாமியப் படையும் பலம் பெற்றுவிடும். அவ்வேளை அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற் கொள்வது சுலபமாகுமென கலீபா கருதினார்.

அதேவேளை முஆவியாவின் நடவடிக்கைகள் கொலையாளிகள் விடயத்தைப் பார்க்கிலும் ஆபத்தானது. இஸ்லாமிய உலகை இரண்டாகப் பிளவுபடுத்திவிடக் கூடியது. எனவே, முதலில் அதனை ஒழித்துக் கட்டவேண்டுமென்பதற்காக ஷாம் நோக்கிப்படை நகர்த்தத் தயாரானார்.

சட்ட ரீதியான கலீபா என்ற வகையில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் கலீபாவின் சிந்தனையும் முடிவும் இஸ்லாமிய அரசியல் வழிகாட்டலுக்கு முரணற்றது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

முஅவியா (றழி) முதலில் கலீபாவுக்குக்கட்டுப்பட்டு பைஅத் செய்து அவர் கேட்கும் அவகாசம் கொடுத்திருக்கலாம், அதற்கடுத்து வேறு வழியில் சிந்தித்திருக்கலாம், அதைவிடுத்து தெரிவு செய்யப்பட்ட

கலீபா இருக்கத்தக்க கொலையாளிகளைத் தம்மிடம் ஒப்படைக்கக் கோரியது நியாயமற்றதாகும். அதேவேளை கலீபா அலீ (றழி) அவர்கள் சற்றுத் தாமதித்துப் படை நகர்வை மேற்கொண்டிருக்கவும் முடியும், ஏனெனில், அனைத்து நிகழ்வுகளுக்குமிடையிலான கால இடைவெளி மிகக் குறுகியதாகும். எவ்வாறாயினும் இறைவனது முடிவில் தலையிடாமலும், அவ்விருவருமே ஸஹாபிகள் என்ற வகையில் அவர்களை விமர்சிப்பதை முழுமையாகத் தவிர்ந்து கொள்வதுமே எமது கடமையாகும்.

## ஜமல் யுத்தமும் அதன் பின்னணிகளும்:

மேற்குறிப்பிடப்பட்டது போன்று கிளர்ச்சிக்காரர்களுக்கெதிராய்ப் பலம் திரட்டும் நோக்கில் அன்னை ஆஇஷா, தல்ஹா, ஸுபைர் (றழி) அணியினர் பஸ்றா நோக்கியும், முஸ்லிம் உலகை பிளவிலிருந்து தடுக்கும் நோக்கில் அலீ (றழி) அவர்களது அணி ஷாம் நோக்கியும் முறையே மக்காவிலிருந்தும் மதீனாவிலிருந்தும் புறப்பட்டன. ஆனால் இவ்விரு அணிகளும் பரஸ்பரம் ஒன்றையொன்று அறிந்திருக்கவில்லை.

பஸறா நோக்கிச் சென்ற அணியின் நகர்வை இடைவழியிலேயே அறிந்து கொண்ட கலீபா தனது திசையை மாற்றி அவ்வணியைப் பின் தொடர்ந்தார். நகருக்கு வெளியில் முகாமிட்ட இரு அணிகளும் பரஸ்பரம் தூதுவர்கள் மூலம் தத்தமது குறிக்கோள்களைத் தெரிவித்துக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டனர்.

அதனடிப்படையில் நோக்கங்கள் தெளிவானதும் இரு தரப்பினரும் சமாதானக் களிப்பில் நிம்மதிப்பெருமூச்சு விட்டனர். அதன் பின்னர், அலீ(றழி) அவர்கள் ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதில் ஒற்றுமையின் அவசியம் பற்றி வலியுறுத்திய பின்னர், நாளை நான் புறப்படவிருக்கிறேன். அப்போது உஸ்மானின் கொலையுடன் தொடர்புடைய எவருமே என்னுடன் வரக்கூடாது எனக் கட்டளையிட்டார்.

இந்நிகழ்விலிருந்து அலீ(றழி) கொலைக் கும்பலை அங்கீகரித்திருக்கவில்லை. அவர்கள் மீது வெறுப்புடனேயே இருந்து வந்துள்ளார்கள். ஆனால், உடனடியாக எத்தகைய நடவடிக்கையும்

மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இருந்திருக்கவில்லை. இங்கு இரு தரப்பும் சமாதானத்தில் உடன்பட்டு பெரும் சக்தி அவர்களுக்கு கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்ட மறுகணமே கொலையாளிகளுக்கெதிராய் நடவடிக்கை மேற்கொள்ள முனைந்துள்ளார். இவ்வாறான நடவடிக்கையை மதீனாவில் அவர் மேற்கொண்டிருந்தால் சிலவேளைகளில் கொலைஞர்களின் அத்துமீறல்களுக்கு அலீ (றழி) அவர்களும் ஏனைய மதீனாவாசிகளும் கூட இரையாகியிருக்கலாம், இதனைப் பின்வரும் நிகழ்வு வலுப்படுத்துவதை அவதானிக்கலாம்.

அலீ(றழி) அவர்கள் பதவியேற்ற தினமே தல்ஹா, ஸுபைர் (றழி) அவர்களுடன் இன்னும் சில ஸஹாபாக்களும் கலீபாவிடம் சென்று கொலைஞர்களுக்குத் தண்டனை வழங்குமாறு கோரினர். அப்போது கலீபா, அவர்களை நோக்கி என்னருமைச் சகோதரர்களே, எனக்கும் அது தெரியாமலில்லை. ஆனால், இப்போது என்னால் அதனை எவ்வாறு செய்ய முடியும்? நம்மால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர்களே எம்மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். மறுபுறம் அடிமைகள், நாட்டுப்புற அறபிகளெல்லாம் அவர்களோடு சேர்ந்து நிற்கிறார்கள். இந்நிலையில் எம்மால் ஏதாவது செய்யமுடியுமென நினைக்கிறீர்களா? எனக்கேட்டதும் இல்லை எனப் பதிலளித்தனர். அப்போது கலீபா, அல்லாஹ்வின் மீது ஆணையாக நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்களோ அதுவே எனது கருத்தும்கூட. நிச்சயமாக இதற்குப்பழி தீர்க்கவே வேண்டும். ஆனால், நிலைமை சாதகமாகும் வரை சற்றுப் பொறுமையைக் கடைப்பிடியுங்கள் என வேண்டிக்கொண்டார்கள்.

(ஆதாரம் :அல் காமில் பித்தாரீக்)

எனவே, ஆஇஷா (றழி) அணியினர் இஸ்லாமிய அரசுக்கு ஆதரவு திரட்டும் நோக்கிலேயே புறப்பட்டுள்ளனர் எனக்கருத முடியும், ஏனெனில் அவர்களது இலக்கு அலீ (றழி) அவர்களுக்கெதிராகக் குழப்பமேற்படுத்தலெனின், பலம்பெற்றிருந்த அமீர் முஆவியாவுடன் இணைந்து கொள்ள ஷாம் நோக்கிச் சென்றிருப்பர்.

கலீபாவின் உரையினைக் கேட்டு அதிர்ச்சியுற்ற நயவஞ்சகர்கள் தல்ஹா, ஸுபைர் போன்றவர்களின் மனோநிலையை ஏற்கனவே அறிந்திருந்தோம். ஆனால் அலீயும் எம்மைக் கொல்லவிருக்கிறார்

என்பதை இப்போதுதான் அறிந்து கொண்டோம் என்றவாறு பித்துப்பிடித்தவர்கள் போன்று அலைந்தமை, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள சதித்திட்டம் தீட்டியமையும் இரு அணியினரதும் அவதானங்களுக்கு உட்படாமலேயே இருந்துள்ளது. நள்ளிரவில் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நயவஞ்சகர்கள் தமது தலைவர்களான இப்னு ஸப.்., அஷ்த்தர் போன்றவர்களின் தலைமையில் ஒன்றுகூடி மந்திராலோசனை நடாத்தினர். அதில் அவர்கள் பொழுது விடிந்ததும் இரு சாராரும் ஒன்றிணைவர், அடுத்தகட்டம் அவர்களது வாள்கள் நமது கழுத்துக் களையே பதம்பார்க்கும். எனவே, அதற்கு முன் நாம் தப்பிக்கும் வழியைத்தேட வேண்டுமெனும் அடிப்படையில் பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இறுதியாக தூக்கத்தில் இரு தரப்பினரையும் குழப்பிவிடும் முடிவுக்கு வந்தனர். அதன்படி இரு அணிகளாகப்பிரிந்த சதிகாரர்கள் இரு தரப்பினரின் முகாம்களுக்குள்ளும் நுழைந்து நடு நிசியில் தாக்குதலை ஆரம்பித்தனர். அலீ(றழி) அவர்களின் தரப்பினர் ஆஇஷா(றழி) அவர்களது அணியைக் குற்றம் சாட்டியும்,அவ்வணியினர் அலீ (றழி) அவர்களது தரப்பைக் குற்றம் சுமத்தியும் பரஸ்பரம் தாக்குதலைத் தொடர்ந்தனர். மிகநீண்ட நேரம் தொடர்ந்த தாக்குதலில் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் ஷஹீதாக்கப்பட்டனர்.

### ஜமல் யுத்தம் தொடஉபில் புனையப்பட்டவையும் அதற்கான தெளிவுரைகளும்:

ஜமல் யுத்தத்தின் பின்னணி கலீபா உஸ்மான் (றழி) அவர்களின் கொலைஞர்களைப் பழிதீர்ப்பதை மையமாகக் கொண்டதல்ல. மாறாக, அது அன்னை ஆஇஷாவுக்கும் அலீ (றழி) அவர்களுக்குமிடையிற் காணப்பட்ட நீண்ட காலப் பகைமையின் விளைவே என்பது போன்று சித்தரிக்கும் பாங்கினைப் பின்வரும் விடயங்களில் அவதானிக்கலாம் ஆயினும், அதில் எவ்வித உண்மையுமில்லை என்பதைப் பின்னர் அவதானிக்கலாம்.

1. அன்னை ஆஇஷா றழி) அவர்கள் ஹஜ் கடமையை முடித்துவிட்டு மதீனா நோக்கிப் புறப்பட்டபோது, இடைவழியில் அவரது உறவினருள் ஒருவரான உபைதிப்னு அபீஸலாமா என்பவர் சந்தித்தார். அவரிடம், என்ன செய்தி கொண்டு வருகிறீர்? என அன்னை கேட்டபோது, அவர் மக்களெல்லோரும் அலீ (றழி அவர்களுக்கு பைஅத் செய்துள்ளனர் எனக் கூறியதும், அவருக்கு பைஅத் செய்யப்பட்டு விட்டதால் வானம் இடிந்து பூமியில் விழுந்து விடாதா! எனக் கைகளைக் காட்டிக் கூறிவிட்டு உடனே மக்கா திரும்பி விட்டார்கள்.

2. ஆஇஷா(றழி) அவர்கள் மீது படுதூறு சொல்லப்பட்ட செய்தி கேட்டு நபியவர்கள் துக்கம் தாளாது வேதனையடைந்ததைப் பார்த்து அலீ (றழி) அவர்கள் நபிக்கு ஆறுதல் கூறுவதற்காக நபியே! ஆஇஷாவை விட்டு விட்டால் இன்னும் எத்தனையோ பெண்கள் இருக்கின்றனர். இதற்கேன் கவலைப்படுகிறீர்கள்? எனக் கேட்டார்கள். அதனைக் கேள்வியுற்ற கணத்திலிருந்து ஆஇஷா (றழி) அவர்கள் அலீ (றழி) அவர்கள் மீது தீராத கோபம் கொண்டிருந்தார்கள்.

### தெளிவுரை

மேற்கூறப்பட்ட இரு அறிவிப்புக்களும் இவை போன்றவைகளும் வரலாற்றில் கலக்கப்பட்டுள்ள அபத்தங்களாகும் என்பதைப் பின்வரும் நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு நிரூபிக்க முடியும்.

1. அஹ்னப் இப்னு கைஸ் என்பவர் ஒரு முறை மதீனாவுக்கு வந்தார். அப்போது கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் முற்றுகையிடப்பட்டிருந்தார்கள். உடனே அன்னை ஆஇஷா, தல்ஹா, ஸுபைர் (றழி) ஆகியவர்களைச் சந்தித்து கலீபா இந்நிலையில் கொல்லப்பட்டு விட்டால் நான் யாருக்கு பைஅத் செய்யவேண்டும் எனக் கேட்டபோது அவர்களனைவருமே ஒரே குரலில் அலீ அவர்களுக்கு பைஅத் செய்யுமாறு கூறினர். அவ்வாறே அவர் கலீபா கொல்லப்பட்டபோது அலீ(றழி) அவர்களுக்கு பைஅத் செய்தார். பின்னர் அலீ(றழி) தரப்பினரும் அடுத்த தரப்பினரும் பஸ்றா நகருக்கு வெளியில் முகாமிட்டிருந்த போது இவர் தனது ஆதரவாளர்களுடன் நேரே வந்து கலீபாவுடன்

இணைந்து கொண்டார். அவரிடம் கூட சமாதானத்திற்காக உழைக்குமாறே கலீபா அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

(ஆதாரம்: முஸன்னப் இப்னு அபீஷைபா)

1. அன்னை ஆஇஷா றழி) அவர்கள் ஹஜ் கடமையை முடித்துவிட்டு மதீனா நோக்கிப் புறப்பட்டபோது, இடைவழியில் அவரது உறவினருள் ஒருவரான உபைதிப்னு அபீஸலாமா என்பவர் சந்தித்தார். அவரிடம், என்ன செய்தி கொண்டு வருகிறீர்? என அன்னை கேட்டபோது, அவர் மக்களெல்லோரும் அலீ (றழி அவர்களுக்கு பைஅத் செய்துள்ளனர் எனக் கூறியதும், அவருக்கு பைஅத் செய்யப்பட்டு விட்டதால் வானம் இடிந்து பூமியில் விழுந்து விடாதா! எனக் கைகளைக் காட்டிக் கூறிவிட்டு உடனே மக்கா திரும்பி விட்டார்கள்.
2. ஜமல் யுத்தம் உக்கிரமடைந்து முஸ்லிம்களின் தலைகள் உருண்டு கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ஆஇஷா(றழி) அவர்கள், உஸ்மான் (றழி) அவர்களைக் கொன்றவர்களுக்கு சாபமிட்டுப் பிரார்த்திக்க அவரைச் சூழவிருந்தவர்களும் உரத்தகுரலிற் பிரார்த்தித்தனர். இதனை அவதானித்த அலீ (றழி) என்ன சப்தம் என வினவியபோது அவர்களைச் சூழ்ந்திருந்தவர்கள் விபரத்தைக்கூற, அவர்களும் சேர்ந்து யாஅல்லாஹ் உஸ்மானைக் கொன்றவர்களைச் சபிப்பாயாக! எனப் பிரார்த்தித்தார்கள்.

(ஆதாரம் : முஸன்னப் இப்னு அபீஷைபா)

இதிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாகப்புரிந்து கொள்ளலாம். அதாவது,கலீபாப் பதவிக்கு அலீ (றழி) அவர்களின் தகுதியில், அல்லது அவர்கள் தெரிவுசெய்யப்பட்ட விதத்தில் ஸஹாபாக்கள் மத்தியில் எவ்வித முரண்பாடும் இருக்கவில்லை. ஆகவே,முரண்பாடு காணப்பட்டதெல்லாம் கொலையாளிகள் தண்டிக்கப்படுவது எப்போது என்ற விடயத்திலேயாகும். எனவே, இங்கு மனிதனின் பலவீனமும், ஷைத்தானின் ஊடுருவல்களும், சந்தர்ப்ப சூழ்நிலைகளுமே செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்றால் அது மிகையல்ல.

## கவலை தோய்ந்த நிகழ்வினைத் தொடர்ந்து...

உண்மை மறைக்கப்பட்ட நிலையில் தங்களை மறந்து மிகக் கடுமையாகச் சண்டை செய்து பல நூறு இன்னுயிர்கள் பிரிக்கப்பட்ட பின்னணியில் அலீ (றழி) அவர்கள் பக்கம் வெற்றி சாய்ந்தது. அதனை அடுத்து உடனடியாக அவர்கள் செய்த பிரகடனங்களும் மேற்கொண்ட நடவடிக்கைகளும், அவ்வனர்த்தம் எதிர்பாராத ஒரு நிகழ்வே தவிர இரு அணியினரும் ஒருவரையொருவர் எதிரியாகவோ, துரோகியாகவோ கருதவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

### அவையாவன:

1. ஆஇஷா (றழி) அவர்களின் தரப்பினர் பின்வாங்கியபோது உடனடியாக அலீ றழி) அவர்கள் தமது அணியினருக்கு ஒரு கட்டளை பிறப்பித்தார்கள். அதில், பின்வாங்கிச் செல்லும் யாரையும் பின்தொடரக்கூடாது, காயமடைந்த எவரையும் தாக்கக்கூடாது, யாருடைய வீடுகளுக்குள்ளும் நுழையக்கூடாது என்றும் கட்டளை பிறப்பித்ததோடு, அன்னையவர்களின் கூடாரத்தை யுத்தகளத்திலிருந்து பாதுகாப்பாகக் கொண்டு சென்று அதனைச் சீர்செய்யுமாறு அவர்களின் சகோதரர், அம்மார் (றழி) ஆகிய இருவரையும் பணித்தார்கள்.

   பின்னர் அலீ(றழி) அவர்கள் ஆஇஷா(றழி) அவர்கள் தங்கியிருந்தஇடத்திற்கு வந்து அவர்களுக்கு ஸலாம் கூறி நலம் விசாரித்ததோடு அவர்களுக்குப் பாவமன்னிப்பும் வேண்டினார்கள். அதற்குப் பதிலாக அன்னையவர்களும் அலீ (றழி) அவர்களுக்குப் பிரார்த்தித்தார்கள். அதனைத் தொடர்ந்து பல முக்கியஸ்தர்கள் வந்து அன்னையவர்களுக்கு ஸலாம் கூறினர்.

2. அலீ(றழி) அவர்களே இரு தரப்பிலிருந்தும் கொல்லப்பட்டவர்களுக்காகத் தொழுகை நடாத்தினார்கள்.

3. ஆஇஷா(றழி) அவர்கள் தரப்பினரிடமிருந்து கிடைத்த யுத்த தளபாடங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருட்களையும் பஸ்றாவின் பள்ளிவாசலில் வைக்குமாறும் அடையாளங்கண்டவர்கள் அவரவர் பொருட்களை எடுத்துச் செல்லுமாறும் அறிவித்தல் கொடுத்தார்கள்.

3. இந்நிகழ்வுகளின் பின் மீண்டும் அலீ (றழி) அவர்கள் அன்னை ஆஇஷா (றழி) அவர்கள் இருக்குமிடம் வந்து அனுமதி கோரிய பின்னர் அவர்களுடன் பேசினார்கள். அவ்வேளை, அன்னையவர்கள் இரு தரப்பிலும் கொல்லப்பட்டவர்களை விசாரித்து அவர்களனை வருக்கும் றஹ்மத் வேண்டிப் பிரார்த்தித்தார்கள். அப்போது ஒருவர் வந்து வெளியில் இருவர் ஆஇஷா (றழி) அவர்களைத் தகாதவாறு திட்டுகிறார்கள் எனத் தெரிவித்தபோது கலீபா அவ்விருவருக்கும் கசையடி கொடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

4. சில நாட்களின் பின்னர் ஆஇஷா(றழி) அவர்கள் மதீனா செல்லத் தயாரானார்கள். அப்போது அலீ (றழி) அவர்கள் அவருக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து, அவரது சகோதரரையும் கூடச்செல்லுமாறு பணித்து, அவரது தரப்பில் திரும்பிச் செல்ல விரும்பியவர்கள் செல்லலாம் என அனுமதியும் வழங்கினார்கள். அவர்கள் புறப்பட்ட தினம் அலீ(றழி) அவர்களும் ஏனையவர்களும் அங்கு சமுகமளித்து உம்முல் மு. ஃ.மினீனை வழியனுப்பி வைத்தனர். அப்போது ஆஇஷா(றழி) அவர்கள் அனைவருக்கும் பிரியாவிடை கூறிப் பிரார்த்தித்ததோடு அனைவரையும் விழித்து நாம் ஒருவரையொருவர் குறைபட்டுக் கொள்ளக்கூடாது. எனக்கும் அலீக்கு மிடையில் எவ்விதக் குழப்பமும் இருந்ததில்லை, அதுமட்டுமல்லாது பந்த உறவுமிருக்கிறது எனக் கூறிவிட்டு, என்னைப் பொறுத்தவரை அவர் மிக நல்லவர்களுள் ஒருவர் எனக் குறிப்பிட்டார்கள்.

அலீ (றழி) அவர்களும் அதனை ஆமோதித்து அன்னையவர்களைச் சுட்டிக்காட்டி இவர்கள் உங்கள் நபியவர்களின் ஈருலக மனைவி எனக் குறிப்பிட்டுவிட்டுத்தானும் அவர்களுடன் சில மைல்த்தூரம் நடந்து சென்று வழியனுப்பிவிட்டுத் திரும்பினார்கள். (ஆதாரம்: அத்-தபரீ)
உண்மை இவ்விதமிருக்க அலீ(றழி) அவர்கள் சார்பாக ஆஇஷா(றழி) தரப்பினரைத் திட்டுவதும், இவர்கள் சார்பாக அலீ(றழி) தரப்பினரைத் திட்டுவதும் பாவமானதும் குழப்பவாதிகளின் செயலுமேயாகும்.

## ஸிப்பீன் மோதலும் அதன் பின்னணிகளும்:

ஜமல் யுத்தத்தின் பின்னர் கூபா, பஸ்றாவைச் சேர்ந்த அனைவரும் கலீபாவுக்கு பைஅத் செய்தனர். ஆனால், ஷாம் தேசத்தவர்கள் அமீர் முஆவியா (றழி) அவர்கள் தலைமையில் கலீபாவுக்கெதிரான தமது கொள்கையிற் பிடிவாதமாயிருந்தனர். கலீபா அலீ (றழி) அவர்கள் பல தடவைகள் நிலைமையை உணர்த்தி அவர்களுக்குக் கடிதமெழுதியும் அவர்கள் அதற்கு செவிமடுக்கவில்லை. இறுதியாக, முஆவியாவுடன் நெருக்கமானவரான ஜரீர் இப்னு அப்துல்லாஹ் என்பவரின் வேண்டு கோளுக்கிணங்க அலீ(றழி) அவர்கள் முஆவியா (றழி) அவர்களையும் அவர்களோடுள்ளவர்களையும் தனக்குக் கட்டுப்படுமாறும் அதன் பின்னணியில் இஸ்லாமிய உலகை ஒருமைப்படுத்திவிட்டு கலீபா தனது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி குற்றவாளிகளை இலகுவாகத் தண்டிக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டிக் கடிதமெழுதி ஜரீரின் கைகளிலேயே கொடுத்தனுப்பினார்கள்.

கடிதத்தைப் பெற்ற முஆவியா தனது சபையைக்கூட்டி ஆலோசனை செய்தபோது அவர்கள் முதலில் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். இல்லையேல் எம்மிடம் ஒப்படைத்த பின்னரே பைஅத் செய்வதென அழுத்தமாகக் கூறிவிட்டனர். தூதுவர் திரும்பியதும் செய்தியை அறிந்த கலீபா, “மு∴மின்களில் இரு குழுவினர் தங்களுக்குள் சச்சரவுப்பட்டுக் கொண்டால், இரு தரப்பினருக்கு மிடையில் சமாதானம் செய்துவையுங்கள் அவர்களில் ஒரு பிரிவினர் மற்றைய பிரிவினர் மீது அத்துமீறி செயல்பட ஆரம்பித்தால், அப்பிரிவினர் அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பும் வரை போராடுங்கள்..” (அல்-ஹுஜராத்-9). என்ற அல்-குர்ஆன் வசனத்தின் கட்டளைக்கமைய படையெடுப்பினை மேற்கொண்டார்கள்.
யுத்தகளத்தில் சந்திக்கு முன்னர் சுமுகமான தீர்வொன்றினை ஏற்படுத்திக் கொள்ள கலீபா பலமுறை முயன்றும் அமீர் முஆவியாவும் அவருடனிருந்தவர்களும் தத்தமது பிரத்தியேக அபிலாஷைகளை உஸ்மான்(றழி) அவர்களின் படுகொலைப் பின்னணியில் நிறைவேற்றிக் கொள்ள ஆர்வம் கொண்டிருந்தமையால் தமது நிலைப்பாட்டினை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டனர். எனவே நிர்ப்பந்தமாக சண்டைக்குத் தயாரானார் கலீபா. இரு அணிகளும் ஸிப்பீன் எனுமிடத்தில் பலமான போரில் ஈடுபட்டன. இறுதியில்

கலீபாவின் தரப்பு வெற்றிபெறும் நிலை தோன்றவும் முஆவியாவின் அணியினர் தமது ஈட்டிகளின் முனைகளில் அல்குர்ஆனை உயர்த்திப்பிடித்து அதன் தீர்ப்புக்குக் கட்டுப்படு வோமென வேண்டி சண்டையை நிறுத்தக்கோரினர்.

இவ்யுத்தத்தில் இரு தரப்பினரும் தத்தமது பக்கமே நியாயமுள்ளதாகக் கருதிய போதிலும், இஸ்லாமிய ஷரீஆவின் கோட்பாட்டுக்கமைய கலீபாவின் பக்கமே நியாயமிருந்தது. முஆவியா (றழி) அவர்களும் அவரது அணியினரும் எல்லை மீறியோராகவே கருதப்படுவர். இருப்பினும் இருதரப்பினரும் மூ.்.மின்கள் என்பதில் சந்தேகமில்லை. இதனைத் தெளிவுபடுத்தும் பல ஆதாரங்கள் உள்ளன அவற்றைப் பின்வருமாறு அவதானிக்கலாம்:-

1. அல்லாஹ் தனது திருமறையில்,

   "மு.்.மின்களில் இரு தரப்பினர் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால் அவ்விரு தரப்பினருக்குமிடையில் சமாதானம் செய்ய முயலுங்கள். அதில் ஒன்று மற்றையதன் மீது எல்லைமீறி நடந்துகொள்ளுமானால், அது அல்லாஹ்வின் கட்டளைக்குக் கட்டுப்படும் வரை அதனோடு போர் புரியுங்கள்". எனக் கூறுகின்றான்.

   (ஸூறதுல் ஹுஜ்றாத்:)

2. அப்துல்லாஹ் இப்ன் அம்றிப்னில் ஆஸ் (றழி) அறிவிக்கிறார்கள், "ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் அம்மாரிப்னு யாஸிர்(றழி) அவர்களைப் பார்த்து உம்மை வரம்பு மீறிய ஒரு கூட்டத்தினர் கொல்வார்கள்" எனக் கூறினார்கள்.

   (முஸ்னத் அஹ்மத்)

   அம்மார் (றழி) ஸிப்பீன் யுத்தத்தில் முஆவியா (றழி) தரப்பினரால் கொல்லப்பட்டார்கள் என்பது வரலாற்று உண்மையாகும்.

   இந்த ஹதீஸ் முஆவியா (றழி) தரப்பினர் வரம்புமீறியோர் என்பதை உறுதிசெய்வதோடு, மேலுள்ள அல்- குர்ஆன் வசனத்தின் மூலம் அவர்களும் மூ.்.மின்களே என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

3. ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் மிம்பரில் இருந்து கொண்டிருக்கும் போது அவர்களது பேரரான ஹஸன் (றழி) அவர்களும் (சிறுவர்) கூட இருந்தார்கள். அப்போது நபியவர்கள் மக்களை விழித்து அவர்களது பேரரை சுட்டிக்காட்டி, எனது இம்மகன் பிற்காலத்தில் ஒரு தலைவராயிருப்பார். அவர் மூலமாக அல்லாஹ் மு.:.மின்களில் பிளவுபட்ட மிகப் பெரும் இரு பிரிவினரை ஐக்கியப்படுத்துவான் எனக் கூறினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி)

இந்நிகழ்வு ஹஸன் (றழி) அவர்கள் தனது தந்தையாகிய கலீபா அலீ (றழி) அவர்கள் கவாரிஜ்களால் படுகொலை செய்யப்பட்டபோது, கூபாவாசிகளால் கலீபாவாக பைஅத் செய்யப்பட்டு சுமார் ஆறு மாதங்க ளுக்குள் முஆவியா(றழி) இஸ்லாமிய உலகின் முழு அதிகாரத்தையும் தமதாக்கிக்கொள்ளும் நோக்கில் படையெடுப்பினை மேற் கொண்டார். பதவியின் பின்னணியில் முஸ்லிம்களின் இரத்தம் ஓட்டப்படுவதை வெறுத்த ஹஸன்(றழி) அவர்கள் தமது பதவியை முஆவியாவுக்காக விட்டுக்கொடுத்து இரு அணிகளும் ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைய வழிவகுத்தார்கள். மாபெரும் பிரச்சினைக்குத் தீர்வாயமைந்த இந்த தூர நோக்கும், பரோபகாரத்தையுமே நபியவர்கள் முன்னறிவிப்புச் செய்திருந்தார்கள்.

மேற்கூறப்பட்ட நிகழ்வுகளை சற்று உன்னிப்பாக அவதானிக்கும் போது, இரு பிரிவினரது பிளவுகளும் அரசியலோடு தொடர்புபட்டதே தவிர மார்க்கத்தில் வழிகேடர்களாகவோ அல்லது சிலர் விமர்சிப்பது போன்று காபிர்களாகவோ, நரகவாதிகளாகவோ கொள்ள முடியாது. இரு பிரிவினரும் மு.:.மின்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அதேநேரம் முஆவியா (றழி) அவர்களதும், அவரது ஆதரவாளர்களது நிலைப்பாடும், கோரிக்கையும் தவறானதும், இஸ்லாமிய கிலாபத் கோட்பாட்டுக்கு முரணானது என்பதும் உண்மையாகும். இருப்பினும் ஸஹாபாக்கள் என்ற வகையில், அவர்களை திட்டித் திரியவோ, குறைகூறவோ, விமர்சிக்கவோ எமக்கு உரிமையில்லை. அனைவரது இறுதி முடிவுகளும் அல்லாஹ்வின் கரங்களிலேயே தங்கியுள்ளது.

## நடுவர் நியமனமும் அதனையொட்டிய கற்பனைகளும்:

மேலே சுட்டிக்காட்டப்பட்டது போல் அலீ, முஆவியா (றழி) ஆகிய இருவரது அணியினரும் மோதிக் கொண்டு பலத்த இழப்புக்களுக்கு உள்ளான பின்னர் அல்குர்ஆனின் தீர்ப்புக்கு கட்டுப்படுவோமென்ற அமீர் முஆவியாவின் அணியினரின் வேண்டுகோளையடுத்து சண்டை நிறுத்தப்பட்டது. அதனடிப்படையில் இருதரப்பினரும் தத்தமது அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு நடுவர்களைத் தெரிவுசெய்தனர். அலீ (றழி) சார்பாக அபூமூஸா அல் அஷ்அரீ (றழி) என்பவரும் முஆவியா சார்பாக அம்றுப்னுல் ஆஸ் (றழி) ஆகிய இருவருமே அந்நடுவர் களாகும்.

இவ்விருவரதும் தகைமைகள், அவர்கள் மேற்கொண்ட கலந்துரை யாடல்கள், எடுக்கப்பட்ட தீர்மானங்களின் உண்மைகள் ஒரு புறமிருக்க வரலாற்றில் சில புல்லுருவிகளால் திட்டமிட்டுப் புகுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களும், தரக்குறைவான மதிப்பீடுகளுமே இன்று மக்கள் மத்தியில் உலாவந்த வண்ணமுள்ளன.

எனவே, சில்லறைகளின் சிந்தனைகள் தூபமிட்ட, முரண்பட்ட தகவல் களைப் பட்டியலிட்டு அதன் பின்னர் உண்மை வரலாற்றுடன் ஒப்பீடு செய்வோம்.

## குற்றச்சாட்டுக்கள்:

1. அபூ மூஸா அல்-அஷ்அரீ (றழி) ஒரு மந்த புத்திக்காரர், ஏமாற்றப் படக்கூடிய ஒரு மடந்தை என்பதால், அம்றுப்னுல் ஆஸிடம் தோல்வி கண்டுள்ளார். இதனால் அங்கீகரிக்கப்பட்ட கலீபா, பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

2. அம்றுப்னுல் ஆஸ் ஒரு தந்திரி தனது குள்ள சிந்தனையால் அபூமூஸாவை ஏமாற்றி தன் கட்சிக்காரரரான முஆவியாவை கலீபாவாக பிரகடனம் செய்துவிட்டார். என்ற அபத்தம் வரலாற்றுப் பக்கங்களில் அதிகம் காணப்படுகின்றன.

## நடுவர்கள் இருவர் பற்றியும்:

அபூ மூஸா (றழி) சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவது போன்று குறைத்து மதிப்பிடப்படக்கூடியவரல்லர். அதற்கு நேர்மாறாக தகுதி வாய்ந்த ஒருவர் என்பதைப் பின்வருமாறு நிரூபிக்க முடியும்.

1. நபி (ஸல்) அவர்களே, தமது காலத்தில் அவரை யெமென் தேசத்துக்கு மார்க்க சட்ட விளக்கமளிப்பவராக நியமனம் செய்துள்ளார்கள். பின்னர் அபூபக்ர் (றழி) அவர்கள் காலத்தில் யெமெனுக்கு கவர்னராக நியமிக்கப்பட்டார்.
2. உமர் (றழி) காலத்தில் நீதிச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டார்.
3. உஸ்மான் (றழி) அவர்கள் காலத்தில் கூபாவின் கவர்னராகப் பணியாற்றியுள்ளார்.
4. கலீபா உமர் (றழி) அவர்கள் ஹிஜ்ரி கலண்டர் (நாளேட்டை) தயாரிக்க மூலகாரணியாய் அமைந்தவரும் அபூமூஸா(றழி) அவர்களே.

இதுபோன்று இன்னும் பல சிறப்பம்சங்களும் தகைமைகளும் கொண்ட அபூ மூஸா(றழி) அவர்களை எவ்வாறு தரக்குறைவாக மதிப்பிட முடியும்?

அம்றுப்னுல் ஆஸ் (றழி) அவர்கள் வரலாற்றில் சிலரால் வர்ணிக்கப்படுவது போன்று ஏமாற்றும் குணம் படைத்தவரல்லர் என்பதைப் பின்வருமாறு நிரூபிக்க முடியும்.

(1). இவர் பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது அவர் சிறந்த முஸ்லிம்களிலொருவர். மேலும், அவர்களில் அதிகம் நம்பிக்கைக்குரிய வருமாகும் எனவும், இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அவர் குறைஷிகளின் நல்லவர்களில் ஒருவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். அத்துடன் நபி(ஸல்) அவர்கள் அவரது வீரத்திற்காகவும், சிறந்த ஆலோசனை களுக்காகவும் அவரைக் கூடுதலாக நேசித்தார்கள்.

என்பன போன்ற தகவல்களை கலாநிதி அல்பேர்ட் ஜே பட்லர் கூடத் தனது நூலிற் குறிப்பிடுகிறார்.

(2). எகிப்தைக் கைப்பற்றுவதற்காக படை நடாத்திச் சென்றிருந்த அம்று (றழி) அவர்களைச் சந்திக்க வந்திருந்த முகவ்கிஸ் மன்னனின் தூதுவர்கள் முஸ்லிம்களின் தலைவரை வர்ணிக்கும் போது, "அவர்களது தலைவர் ஏனையவர்களைப் போன்று ஒருவராகவே எவ்வித வித்தியாசமுமின்றி நடந்து கொள்கிறார்" என வியந்து கூறினர். அவர் யாருமல்லர் அம்றுப்னுல் ஆஸ் (றழி) அவர்களே.

(3). நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அபூபக்ர், உமர், அபூஉபைதா (றழி) போன்ற தலைசிறந்த ஸஹாபாக்களடங்கிய படைக்கு அம்று (றழி) அவர்கள் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(4). அபூபக்ர் (றழி) அவர்கள் தமது ஆட்சியில் மிக முக்கியமான பல பொறுப்புக்களில் இவரை நியமித்துள்ளதோடு இவரிடமிருந்து திறமையானதும் செம்மையானதுமான சேவைகளையும் பெற்றுள்ளார்கள்.

எனவே, இவ்வாறு சிறந்த ஸஹாபியான இவர் அற்ப உலோகாயத விடயத்திற்காக ஒரு மோசடி, ஏமாற்றுக்காரராக தன்னைமாற்றிக் கொள்ள வேண்டிய தேவை ஒருபோதும் இருந்திருக்காது. அத்துடன் வரலாற்றில் சிலர் திரித்துக் கூறுவது போன்ற தரக்கேடு இவ்விரு ஸஹாபிகளிடமும் இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இனி நடுவர்களின் தீர்ப்புப் பற்றிக் கூறப்பட்டவைகளும் அவற்றின் யதார்த்த நிலை பற்றியும் நோக்குவோம்:

நடுவர்கள் இருவரும் ஒன்றுகூடி அலீ, முஆவியா (றழி) ஆகிய இருவரையும் பதவி நீக்கம் செய்வது என முடிவு செய்தனர். அதில் அபூமூஸா அல் அஷ்அரீ (றழி) முந்திக்கொண்டு நான் அலீயைப் பதவி நீக்குகிறேன் எனக் கூறினார். உடனே அம்றுப்னுல் ஆஸ் நான் முஆவியாவைப் பதவிலமர்த்துகிறேன் எனக் கூறினார். இதனைக் கேட்டதும் அதிர்ச்சியுற்ற அபூமூஸா திட்டியவாறு அவ்விடத்திலிருந்து வெளியேறினார் என வரலாற்றில் சிலரால் பதியப்பட்டுள்ளது.

## தெளிவுரை

மேற்கூறப்பட்ட குறிப்பை அலசும்போது பின்வரும் தெளிவுகளைக் காணலாம்.

1. நடுவர்களிருவரும் அலீ, முஆவியா (றழி) இருவரையும் பதவி நீக்கினரென்றால், முஆவியாவும் அன்று கலீபாவாக பைஅத் செய்யப் பட்டிருந்தாரா? என்ற வினா எழுகிறது. அதேவேளை முஆவியாவும் தன்னை கலீபாவாகப் பிரகடனம் செய்திருக்கவுமில்லை. அவர்கள் கொலையாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற கோஷம் தவிர்ந்த வேறெதனையும் அப்போது முன்வைத்திருக்கவில்லை.

2. அம்றிப்னுல் ஆஸ் முஆவியாவுக்கு அதிகாரம் வழங்கினாரென்றிருந்தால் முன்பிருந்த நிலையில் மாற்றமேற்பட்டிருக்க வேண்டும், ஆனால், அவ்வாறு ஏதுவும் நடைபெறவில்லை. ஏனெனில் யுத்தத்திற்கு முன்னர் கலீபாவின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளெல்லாம் யுத்தத்தின் பின்னரும் அவரது நிர்வாகத்தின் கீழேயே தொடர்ந்தது. அதேபோல் முஆவியா தான் கவர்னராகவிருந்த பகுதிகளிற் தொடர்ந்தும் கவர்னராகவே பணியாற்றினார்.

3. அம்றிப்னுல் ஆஸ் முஆவியாவை கலீபாவாகப் பிரகடனம் செய்தார் என்ற வாதம் உண்மையென்றிருந்தால், ஹிஜ்ரி 37ம் வருடம் தொடக்கம் ஹஸன் (றழி) அவர்கள் சமாதான ஒப்பந்தம் செய்து முஆவியாவை கலீபாவாகப் பிரகடனம் செய்த ஹிஜ்ரி 41ம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் எப்போதாவது முஆவியா தன்னை கலீபாவாகப் பிரகடனம் செய்தோ அல்லது கலீபா என்று குறிப்பிட்ட நிகழ்வோ வரலாற்றிற்பதியப்பட்டிருக்க வேண்டும்.

4. முஅவியா (றழி) அவர்கள் கலீபாவாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அலீ (றழி) அவர்கள் பதவியிறக்கப்பட்டிருந்தால், சட்டபூர்வமான கலீபாவாக மாறும் முஆவியா அலீயையும் அவரது அணியினரையும் அவரது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வந்திருக்கவேண்டும், அதற்காகப்பல படையெடுப்புக்கள் தொடர்ந்த வண்ணமிருந்திருக்கும், ஆனால் அலீ (றழி) அவர்கள் தரப்பில்

உஸ்மான் (றழி) அவர்களின் கொலையுடன் தொடர்பு பட்டவர்கள் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே ஆங்காங்கே சில மோதல்கள் இடம்பெற்றன. இதற்கான அடிப்படை இடையிலேற்பட்ட பகைமையுணர்வேயாகும்.

மேலும், இமாம் தாறகுத்னீ (றஹ்) அவர்கள் ஹுஸைனிப்னு முன்திர் என்பவருடாக அறிவிக்கும் ஒரு செய்தியில், அம்றுப்னுல் ஆஸ் (றழி) அவர்கள் மற்ற நடுவருடன் இணைந்து உடன்பாடு கண்டபோது, ஹுஸைனிப்னு முன்திர் வந்து முஆவியாவுக்கருகில் தனது விரிப்பை விரித்து உட்கார்ந்து நடந்தவற்றை விபரித்தார். உடனே முஆவியா ஒருவரையனுப்பி அம்றிப்னுல் ஆஸ் என்னையும் அலீயையும் நீக்கிவிட்டு மூத்த ஸஹாபாக்களின் முடிவுக்கு விட்டுள்ளதாக அறிந்தேன். அதன் உண்மையை அறிந்துவா என அனுப்பினார்.

அம்றுப்னுல் ஆஸைச் சந்தித்த அவர் நீரும் அபூமூஸாவும் நியமிக்கப்பட்ட விடயத்தில் என்ன செய்துள்ளீர்கள்? எனக் கேட்டபோது அவர் மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கூறிக்கொண்டிருக் கின்றனர். ஆனால், நான் அபூ மூஸாவிடம் உமது கருத்தென்ன வென்று கேட்டேன் அதற்கவர், நான் நபியவர்கள் வபாத்தாகும் போது யாரையெல்லாம் அங்கீகரித்திருந்தார்களோ அவர்களில் மீதமுள்ளோர் கைகளில் விட்டு விடலாமெனக் கருதுகிறேன் எனக்கூறினார். அவ்வாறெனின் எனதும், முஆவியாவினதும் நிலையென்ன? என வினவினேன். அதற்கு உங்களிருவரின் உதவியும் கோரப்பட்டால் நீங்கள் அதற்குத் தகுதியானவர்களே, அவ்வாறன்றி விடப்பட்டாலும் அது இறை தீர்ப்பாகும் என அபூமூஸா (றழி) குறிப்பிட்டார். என்றுகூறி, இதனைத்தான் முஆவியா அவ்வாறு புரிந்திருக்கிறார் என அம்றுப்னுல் ஆஸ்(றழி) தெரிவித்தார். நான் வந்து முஆவியாவிடம் செய்தி உண்மைதான் எனக் கூறியபோது முஆவியா இச் செய்தியை அபுல் அ.்.வர் என்ற தனது மூத்த தளபதிகளிலொருவருக்கு அறிவித்தார். இதனால் உந்தப்பட்ட அபுல் அ.்.வர் எங்கே அந்த அல்லாஹ்வின் விரோதி, எங்கே அந்தக் கயவன் என்று உரத்துக் கூறிக்கொண்டு தன்குதிரை மீதேறி அம்றுப்னுல் ஆஸைத் தேடி விரைந்தார். அதன் பின்னர்

முஆவியாவும் அம்று (றழி) இருவரும் சந்தித்தவேளை அவர்களுக்கிடையில் சூடான சில கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற்றன. என அவ்வறிவிப்பில் காணப்படுகிறது.
(ஆதாரம் : தாரகுத்னீ)

## நடுவர்கள் நியமனத்தை அடுத்த நிகழ்வுகள் சுருக்கமாக:-

மேற்கூறப்பட்டது போல் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் இரு தரப்பினராலும் பிரேரிக்கப்பட்ட இரு நடுவர்களும் கூடி ஓர் ஒப்பந்தத்தை எழுதினார்கள்.

அதில்:- பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம். இது இறாக்கையும் அதனைச் சார்ந்தவர்களது நிர்வாகியான அலீ இப்னு அபீதாலிபுக்கும், ஷாம் அதனுடன் தொடர்புள்ள முஸ்லிம்களுக்குப் பிரதிநிதியான முஆவியா வுக்குமிடையிலான ஓர் ஒப்பந்தமாகும். நாங்கள் அல்லாஹ்வினதும் அவனது வேதத்தினதும் தீர்ப்புக்குக் கட்டுப்படுகிறோம். அவன் உயிர்ப்பித்தவற்றை உயிர்ப்பிக்கவும் அவன் மரிக்கச் செய்தவற்றை மரிப்பிக்கவும் செய்வோம். இவ்விரு நடுவர்களும் அல்லாஹ்வுடைய வேதத்திலிருந்து வழங்கும் தீர்ப்பை, அல்லது அதில் இல்லாதவிடத்து நபி (ஸல்) அவர்களது ஸுன்னாவிலிருந்து பெறும் நேர்மையான தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறோம்" என எழுதப்பட்டது.பின்னர், நடுவர்கள் இருவரும் அலீ, முஆவியா (றழி) சார்ந்த இரு படைப்பிரிவினரிட மிருந்தும் அவர்கள் இருவரதும், இருவரது குடும்பத்தினதும் பாதுகாப்பு, அவ்விரு நடுவர்களும் எட்டும் தீர்மானத்திற்கு முழு முஸ்லிம்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும், இவ்வொப்பந்தத்தை இரு தரப்பிலுமுள்ள அனைத்து முஸ்லிம்களும் மூ.்.மின்களும் ஏற்றுக் கொள்வதெனவும் உறுதிமொழி பெற்றுக்கொண்டனர்.

அதன் பின்னர் அவ்வருட ரமழான் மாதம் வரையிலும் தீர்ப்பை ஒத்திவைத்ததோடு அவசியமேற்படின் நடுவர்கள் இருவரதும் உடன் பாட்டுடன் மேலும் பிற்படுத்தவும் முடியும் என்ற உடன்பாடும், ரமழானில் தவ்மதுல் ஜன்தல் எனுமிடத்தில் இரு நடுவர்களோடும் அலீ, முஆவியா ஆகியோரும் தத்தமது ஆதரவாளர்களில் 400 பேரும் சமுகளிப்பது, அதில் தீர்வு எட்டப்படவில்லையாயின் அடுத்த வருடம் "அத்றுஹ்" எனுமிடத்தில் மீண்டும் ஒன்றுகூடுவதெனத் தீர்மானிக்கப் பட்டது. இந்நிகழ்வு ஹிஜ்ரி37 ஸபர்13ம் நாள் இடம்பெற்றது. அப்போது

இரு தரப்பிலிருந்தும் பத்துப் பத்து முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (ஆதாரம் : அத்தபரீ)

ஒப்பந்தத்திற் குறிப்பிடப்பட்டது போல் ரமழான் மாதம் வந்ததும் இரு தரப்பிலிருந்தும் 400பேர் கொண்ட அணியினரை அலீ, முஆவியா (றழி) ஆகிய இருவரும் அனுப்பி வைத்தனர். அவர்களனைவரும் குறிப்பிட்ட இடத்தில் ஒன்றுகூடினர். இந்நிகழ்வில் அன்று வாழ்ந்த மிக முக்கிய ஸஹாபாக்கள், தாபியீன்களும் பங்கேற்றிருந்தனர்.

இரு நடுவர்களும் மிக நீண்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். ஆனாலும் ஒரு திருப்தியான தீர்வை அவர்களால் எட்ட முடியவில்லை.

இவ்வாறே காணப்பட்ட கொந்தளிப்பு நிலை ஹிஜ்ரி 40ம் வருடம் இமாம் ஹஸன்(றழி) அவர்களின் விட்டுக்கொடுப்பினால் முஸ்லிம் சமுதாயம் ஓரணியாகும் வரை தொடர்ந்தது.

எது எவ்வாறாயினும் ஸஹாபாக்களைப் பொறுத்தவரை முஸ்லிம் சமுதாயத்தில் உலக இறுதி வரை தோன்றும் அனைவரிலும் பார்க்க சிறந்தவர்கள் என்ற வகையிலும் அவர்களும் மனித வரையறைகளுக் குட்பட்டவர்களே என்பதனாலும் அவர்களது விடயத்தில் நிதானப் போக்கையே கடைப்பிடிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பயன் கருதி அதனைத் தெளிவுபடுத்தும் இஸ்லாமிய வழிகாட்டல்களில் ஒருசில இங்கு குறிப்பிடப்படுகின்றன.

### அவர்கள் பற்றி அல்குர்ஆன்:-

- உங்களில் மக்கா வெற்றிக்கு முன்னர் போராட்டங்களிற் கலந்து கொண்டவர்களுடனும், அல்லாஹ்வுடைய பாதையிற் தமது செல்வங்களைச் செலவு செய்தோருடனும், அதற்குப்பின் போராடிய, செலவு செய்தவர்கள் சமமாக முடியாது. ஏனெனில், முந்தியவர்கள் நற்கூலியால் கூடியவர்கள். ஆனால், அனைவருக்கும் அல்லாஹ் சுவனத்தை வாக்களித்துள்ளான்.

(சூறா : அல் ஹதீத் -10)

■ முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும் முந்தியவர்கள் (மக்கா வெற்றிக்கு முன்னர் இஸ்லாத்தை ஏற்றவர்கள்), அவர்களது நல்வழியைப் பின்பற்றிய ஏனையவர்களையும் அல்லாஹ் பொருந்திக்கொண்டான்.அவர்களும் அல்லாஹ்வைப் பொருந்திக் கொண்டனர். அவர்களுக்கு ஆறுகள் ஒலித்தோடும் அழகிய சுவர்க்கங்களை அல்லாஹ் ஏற்பாடு செய்து வைத்துள்ளான். அவர்கள் அதில் என்றென்றும் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள். அதுவே மாபெரும் வெற்றியாகும்.

(சூறா:தௌபா-100)

■ நபியே! உமக்குப் பக்கபலமாக - பாதுகாப்பளிக்க - அல்லாஹ்வும் உம்மைப் பின்பற்றிய மூ∴மின்களும் உள்ளனர். அவர்கள் உமக்குப் போதுமாகும்.

(சூறா: அல்-அன்பால்64)

## நபி (ஸல்) அவர்களது பொன்மொழிகளில்.....

1. அப்துல்லாஹ்(றழி) அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், எனது தோழர்கள் விடயத்தில் அல்லாஹ்வைப் பயப்படுங்கள். அவர்களைவிமர்சிக்க வேண்டாம். ஏனெனில், யார் அவர்களை நேசிக்கிறாரோ அவரை நான்நேசிக்கிறேன், அவர்களை வெறுப்போரை நானும் வெறுக்கிறேன், யார் அவர்களை நோவிக்கிறாரோ அவர் என்னை நோவித்தவராகிறார், யார் என்னை நோவிக்கிறாரோ அவர் அல்லாஹ்வை நோவித்தவராவார், யார் அல்லாஹ்வை நோவிக்கிறாரோ அல்லாஹ் அவை ரஇலகுவில் விட்டு விடுவதில்லை.

(ஆதாரம் : திர்மிதி, இப்னு ஹிப்பான்)

2. அபூ ஸஈத் அல் குத்ரீ (றழி) அவர்களூடாக அறிவிக்கப்படுகிறது: ஒருமுறை காலித் இப்னுல் வலீத், அப்துர் றஹ்மானிப்னு அவ்ப் (றழி) இருவருக்குமிடையில் ஒரு தகராறு ஏற்பட்டது. அதில் காலித், அப்துர் றஹ்மானை (றழி) ஏசிவிட்டார். உடனே நபி (ஸல்) அவர்கள், “எனது தோழர்களை ஏசவேண்டாம், அல்லாஹ்வின் மீது ஆணையாக நீங்கள் உஹத் மலையளவு தர்மம் செய்த போதிலும் என் தோழர்களின் ஓர் அள்ளு அல்லது

அதன் அரைவாசிக்கேனும் சமமாக முடியாது எனக் கூறினார்கள்.(புகாரி, முஸ்லிம், ஸுனன்)

“காலிதும், அப்துர்றஹ்மான் (றழி) இருவருமே ஸஹாபிகள். இருந்த போதிலும் அப்துர்றஹ்மான் (றழி) மக்கா வெற்றிக்கு முன்னரே தன்னை இஸ்லாத்தில் இணைத்து அதற்காகத் தன்னை அர்ப்பணித்த வர். காலித்(றழி) மக்கா வெற்றியின் பின்னர் இஸ்லாத்தில் இணைந்து பிரபலம் பெற்ற ஒரு தளபதி. இவர்களுக்கிடையிலேயே இவ்வாறு அந்தஸ்தில் வித்தியாசமென்றிருந்தால் இன்று அவர்களைத் தரக்குறைவாக விமர்சிப்பவர்களின் நிலையை எண்ணிக்கூடப் பார்க்க முடியுமா?

3. இப்னு உமர்(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எனது தோழர்களை ஏசுபவர்களை நீங்கள் கண்டால், உங்களின் கெட்ட செயலுக்கு அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் எனக் கூறுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: திர்மிதி)

4. இப்னு அப்பாஸ்(றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: யார் எனது ஸஹாபாக்களை ஏசுகிறாரோ அவர்மீது அல்லாஹ்வினதும் மலக்குகளதும் முழு மனித சமுதாயத்தினதும் சாபம் உண்டாகட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: அத்தபறானீ)

5. நபி (ஸல்) அவர்கள் : எனது உம்மத்துக்களில் அதி சிறந்தவர்கள் எனது காலத்தவர்கள் (ஸஹாபாக்கள்), அடுத்து அவர்கள் பின் வந்தவர்கள் (தாபிஈன்கள்), அதற்கடுத்து அவர்கள் பின்னால் வந்தவர்கள் (தாபிஉத் தாபிஈன்கள்) எனக் கூறினார்கள்.

(ஹதீஸ் முதவாதிர்)

இவைகளும், இவை தவிர்ந்த இன்னும் எத்தனையோ இடங்களில் (விரிவஞ்சி சுருக்கிக் கொள்ளப்பட்டுள்ளது) ஸஹாபாக்கள் தொடர்பாக அல்லாஹ்வும் அவனது தூதரும் சான்று பகர்ந்தும் புகழ்ந்துரைத்தும், அவர்களைக்குறை கூறுபவர்களை எச்சரித்தும், சாபமிட்டும் குறிப்பிடும் போது, சாதாரண மக்கள் மத்தியிற்கூட நல்லபிப்பிராயம் பெற முடியாத அற்பர்களும், எவ்வித அடிப்படை அறிவுமற்ற குறைமதியாளர்களும்,

தரக்குறைவானவர்களும் சுருங்கக்கூறின் இஸ்லாத்தினதும் முஸ்லிம்களதும் விரோதிகளான இவர்கள், மாமனிதர்களும் தியாகச் செம்மல்களுமான அந்த ஸஹாபாக்களைத் திட்டித்தீர்ப்பதும் குறை கூறுவதும் முற்றிலும் நியாயமற்ற செயலாகும்.

எனவே, நாம் இவ்வாறான விடயங்களை மிகக் கவனமாகக் கையாள்வதோடு முடிவை அல்லாஹ்விடம் சமர்ப்பணம் செய்து எம்மைக் காத்துக் கொள்வோமாக. ஏக வல்லோன் நம்மனைவருக்கும் நேர்வழி காட்டி அருள்புரியப் போதுமானவன்.

## துணை நின்றவை:-


1. القرآن الكريم
2. حيح البخاري, للإمام محمد بن إسماعيل البخاري, ط ١٣١١هـ , إستانبول.
3. صحيح مسلم , للإمام مسلم بن الحجاج القشيري النيسابوري, المكتبة الإسلامية ,ترکيا.
4. سنن الترمذي , للإمام أبي عيسى محمد بن سورة الترمذي, المكتبة الإسلامية ,ترکيا.
5. مسند الإمام أحمد, للإمام أحمد بن محمد بن حنبل, دار الفكر العربي, بيروت
6. تاريخ الأمم والملوك , للإمام محمد بن جرير الطبري ,
7. البداية والنهاية , للإمام محمد بن كثير,
8. تاريخ ابن خلدون, عبد الرحمن بن محمد بن خلدون الحضـــرمي المغربي, دار إحياء التراث العربي, ١٩٩٩م, بيروت لبنان
9. أباطيل يجب أن تمحى من التاريخ, الدكتور إبراهيم علي شعوط, الطبعة الســابعة,دار الشــروق, ١٩٨٩م, جدة– المملكة العربية السعودية.
10. ترتيب وتهذيب كتاب البداية والنهاية ١–٤ , الأستاذ والدكتور محمد بن صامل السلمي, دار الوطن للنشر, ١٩٩٧م, الرياض– المملكة العربية السعودية.
11. العواصـم من القواصـم في تحقيق مواقف صـحابة بعدوفاة النبي صـلى الله عليه وسـلم, للقاضـي أبي بكر بن العربي, المكتبة العصرية, ٢٠٠٥م , بيروت, لبنان.
12. رويات أبي مخنف في تاريخ الطبري, يحيى بن إبراهيم ,

13. الخلفاء الراشدون أعمال وأحداث, الدكتور أمين القضاة, دار الفرقان للنشر والتوزيع, ٢٠٠٠م , عمان.

14. الكامل في التاريخ , عز الدين أبو الحسن علي بن أبي الكرم الشيباني المعروف بابن الأثير, الطبعة الرابعة , دار الكتاب العربي, ٢٠٠٤, بيروت.

15. إتمام الوفاء في تاريخ الخلفاء, الخضري.

16. مروج الذهب ومعادن الجوهر , أبو الحسن علي بن الحسين المسعودي, الطبعة الأولى , ٢٠٠٢, دار إحياء التراث العربي, بيروت-لبنان.

17. الإمامة وسياسة , عبد الله بن مسلم المعروف بابن قتيبة الدينوري, دار المعرفة , بيروت.

18. الفتنة ووقعة الجمل, رواية سيف بن عمر الضبي, جمع وتصنيف أحمد راتب عرموش, الطبعة الرابعة , ١٩٨٢, دار النفائس , بيروت لبنان.

19. نظام الحكم في الإسلام , الدكتور طلال الرفاعي, مركز الرسالة , مكة المكرمة.

20. الدولة الإسلامية بين الواجب والممكن, الشيخ الدكتور جاسم بن محمد بن مهلهل الياسين, مؤسسة السماحة للطباعة والنشر والتوزيع.